# பெண்மணி

அக்டோபர்- 2005
ரூ.10/-



**குருப் பெயர்ச்சி பலன்கள்**

**ஆர்.மணிமாலா**

## பூவே... பெண் பூவே!

(முழுநாவல்)

# பூவே... பெண் பூவே!

ஆர். மணிமாலா



அடுத்த வகுப்பு ஆரம்பிப்பதற்கான பெல் அடிக்கப்பட்டது. வகுப்பறைகள் மறுபடி கட்டுக்கோப்பிற்கு ஆயத்தப்பட்டது. அது... ராயல் ஆக்ஸ்ஃபோர்ட் மெட்ரிகுலேஷன் பள்ளி!

ஐந்தாவது வரை அரசின் அங்கீகாரம் பெற்று பத்தாம் வகுப்பு வரை நடத்திக் கொண்டிருக்கும்... வியாபார நோக்கம் ஒன்று மட்டுமே குறிக்கோளாக கொண்டு செயல்படும் பள்ளி! அங்கு பிளஸ் டூ படித்தவர்கள், தபாலில் பட்டப்படிப்பு படித்துக் கொண்டிருப்பவர்களை தாராளமாக ஆசிரியைகளாக சேர்த்துக் கொள்வார்கள். இப்போது ஆசிரியைகளாக பணிபுரிபவர்களில் மூன்று பேர் மட்டுமே இளங்கலை பட்டதாரிகள்.

கரஸ்பாண்டன்ட் கொள்ளை கொள்ளையாய் சம்பாதித்தாலும், பணிபுரிபவர்களுக்கு சம்பளம் கிள்ளிதான் கொடுக்கப்பட்டது.

அங்கு தான் ஜோதியும் தமிழ் ஆசிரியையாக பணிபுரிந்து வந்தாள். பி.ஏ. பொருளாதாரம் முடித்தவள்.

எட்டாம் வகுப்பு அறைக்குள் நுழைந்தாள் ஜோதி.

மாணவ - மாணவிகள் கோரஸாக எழுந்து நின்று மரியாதை செலுத்தினார்கள்.

''உட்காருங்கள்!'' என்றவளுக்கு தலை வலித்தது. காலையிலேயே வேதநாயகி உபயத்தோடு ஆரம்பித்த தலைவலி... தொடர்ந்தது.

'காபி சாப்பிட்டால் தேவலை' என்ற ஆவலை அடக்கிக் கொண்டு புத்தகத்தை பிரித்தாள்.

''மிஸ்... இன்னைக்கு கட்டுரை டெஸ்ட் என்றீர்களே!'' நினைவுப்படுத்தினாள் ஜபீன்.

''ஓ... மறந்துட்டேன். எல்லோரும் தனித்தனியா உட்காருங்க...'' அவளே இடம் மாற்றி, இடைவெளி விட்டு அமர வைத்தாள்.

''என்னைக் கவர்ந்த தலைவர் தலைப்பில் அவரோட வாழ்நாள் சாதனைகளோடு இரண்டு பக்கத்திற்கு மிகாமல் உங்கள் சொந்த கருத்துக்களோடு எழுதுங்கள்.''

''மிஸ்... யாரைப் பற்றி வேண்டுமானாலும் எழுதலாமா?'' என்று கேட்டாள் சரித்ரா.

''எழுதலாம். இது உங்கள் எழுத்துத் திறமையை வெளிக் கொணரும் கட்டுரையாக இருப்பது அவசியம்!''

''எக்ஸ்க்யூஸ்மீ மேடம்!'' வாசலில் அட்டெண்டர் வேலு நின்றிருந்தார்.

''சொல்லுங்க வேலு!''

''பிரின்ஸி மேடம் உங்களை வரச் சொன்னாங்க!''

''போங்க... வந்துட்டேன்'' என்றவள் இவர்களிடம் திரும்பி, ''சத்தம் போடாம எழுதணும் சரியா?'' என்றபடி வெளியே வந்த ஜோதி... குத்துவிளக்கின் சுடர் போலிருந்தாள்.

அழகிய இளம்பெண்!

எந்த சாதுர்யமும், சாமர்த்தியமும் இல்லாத சாதாரண... மிக நல்லப் பெண். திருமணமானவள். கணவர் ராம்மோகனின் இனிஷியலை இரண்டு வருடத்திற்கு முன்பே, சட்ட, சாஸ்திரிய சம்பிரதாயங்களின் படி பெற்றுக் கொண்டவள்.

அவள் அகன்றதும் வகுப்பறை சலசலத்தது.

வர்ஷா தன் இருப்பிடம் விட்டு எழுந்து சரித்ரா அருகில் வந்தாள்.

''நீ யாரைப் பத்தி எழுதப்போகிறே சரித்ரா?''

''காம...'' என்று ஆரம்பித்தவளின் காலை சட்டென மிதித்து அடக்கினாள் ஜபீன்.

''நான் அஜீத்குமார் பத்தி எழுதப்போகிறேன்... நீ...?'' சிரிக்காமல் கேட்ட ஜபீனின் பேச்சைப் புரிந்துக் கொண்ட சரித்ரா... சிரிப்பை வெளிக்காட்டாமல் அவளும் பதிலளித்தாள்.

''நான் வழக்கம் போல விஜய் பத்திதான்!''

''ஹேய்... இவங்களைப் பத்தியெல்லாம் எழுதலாமா?'' ஆச்சர்யமாய் கேட்டாள் வர்ஷா.

''தலைவர்னா... இவங்களும்தானே? டிஸ்டர்ப் பண்ணாதே... நான் எழுதணும்!'' சீரியஸாய் முகத்தை வைத்துக் கொண்டு சரித்ரா எழுத...

சிந்தனையுடன் தன் இருப்பிடத்திற்கு வந்தாள் வர்ஷா.

'நாம யாரைப்பத்தி எழுதலாம்? எனக்கும் விஜய்யை பிடிக்கும்... ஆனா, சரித்ரா முந்திக்கிட்டா. ம்... நாம தனுஷைப் பத்தி எழுதினா என்ன?'

சில விநாடிகளில் அவள் மூளையும் சரியென தலையாட்ட எழுத ஆரம்பித்தாள்.

அவள் எழுதுவதை எட்டிப்பார்த்த தினேஷ், ''ஏய் வர்ஷா... என்ன இது... தனுஷைப் பத்தி எழுதறே?''

''ஜபீன், சரித்ராலாம் கூட அஜீத், விஜய் பத்திதான் எழுதறாங்க''

''அப்படியா?'' என்றவன் காந்தியடிகள் பற்றி பத்துவரிகள் எழுதியிருந்ததை அடித்து விட்டு, 'எனக்கு பிடித்த தலைவர் கேப்டன் விஜயகாந்த்' என்று எழுத ஆரம்பித்தான்.

சத்தம் வராமல் ஒருவரையொருவர் பார்த்து சிரித்துக் கொண்டனர் சரித்ராவும், ஜபீனும்.

பொறுப்பற்றவர்களால் வியாபார நோக்கத்துடன் நடத்தும் பள்ளிகளில் பயிலும் பெரும்பாலான மாணவ குருத்துகளின் திறமை இந்தளவிற்குதான் உள்ளன.

வர்ஷா சகமாணவர்களின் சிறு குறும்புத்தனங்களைக் கூட பெரிதுப்படுத்தி டீச்சரிடம் சொல்லி அடி வாங்கித் தருவாள். மேற்கூறப்பட்ட இருவரும் அவளால் அடிக்கடி பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதனால்தான் புத்திசாலித்தனமான இந்த அட்டாக்!

**ம**றுநாள்!

வகுப்பறைக்குள் நுழைந்த ஜோதியின் முகம் கோபத்தில் சிவந்திருந்தது. சாதாரணமாகவே அவளுக்கு கோபம் வராது. காயப்படுத்தினால், வருத்தப்பட்டு அமைதியாகி விடுவதோடு சரி.

''வர்ஷா... இங்கே வா!'' கட்டுரை நோட்டுகளை எடுத்து வைத்து அழைத்தாள்.

வந்தாள்.

''உனக்கு பிடிச்ச தலைவர்னு யாரைப் பத்தி எழுதியிருந்தே?''

''தனுஷ் மிஸ்!''

''அவர் தலைவரா? அவர் நடிச்ச முதல் படம், யார் ஜோடி, படம் எப்படி ஓடுச்சு? பிறகு பல படங்களில் நடித்து முன்னுக்கு வந்தது... ரஜினிகாந்தின் மருமகனானதுன்னு... அவரைப் பத்தி என்னைக்காவது நான் பாடம் நடத்தியிருக்கேனா?''

''மி...ஸ்!'' பயத்தில் உள்ளங்கை வியர்த்தது.

''கேட்டதுக்கு பதில்!''

''இ... இல்லை மிஸ்!''

''பிறகெப்படி அவரைப்பத்தி எழுதினே?''

''சரித்ரா கூட விஜய் பத்தி எழுதியிருக்கா மிஸ்!''

''ஐயோ... இல்லீங்க மிஸ்... நான் காமராஜர் பத்திதான் எழுதியிருந்தேன்!'' பதறினாள் சரித்ரா.

''கரெக்ஷன் பண்ணின எனக்குத் தெரியாதா? எவ்வளவு திமிர் இருக்கணும் உனக்கு?



நடிகரைப் பத்தி தெள்ளத் தெளிவா எழுதத் தெரியுது. பாடம் மனசுல பதியாது இல்லே? என்னைப் பத்தி பிரின்ஸியும், உன் பேரன்ட்ஸும் என்ன நினைப்பாங்க? டீச்சர் சரியில்லேன்னு தானே? சினிமா பைத்தியம் பிடிச்சு அலையறியா... தெளிய வைக்கிறேன் இரு... கையை நீட்டு...''

''மிஸ்... தெரியாம எழுதிட்டேன்... ஸாரி மிஸ்!''

''கையை நீட்டுன்னு சொல்றேனில்லே?'' காதைப் பிடித்து திருகியவள், பிரம்பால் அவள் கையை பழுக்க வைத்து விட்டாள்.

அடுத்த மண்டகப்படி நமக்குதான் என்றுணர்ந்த தினேஷ் கண்கள் நிறைய கண்ணீருடன் அவள் அழைப்பிற்காக காத்திருந்தான்.

**ஹே**ண்ட்பேகை மாட்டிக் கொண்டு வீட்டிற்கு புறப்பட்டாள் ஜோதி.

கேட்டை நெருங்கியவளை ''இந்தாம்மா கொஞ்சம் நில்லு!'' என்றது ஒரு பெண்ணின் குரல்.

வியப்புடன் திரும்பினாள்.

நாற்பது வயது மதிக்கத்தக்க பெண்மணியொருத்தி அவளை மேலும் கீழுமாய் முறைத்தபடி நின்றிருந்தாள்.

''என்னையா கூப்பிட்டீங்க?''

''ஆமாம்... உன்பேருதானே ஜோதி?''

''ஆமாம்!''

''உன் கிளாஸ்லதானே என் பொண்ணு வர்ஷா படிக்கிறா?''

அப்போதுதான் கவனித்தாள். சற்றுத்தள்ளி இன்னும் அழுகையை நிறுத்தாமல் வர்ஷா நின்றிருந்தாள்.

புரிந்தாலும் கேட்டாள்.

''என்னம்மா விஷயம்?''

''உனக்கு கல்யாணமாய்டுச்சில்ல?''

டீச்சரை மரியாதை குறைவின்றி பேசிய அந்தப் பெண்மணியின் நாகரீகம் உணர்ந்தவள் முகம் சுளித்தாள்.

''தேவையற்ற கேள்விகள் எதுக்கு?''

''அவசியமாகதான். உனக்கு குழந்தை குட்டிகள் இருக்கா?''

''......?!''

''இல்லேதானே? இருந்திருந்தா தெரிஞ்சிருக்கும் குழந்தையோட அருமை. கல்யாணமாகி அஞ்சு வருஷம் குழந்தையில்லாம தவமா தவமிருந்து பெத்தேன் என் பொண்ணை. நானே இது வரை 'சீ'ன்னு ஒரு வார்த்தை சொன்னது கிடையாது. ஆனா... நீ பிரம்பால வாங்கு வாங்குன்னு வாங்கியிருக்கே. விரல்ல போட்டிருந்த மோதிரம் கூட வளைஞ்சு போச்சு. நகம் பெயர்ந்து ரத்தம் கொட்டியிருக்கு. நீ டீச்சர்னா பெரிய இவளா? என்னமா அடிச்சிருக்கே? உன்னை சும்மா விடமாட்டேன். மேடத்துக்கிட்டேயே சொல்லி நியாயம் கேட்கிறேன்!''

''ஏம்மா புரியாம பேசறீங்க? வர்ஷா என்ன பண்ணினா தெரியுமா?''

''என்ன பண்ணிட்டா பெரிசா? தனுஷைப் பத்தி கட்டுரை எழுதறாள்னா... நீ சொல்லிக் கொடுக்கிற லட்சணம் அப்படி. எங்க வயித்தெரிச்சலை கொட்டிக்காதே. அப்புறம் மடியிலே போட்டு கொஞ்சறதுக்கு ஒரு குழந்தைக் கூட பிறக்காது உனக்கு.''

வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சியது அந்த வார்த்தை. துளிர்த்த உப்பு நீரை சிரமப்பட்டு உள்ளிழுத்துக் கொண்டாள்.

''**அ**தையே நினைச்சு எவ்வளவு நேரம் அழுதுக்கிட்டிருக்கப் போகிறே ஜோதி. லீவ் இட்! எந்திரி... முகம் கழுவு!'' கரிசனமாய் அவள் கன்னத்தில் வழிந்த நீரை துடைத்தான் ராம்மோகன்.

''மறக்க முடியலீங்க... அந்தம்மா பேசின ஒவ்வொரு வார்த்தையும்...'' மறுபடி அழ முற்பட்டாள்.

''அடடா... என்னடா இது குழந்தை மாதிரி. வேலைக்குப் போகாதேன்னு சொன்னாலும் கேட்க மாட்டேங்கறே! நீ சம்பாதிக்க அதிலே குடும்பம் நடத்தற நிலைமையிலா நான் வச்சிருக்கேன்? ஸ்கூலுக்குப் போனா குழந்தைகளோட முகத்தைப் பார்த்து சந்தோஷப்படுவேன்னு வற்புறுத்தி போனே? பேசாம ரிசைன் பண்ணிடேன் ஜோதி!''

''நா... நான் முகம் கழுவிட்டு வர்றேன்!'' நாசூக்காய் எழுந்துச் சென்றவளை பரிதாபமாய் பார்த்தான்.



**ஞா**யிற்றுக்கிழமை!

சமைக்கத் தேவையான அனைத்துப் பொருட்களையும், நறுக்கி தயாராக வைத்திருந்தாள் ஜோதி. சமையல் எரிவாயு மிச்சமாக,

ஜோதி எப்பவும் இப்படிதான் செய்வாள்.

காலிங்பெல் அழைக்க...

எட்டிப்பார்த்த வேதநாயகி, ஜோதியிடம் ''போய் கேட்டைத் திற,..'' என்றாள்.

ஜோதி நகர்ந்ததும், கிச்சனுக்குள் புகுந்துக் கொண்டாள் வேதநாயகி.

வந்திருந்தது வேதநாயகியின் தோழி கவுசல்யா.

அப்போதுதான் அவளைப் பார்ப்பது போல் ஆச்சர்யம் காட்டி வரவேற்றாள்.

''அட கவுசல்யா... வா... வா... வா! நல்லாருக்கியா?''

''ரொம்ப நல்லாருக்கேன். என்ன சமையல்ல பிஸியா இருக்கே போல... இன்னுமா கிச்சனோட மல்லுக்கட்டிக்கிட்டிருக்கே?''

''அதுக்கென்ன பண்றது கவுசல்யா... தலைவிதின்னு ஒண்ணு இருக்கில்லே?'' என்ற மாமியாரை ஆதங்கத்துடன் நிமிர்ந்து பார்த்தாள் ஜோதி.

இவள் இந்த வீட்டிற்கு வந்த இரண்டு வருடமாய் குடிக்கத் தண்ணீரைக் கூட ஜோதிதான் தர வேண்டும். பள்ளிக்குச் செல்லும் அவசரகதியிலும் டிபன், மதிய சாப்பாடு எல்லாவற்றையும் ஜோதிதான் சமைத்து வைத்து விட்டுச் செல்வாள்.

வேதநாயகிக்கு ஆரம்பத்திலிருந்தே ஜோதியைக் 'கண்டால் ஆகாது. நடுத்தரவர்க்கத்தை சேர்ந்த எல்லா தகுதிகளும் கொண்ட ஆண்மகனைப் பெற்று வைத்திருக்கும் பெரும்பான்மையான பெண்களுக்கு ஏற்படும் ஆசைதான் வேதாவுக்கும் இருந்தது. வசதியான இடத்தில் இருந்து மருமகள் வர வேண்டும் என்பதுதான். ஆனால், அவள் ஆசையில் மண்ணள்ளி போட்டு விட்டு வசதி, வாய்ப்பற்ற ஜோதியை காதலித்து கைப்பிடித்து விட்டான் ராம்மோகன். அந்த கோபம், கூடவே இன்னும் வயிற்றில் ஒரு புல், பூச்சிக்கூட முளைக்கவில்லையே என்கிற வெறுப்பு... தினமும் ஜோதியை நெருப்பாய் பொசுக்கிக் கொண்டிருக்கிறாள் வேதா.

ஜோதி ஒரு ஊமைக்கோட்டான், அப்பிராணி, மனசுப் பொங்கும், ஆனால் வார்த்தைகளாய் உருமாறி வராது. பயந்த சுபாவம்.

''பாரேன்... நிக்க வச்சிட்டேப் பேசறேன். உட்காரு கவுசல்யா. விசேஷம் போல...'' சிரித்தபடி கேட்டாள் அவள் கையிலிருந்த அழைப்பிதழ்களைப் பார்த்துவிட்டு.

''ஆமாம் வேதா... என் பையனுக்கு கல்யாணம். அதுக்கு ரெண்டு நாளைக்கு முன்னாடி என் பொண்ணுக்கு ஐஸ்வர்யா மகால்ல வளைகாப்பு. கண்டிப்பா குடும்பத்தோட வரணும். ஜோதி நீயும் கண்டிப்பா வரணும்... சரியா?''

''சரிம்மா!''

''நீ குடுத்து வச்சவ கவுசல்யா. கடவுள் உன் விஷயத்துல எப்பவும் குறை வச்சதுல்லே'' மருமகளை ஓரக்கண்ணால் பார்த்தபடி, மறுபடி இவளிடம் ''பொண்ணு சொந்தமா?'' என்றாள் வேதநாயகி.

''இல்லே அசல்தான். நல்ல குடும்பம்... பொண்ணும் பாந்தமாயிருந்தா... முடிச்சிட்டோம். நகை நட்டுன்னு நாங்க எதுவும் கேக்கலே... அவங்களாவே எண்பது பவுன் போடறோம், கார் தர்றோம்னாங்க.''

''நாம ஏன் கேட்கணும்? கேட்டா வரதட்சணை கேட்கறாங்கன்னு போலீஸ்ல கம்ளைண்ட் பண்ணுவாங்க. யாரு அனுபவிக்கப் போறா... அவங்கப் பொண்ணுதானே? ஹூம்... எல்லாத்துக்கும் கொடுப்பினை வேணும். என்ன இங்கேயே நின்னுக்கிட்டிருக்கே... வந்தவங்களுக்கு குடிக்க ஏதாவது கொடுப்போம்னு இருக்கா? இதைக்கூட நான்தான் சொல்லித்தரணுமா?''

''இதோ வந்துட்டேன்ம்மா...'' ஜோதி நகர...

''அதெல்லாம் எதுக்கு''

## மணியே மணிக்குயில்களே!



இங்கிருக்கும் நால்வரும் அமெரிக்க, இத்தாலி நாட்டு நடிகைகள். ஆனால் இவர்கள் அணிந்திருப்பது பவழ மற்றும் முத்து மணி மாலைகளே. தங்க நகை போய் பின்பு பிளாட்டினம் நகைகள் வந்து அதுவுமின்றி இப்போது மணிமாலைகளில் வந்து நிற்கிறது.

இதுபோல் நம் நாட்டிலும் பெண்கள் மணிமாலைகளுக்கு மாறினால் தங்கத்தின் விலை குறையுமல்லவா?

-வச்சலா,
பாரீஸ்.





''அட... சும்மாயிரு கவுசல்யா... இந்தச் சின்ன வேலையாவது செய்யட்டும்...''

சற்று நேரத்தில் காபியோடு வந்தவளின் காதில், ''மனசைத் தளர விடாதே வேதா... உனக்கு விதிச்சது இவ்வளவுதான்னு நினைச்சுக்க. உடம்பை கவனமாப் பார்த்துக்க... உன் உடம்பை நீதான் பார்த்துக்கணும்'' என்று கவுசல்யா கூறியது கேட்டது.

மாமியார் தன்னைப் பற்றி என்ன சொல்லியிருப்பார் என்று புரிந்தது. இது புதிதல்ல... வருகிற, போவோர்களிடமெல்லாம் அவளைப்பற்றி புலம்புவது வாடிக்கையான ஒன்றுதான்!

அனிச்சை மலர்போல் ஜோதியின் மனசு கூம்பிப் போனாலும் நம்பிக்கையுடன் சுதாரித்துக் சொல்வாள்.

என்றாவது அத்தையின் மனசு மாறாதா என்ன?'

**எ**ளிமையான அலங்காரத்திலும் அதிஅழகாய் இருந்தாள் ஜோதி. நூறு பேர் கூடியிருக்கும் இடத்திலும் தனியாய் தெரிவாள். அப்படியொரு தெய்வீக அழகு. கணவன், சென்ற பிறந்தநாளுக்கு வாங்கிக் கொடுத்த கிரேப் சில்க்கைதான் கட்டியிருந்தாள்.

கவுசல்யா குடும்பத்தோடு அழைத்திருந்தாலும், ராமுக்கு இதுபோன்ற நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்ள பிரியப்படமாட்டான். தவிர, அவன் ஆபீஸிலிருந்து வர இன்னும் தாமதமாகும்.

வேதநாயகி பட்டுப்புடவை அணிந்து தயாரானவள், ''ஏய் ஜோதி... இங்கே வா! புடவை மடிப்பை அழுத்தி விடு'' என்றவள் அப்போது தான் கவனித்தாள்.

தயாராகி நின்ற ஜோதியை.

''வெளியேப் போறியா என்ன? ராம் இன்னும் வரலே இல்லே?''

''நான் அவரோட போகலே அத்தே! உங்களோட தான்... வளைகாப்பு நிகழ்ச்சிக்கு வர்றேன்''

''என்னது... என்னோடவா?'' என்றாள் முகம் கோண.

''......!''

''கவுசல்யா உன் மனசு நோகக் கூடாதேன்னு நீயும் வரணும்னு சொன்னா வந்துடறதா? படிச்சவதானே, அறிவில்லே உனக்கு? உன்னை முன்னாடி உட்கார வச்சி... வாம்மா... வந்து வளையல் போடுன்னு கூப்பிடப் போறாங்களாக்கும். கல்யாணமாகி ரெண்டு வருஷம் ஓடிப்போயிடுச்சே... உன் மருமக எப்ப மாங்கா திங்கப் போறான்னு தனியாப் போனாலே தலைய உருட்டறாங்க. இந்த அழகிலே உன்னையும் கூட்டிட்டுப் போனேன்னா... அவ்வளவுதான்!''

''அ...த்...தே!''

''இதோ பார்... உன் புருஷன் கூட எங்க வேணும்னாலும் போய்க்க. ஆனா, என் கூட மட்டும் வந்துடாதே. ஆளைவிடு!'' என்றாள்.

அழுகை குமுறிக் கொண்டு வர... அறைக்குள் சென்று கட்டிலில் குப்புற விழுந்து அழுதாள்.

கட்டியிருந்த புடவையை சுழற்றி எறிந்தவள் வயிற்றிலேயே அடித்துக் கொண்டாள்.

'பாழாய் போன வயிறே... மனசை மட்டும் வேதனையில் கனக்க வைக்கிறாயே... ஒரு குழந்தையை சுமக்க வைக்க மட்டும் மனம் வரவில்லையா உனக்கு?'

அடிவயிற்றிலிருந்து வந்தது அழுகை.

**ரா**ம்மோகன் கட்டிலில் புரண்டான்!

முப்பது வயது கட்டிளங்காளை! சொந்தமாய் ரெடிமேட் ஷாப் வைத்திருக்கிறான். கடையில் நான்கு பேர் வேலை செய்கிறார்கள். நண்பர்களுடன் பார்ட்னர்ஷிப்பில் ரெஸ்டாரெண்ட் நடத்துகிறான். அதுவும் இப்போது தான் சூடுபிடிக்க ஆரம்பித்திருக்கிறது. தவிர, இன்னும் தனக்குத் தெரிந்த பிஸினலை எல்லாம் செய்துக் கொண்டிருக்கிறான். கார் வாங்குவது அவ

னது கனவுகளில் ஒன்று. அடுத்த வாரத்தில் அதுவும் நனவாகப் போகிறது.

கண்களை மூடி மல்லாந்திருந்தவனின் இதழ்கள் முறுவலித்தன. பழைய சம்பவம் ஒன்று நிழலாடியது.

திருமணமான புதிதில் தேனிலவிற்காக கொடைக்கானல் போனார்கள் ராம்மோகனும், ஜோதியும்.

சூரியக்கதிர்கள் ஊடுருவ வழியின்றி அடர்ந்திருந்த பைன் மரக்காட்டில், மோன சூழ்நிலையில், கரைபுரண்ட காதலுடன் ஒரு மரத்தடியில் சாய்ந்தமர்ந்திருந்தனர் இருவரும்.

''பத்தே மாசம்தான் உனக்கு டைம். அதுக்குள்ளே என்னை அப்பாவாக்கிடுவியா ஜோதி?''

''அப்படியென்ன அவசரம்? ஒரு வருஷம் லைஃபை ஜாலியா என்ஜாய் பண்ணலாமே?''

''ம்ஹூம்... எனக்கு உன் சாயல்ல ஒரு பிள்ளையை உடனடியாப் பெத்துக்குடுடி...''

''என்னது டி-யா?''

''பெத்துக்குடு டியர்னு சொல்ல வந்தேன்!''

''ஓக்கே... ஐ வில் ட்ரைடா...''

''என்னது டாவா? புருஷனை மரியாதையில்லாமப் பேசறியா?''

''அடடா... அவசரப்படறீங்களே... ஐ வில் ட்ரை டார்லிங்னு சொல்ல வந்தேன்!'' என்றாள் குறும்புடன் சிரிப்பை மென்றவளாய்.

''பதிலுக்கு பதிலா... பொட்டப் பிள்ளைக்கு இவ்வளவு திமிர் ஆகாதுடி. ஐ மீன்... ஆகாது டியர். ரூமுக்கு வா... உன்னை முழுக்கவே கடிச்சுத் திங்கப் போகிறேன்!'' காதில் கிசுகிசுத்தான்.

''நான் ரெடிடா... ஐ மீன் ரெடி டார்லிங்...''

''உன்னை...!'' மறைவான இடுப்பு பாகத்தில் நறுக்கென கிள்ளியவன்... அவள் கத்து முன்பே வாயைப் பொத்திக் கண்ணடித்தான்.

இனிமையான அந்த சம்பவத்தை நினைத்து சிரித்தவன், பக்கத்தில் படுத்திருந்த ஜோதியைப் பார்த்து ஆச்சர்யப்பட்டான்.

''அட... ஜோதிக்குட்டி... நீ எப்ப வந்தே? நான் பார்க்கவே இல்லையே'' என்றான்.

ஜன்னல் பக்கம் வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த ஜோதி இவன் பக்கம் திரும்பினாள்.

''நீங்க எதையோ யோசிச்சபடி கண்மூடி சிரிச்சிட்டிருந்தீங்களே... அப்பவே வந்துட்டேன்!''

''எதையோ யோசிச்சேனா? என் ஜோதிச் செல்லத்தைப் பத்திதான் யோசிச்சிட்டிருந்தேன். அந்த கொடைக்கானல் பைன்ஃபாரஸ்ட் இன்ஸிடன்ட்டை! அதுக்கப்புறம் ரூம்ல போய் உன்னை சிவக்க சிவக்க கடிச்சி எடுத்தேனே...!''

''ச்சீ...!'' அவளுக்கும் நினைவுக்கு வர முகம் சிவந்தது.

''மறுபடியும் நாம அதே மாதிரி கடிக்க... கடிக்க விளையாடுவோமா?'' மனைவியை இரு கைகளால் அள்ளி தன் நெஞ்சின் மேல் படர விட்டான்.

தாபத்தோடு விளையாட்டுக்குத் தயாராயிருந்த கணவனின் கண்களில் பரவசம் கண்டாள்.

ஆனால், ஜோதி... புன்னகைத்தாளேயொழிய அவள் மனம் முழுக்க வேதனையால் மரத்துப் போயிருந்தது.

சஞ்சல மனதுடன், ஈடுபாடில்லாமல் அந்த நல்ல ஆத்மாவிற்கு தன்னைத் தருவதில் உடன்பாடில்லை அவளுக்கு.

வலுவாய் தன்னைப் பற்றியிருந்த கரங்களை நாசூக்காய் விலக்கினாள்.

''என்னடா?''

''தலை ரொம்ப வலிக்குதுப்பா!'' என்றாள் பொய்யாய்.

சட்டென எழுந்த ராம்மோகன், தைலத்தை எடுத்து வந்தான். அவள் தலையை தன் மடியில் தூக்கி வைத்து தைலத்தை தேய்த்தான்.

''ஐய்யய்யோ... வேணாங்க... நானே தேய்ச்சுக்கறேன்''

''சும்மாயிருடி... ஐ... மீன்... சும்மாயிரு டியர்!'' என்றவன் இதமாய் தேய்த்தான்.

அந்த அன்பு மனசை வலிக்கச் செய்ய, கண் மூடினாள். காதோரம் நழுவி ஓடியது கண்ணீர்!




**ஜோ**தியின் நெற்றிப்பொட்டில் இதமாய் அழுத்தி அவளை உறங்க வைத்தான். சீரான மூச்சில் நெஞ்சு ஏறியிறங்க... குழந்தைத்தனம் முகத்தில் இன்னும் மிச்சமிருந்தது. பேன் காற்றில் சிணுங்கிக் கொண்டிருந்த சுருள் முடிகளை மெல்லக் கோதி விட்டான்.



கழுத்தில் ஒரு கையை முட்டுக் கொடுத்து படுத்த வாக்கில் தலையை மட்டும் உயர்த்தி... ஜோதியையே அலுக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

பார்க்க பார்க்க... அன்பும், ஆசையும் அதிகரித்தன.

அவளை காதலித்ததும் சரி, கல்யாணம் செய்துக் கொண்டதும் சரி... எல்லாம் கனவுப் போல் தோன்றியது.

ராம்மோகன் வேதநாயகிக்கு ஒரே மகன், ரொம்ப என்றில்லாவிட்டாலும் ஓரளவு வசதி. அவனுக்கு எந்த கெட்டப்பழக்கமும் இல்லை. பிஸினஸில் வருமானத்திற்கும் குறைவில்லை. இந்த தகுதிகள் போதாதா... அவனுக்கு பெண் தர.. போட்டி போட?

சொந்தத்திலேயும் அசல்லேயும் நிறைய ஜாதகங்கள் குவிந்தன. இயல்பாக நல்ல குணங்களைக் கொண்டவள்தான் வேதநாயகி. மகனுக்கு பெரிய இடங்களிலிருந்து வலிய வந்த வரன்கள் அவளை ஆசையின் நாயகியாக்கி விட்டது. இருப்பதிலேயே பணக்காரப் பெண்ணாய் தேடினாள். நான்கைந்து பங்களா, போர்டிகோவில் ஆறேழு கார்கள், அதை துடைத்துக் கொண்டிருக்க மூன்று டிரைவர்கள், புல்வெளியில் கம்பீரமாய் நடமாடிக் கொண்டிருக்கும் உயர்வகை ஜாதி நாய்கள் என சினிமாத்தனமாய் கனவு கண்டாள்.

ஆனால், ராம்மோகனின் கனவோ ஒரு பெண்ணைப் பற்றியதாய் இருந்தது.

வீட்டை விட்டு தன் ரெடிமேட் ஷாப்பிற்கு காலை எட்டுமணிக்கு பைக்கில் புறப்படுவான். குறிப்பிட்ட அந்த பஸ் ஸ்டான்டில் நின்றிருக்கும் அவளை தினசரி பார்ப்பான்.

மிக எளிமையாய், கஞ்சி மொட மொடக்கும் காட்டன் புடவையில் முகத்தில் வெகுளித்தனம் மிகுந்திருக்க... அந்த கண்கள் மட்டும் பளிச்சென்று... தூரத்திலிருந்து பார்த்தாலும் வரைந்த ஓவியம் போல் மின்னல் வெட்டும்.

சாதாரணமாகதான் கண்களில் விழுந்தாள். நாளடைவில் அவளுக்காகவே புறப்படுவது போல் தோன்ற, தன் இதயத்திலும் அவள் விழுந்திருப்பதுப் புரிந்தது. பல வண்ண ரோஜாக்கள் பூத்திருந்தாலும், ஒரே ஒரு வெள்ளை ரோஜா தனித்துத் தெரியுமே... அப்படி தனித்துத் தெரிந்தாள் ஜோதி.

ராம்மோகன் பெயருக்கேற்றாற் போல் ராமன்தான். அதற்காக பெண்களை நிமிர்ந்து கூட பார்க்க மாட்டான் என்றெல்லாம் சொல்ல வரவில்லை.

'அட' என்று எல்லோரையும் போல் அழகானப் பெண்களை நிமிர்ந்து பார்ப்பதுண்டு. ஆனால், இதுவரை யாரையும் காதலித்ததில்லை. அவர்கள் பின்னால் அலைந்ததில்லை. முதன் முதலாய் அவனுள் ஒருவித தவிப்பை ஏற்படுத்தியவள் அவள்தான்.

அம்மா தனக்காக தீவிரமாய் பெண் தேடிக் கொண்டிருக்கிறாள். அவள் தேர்ந்தெடுப்பதற்குள் முந்திக் கொள்ள வேண்டும் என்பதற்காக ஒருநாள் அவள் பின்னேயே அலைந்தான்.

அவள் ஏறி சென்ற பஸ் பின்னேயே பைக்கில் சென்றான். அவள் பள்ளியில் பணிபுரிவதுத் தெரிந்தது. மாலையில் பள்ளி விடும் நேரம் பார்த்து சென்று மறுபடி அவள் பஸ் பின்னேயே நூல் பிடித்தாற் போல் சென்று, வீட்டைக் கண்டுபிடித்தான். ஜோதியும் தன்னைப் பின் தொடர்ந்து வந்தவனை கவனிக்கத் தவறவில்லை.

மறுநாள் மாலை பள்ளி விட்டு வரும் போது, தயங்கித் தயங்கி பேசினான்.

முதல்நாள் பயந்து விரைந்து கடந்தாள் ஜோதி. அடுத்தநாள் பயம் விலகி முகம் பார்த்தாள். அந்த முகத்தில் எந்த போக்கிரித்தனமும் இல்லை என்பதை உணர்ந்தவள் பதிலளித்தாள். ஒரே வாரத்தில் நல்ல நட்பு அரும்பியது. அடுத்த வாரத்திலேயே காதல் மலர்ந்தது. அவள் வீட்டிற்கே சென்று பேசினான்.

சாதாரண நடுத்தர குடும்பம். அப்பா இல்லை. அம்மா மட்டுமே. உடன்பிறந்தவர்கள் இரண்டு அண்ணன், ஒரு அக்கா. ஜோதி கடைக்குட்டி. ஜோதி மட்டுமே போதும்... எந்த சீர் செனத்தியும் வேண்டாம் என்றான். ஜோதியின் அம்மா பார்வதி 'எப்படி இவளை கரைசேர்க்கப் போகிறோம்' என்று கவலைப்பட்டு கொண்டிருந்தவள், வலிய வந்த வரனை தெய்வமாய் பார்த்தாள். அவனைப் பற்றி விசாரிக்கக் கூட தோன்றவில்லை. 'சரி' என்று தலையாட்டி விட்டாள் பேச்சுக்கூட வராமல்.

வேதநாயகிதான் இடிந்துப்போனாள். மகனின் முடிவைப் பற்றி அறிந்து, அவள் கட்டிய கனவுக்கோட்டை நொறுங்கிப்போனது. ராம்மோகன் அம்மா மீது உயிரையே வைத்திருந்தான். அம்மாவைப் போல் ஒரு பெண்மணி தன் தாயாக வாய்த்தது தான் செய்த புண்ணியம் என்று பார்ப்போரிடமெல்லாம் சொல்லும் பிள்ளை.

மகன் எடுக்கும் எல்லா முடிவுக்கும் வேதநாயகி தலையாட்டுவாள். சத்தம் போட்டு பேசிக் கொண்டிருப்பாள். அவன் பைக் வரும் சப்தம் கேட்டதும் அமைதியாய் அடக்கமாகி விடுவாள். எந்த சந்தர்ப்பத்திலும் அவனிடம் தான் ஏற்படுத்

தியிருக்கும் இமேஜை ஸ்பாயில் பண்ணிக்க விரும்ப மாட்டாள். அவனும் அம்மாவை தன் முதன்மை தோழியாகவே நினைப்பான். எல்லா விஷயங்களையும் பகிர்ந்துக் கொள்வான்.

'அந்த பெண் வேண்டாம், அவளிடம் என்ன இருக்கிறது? நான் பார்க்கும் பெண்ணை கல்யாணம் செய்துக்கொள்' என்று கூறவும் தயக்கம் தடுத்தது. பையன் நம்மை பணத்தாசை பிடித்தவள் என்று எடை போட்டு விட்டால்? என்ன நினைப்பான்?

''உனக்கு விருப்பம்னா நா்ன் என்னப்பா சொல்லப் போகிறேன்? உன் சந்தோஷம் தான் முக்கியம்'' என்றாள்.

திருமணம் தடபுடலாய் நடந்தது. எல்லாமே ராம்மோகனின் செலவுதான்.

ஜோதியும் தனக்கு இப்படியொரு வாழ்க்கை கிடைக்கும் என்று எதிர் பார்க்கவில்லை. ரொம்ப சந்தோஷப் பட்டாள். ஆனால் அதெல்லாம் நிலைக்கவில்லை.

மாமியாரின் போக்கில், பேச்சில் மாறுதல் கண்டாள். சமையல் முதற் கொண்டு எல்லாவற்றையும் குறை சொன்னாள்... அதுவும் மகன் இல்லாத போது. இருக்கும் போதோ வார்த்தைக்கு வார்த்தை ஜோதிம்மா என்று அழைப்பாள். மகனிடம் தனியாக, ''ஜோதியை வெளியில் அழைத்துச் செல்லக்கூடாதா? கடையே கதின்னு நீயும் கிடக்கிறே. நாலு பேரோட பொறந்து வளர்ந்த பொண்ணு. இந்த வீட்டில் என் மூஞ்சியை எவ்வளவு நேரம்தான் பார்த்துக்கிட்டிருக்கும்?'' என்று உருகுவாள். தனயன் அகமகிழ்ந்து போவான். 'அம்மாவுக்குதான் ஜோதி மீது எவ்வளவு பாசம், அக்கறை?'

ஜோதிக்குதான் மாமியாரை நினைத்து குழப்பமாய் இருந்தது.

அன்று எண்ணெய் கத்தரிக்காய் குழம்பு வைத்து மூன்று நான்கு வகை பதார்த்தங்களையும் சமைத்தாள் ஜோதி. அத்தனையும் கணவனுக்கு பிடித்த ஐட்டங்கள்.

கிச்சனுக்கு வந்த வேதநாயகி வாயிலேயே அடித்துக் கொண்டாள்.

''ஐயோ... ஐயோ என்ன அநியாயம் இது? இப்படியா எண்ணெய தண்ணியா ஊத்தி சமைப்பே? ரெண்டு வகை பதார்த்தம் போதாதா? இத்தனையும் ஏன் சமைச்சே? முன்னே பின்னே சாப்பிட்டிருந்தாதானே? உன் அதிர்ஷ்டம். அடிச்ச காத்துல குப்பை மேட்டுல இருந்த காகிதம் கோபுரத்துல ஒட்டிக்கிட்ட மாதிரி இங்கே வந்து ஒட்டிக்கிட்டே. ரசமும், பொட்டுக் கடலை துவையலுமா சாப்பிட்டு பழகியவளுக்கு விதவிதமா நாக்குக்கு ருசியா கேக்குதாக்கும். இப்படியெல்லாம் சமைச்சா... நாலும் உங்கம்மா லெவலுக்கு வரவேண்டியதுதான்!'' என்றாள்.

அவமானமாய் இருந்தது ஜோதிக்கு. அறைக்குச் சென்று கண்ணீர் விட்டாள்.

மதியம் சாப்பாட்டிற்கு வந்த கணவனுடன் சேர்ந்து சாப்பிட மனசு ஒப்பவில்லை. சாப்பிடவும் பிடிக்கவில்லை. அதை தவிர்க்கவே... ''வயிறு வலிக்கிறது. அப்புறம் சாப்பிடுகிறேன். அம்மாவை பரிமாற சொல்லிவிட்டு நீங்கள் சாப்பிட்டு விடுங்களேன் ப்ளீஸ்'' என்றவளை வற்புறுத்த விரும்பவில்லை.

வேதநாயகி மகனுக்கு பாசத்துடன் பரிமாறினாள்.

''நல்லா சாப்பிடுப்பா. பாவம் ஜோதி, உனக்காகவே பார்த்து, பார்த்து சமைச்சிருக்கா. நல்ல கைமணம் என் மருமகளுக்கு. இப்பத்தான் மனசுக்கு நிறைவா இருக்குப்பா. ஜோதி வந்ததால... இந்த வீடே நிறைஞ்சு போச்சு! அட மோர்க் குழம்பு கூட வச்சிருக்காளே... எனக்கு ரொம்ப பிடிக்கும்னு நேத்துதான் சொன்னேன். இன்னைக்கே வச்சிட்டாப் பார்த்தியா?''

சுவையான சமையலை விட அந்த பேச்சே ராம்மோகனின் வயிற்றையும், மனசையும் நிரப்பி விட்டது.

சாப்பிட்டு முடித்து அறைக்கு வந்தவன் மனைவியின் முதுகை தடவியபடி, ''என்னடா பண்ணுது?'' என்றான்.

''தலைவலி!''

''வயித்துவலின்னு சொன்னியே'' என்றான் புருவம் சுருக்கி.

''அ... ஆமாம் வயிறு வலிக்குது!''

''என்னாச்சு உனக்கு? எந்திரி!''

''ஒண்ணுமில்லீங்க!''

''எந்திரின்னு சொல்றேனில்லே... எந்திரி?'' அவனே எழுப்பி அமர்த்தினான்.

அவள் முகத்தைப் பார்த்து துணுக்குற்றான்.

''ஜோதி... என்னாச்சு? முகமெல்லாம் உப்பியிருக்கு. அழுதியா?''

''இ... இல்லீங்க...'' என்றவளால் அழுகையை கட்டுப்படுத்த இயலவில்லை. பொங்கி வந்தது.

''ஏய்... என்னடா ஆச்சு? இங்கே பார்... என்னைப் பார்... எதுவாயிருந்தாலும் என்கிட்டே சொல்லு''

''அ... அது வந்து...''

''சொல்லும்மா...''

''உங்கம்மா...''

''எங்கம்மாவா?'' ஆழமாய் நோக்கினான்.

''ஆமாங்க...!'' என்றபடி நடந்த விஷயங்களை கூறினாள்.

வில்லை. பளாரென அவனின் வலிய கரம் அவள் கன்னத்தில் பதிந்தது.

''யார் மேலே பழியைப் போடறே? எங்கம்மாவையா? மனசுக்கு உறுத்தலே, அபாண்டமா பேசறோமேன்னு? இப்பக்கூட உன் சமையலை மனசு விட்டு பாராட்டிக்கிட்டே பரிமாறினாங்க. எதை மனசுல வச்சுக்கிட்டு இப்படியெல்லாம் பேசறே? சொல்லிக் காட்டறேன்னு தப்பா நினைச்சிடாதே. எனக்கு எப்பேர்ப்பட்ட இடத்திலெல்லாம் பொண்ணு பார்த்தாங்க தெரியுமா? ஆனா, அதுக்கு துளியும் சம்பந்தமில்லாத இடத்திலேர்ந்து உன்னை நான் செலக்ட் பண்ணியும் மறுபேச்சு பேசாம, அவங்க ஆசைகள், எதிர்பார்ப்புகளை சுட்டுப்பொசுக்கிட்டு, 'உன் விருப்பப்படியே நடக்கட்டும் ராம்'னு சொன்னவங்க அவங்க. அவங்களையா அப்படி சொன்னே? எங்கம்மா மாதிரி ஒரு தெய்வத்தை மாமியாரா அடைய நீ எத்தனையோ ஜென்மத்தில் புண்ணியம் பண்ணியிருக்கணும்'' என்றான்.

அன்றிலிருந்து காதையும், இதயத்தையும் பொத்திக் கொண்டாள். கணவனிடம் கெஞ்சிக் கேட்டு மறுபடியும் அதே பள்ளியில் வேலைக்கு சேர்ந்தாள்.

வேதநாயகி தனது பொருமலைத் தொடர்ந்தாள். மகன் தன் மீது வைத்திருந்த நம்பிக்கை அவளின் பலமாயிற்று.

நாட்கள் விரைந்தோடின. இந்த மாதம், அடுத்த மாதம், அதற்கடுத்த மாதம் என்று எதிர் பார்த்த குழந்தை வரம் அவள் கைக்கு கிட்டவில்லை.

இந்த விஷயம் போதாதா வேதநாயகிக்கு. நாக்கில் கத்தியை வைத்துக் கொண்டு வார்த்தைகளால் ஜோதியை ரணப்படுத்திக் கொண்டிருந்தாள்.

ஜோதி கண்ணீருடன் பொறுமை காத்த




கிடைக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்த கணவனின் சட்டை பட்டன்களை போட்டு உதவினாள் ஜோதி.

இருகரங்களால் இடுப்பை வளைத்து

## உலகின் முதலாவது அட்டை வடிவ கேமரா!

உலகின் முதலாவது அட்டை வடிவத்திலான (CARD SIZED) புகைப்படக்கேமரா (DIGITAL CAMERA)ஒன்றை ஜப்பானின் கேசியோ கம்ப்யூட்டர் கம்பெனி தயாரித்துள்ளது. தலைநகர் டோக்கியோவிலுள்ள தலைமையகத்தில் வைத்து அதன் ஊழியரான மிஹோ நிசிஜாவா என்பவர் இந்த கேமராவை அறிமுகம் செய்த போது கண்டு வியப்படையாதவர் எவருமில்லை!



'எக்ஸிலிம் எக்ஸ் 5500' என்ற பெயர் கொண்ட இந்த அதிநவீன டிஜிட்டல் கேமராவின் எடையே 3.7 மி.மீட்டர் தான்! இலகுவாக சட்டைப்பையில் போட்டுக் கொள்ள உதவும் இந்தக் கேமராவில் எடுக்கும் புகைப்படங்களை கம்ப்யூட்டர் மூலம் காணவும், பிரிண்ட் போடவும் செய்யலாம்!

-இளசை ஜமால், ரியாத்.

இழுத்தான்.

''ரெண்டு வருஷத்துக்கு முன்னாடி எப்படி பார்த்தேனோ... அப்படியேதான் இப்பவும் இருக்கே... நான் எவ்வளவுதான் கடிச்சு... கடிச்சு விளையாடினாலும்!'' தலையால் அவள் தலையில் செல்லமாய் முட்டினான்.

''எப்பவும் விளையாட்டுதான் உங்களுக்கு. நேரமாச்சு... கிளம்புங்க... நானும் கிளம்பணும்!''

''இன்னைக்கு நாம ரெண்டு பேருமே லீவுப் போட்டுட்டா என்ன?''

''எதுக்கு?''

''புரியாத மாதிரி கேக்கறியே கண்ணாட்டி?''

கணவன் நல்ல மூடில் இருப்பது புரிந்ததும் தன் உள்ளக் கிடக்கையை வெளிப்படுத்தினாள்.

''ஏங்க...''

''என்ன லீவுதானே?''

''ப்ச்... அதில்லீங்க... நான் ஒண்ணு சொன்னாக் கேப்பீங்களா?''

''சொல்லுடா... என்ன விஷயம்?''

''நாம ரெண்டு பேரும்...''

''ம்... ரெண்டு பேரும்?''

''திருப்பதிக்கு போய்ட்டு வரலாமா?''

''திருப்பதிக்கா?''

''ஆமாங்க... கீழ்திருப்பதியிலேர்ந்து மலைக்கு நடந்தே போய் வந்தா... நினைச்சது நடக்குமாம்!''

''என்னது... நடக்கிறதா? என்ன விளையாடறியா ஜோதி?''

''ப்ளீஸ்ங்க... நமக்கு குழந்தைப் பிறக்கணும்னு வேண்டிக்கிட்டு நடக்கலாம்''

''என்னைப்பத்தி உனக்குத் தெரியாதா ஜோதி? எனக்கு கடவுள் நம்பிக்கை உண்டு. மனசளவில் மட்டும்தான். மத்தபடி மூடநம்பிக்கை, ஜோசியம் இதெல்லாம் பிடிக்காதுன்னு உனக்குத் தெரியாதா? இப்படி நேர்ந்துக்கிட்டா குழந்தை பிறக்கும்னு எந்த கடவுள் உங்கக்கிட்டே வந்து சொன்னார்? அப்படின்னா நாட்லே எத்தனையோ லட்சக்கணக்கான தம்பதிகளுக்கு குழந்தையில்லையே... அவங்கள்லாம் நேர்ந்துக்கிட்டு பெத்துக்கலாமே... ஏன் செய்யலே?''

''எனக்கு பதில் சொல்லத் தெரியலீங்க. மத்தவங்க கேலியா, குதர்க்கமா பேசும் போது... என்னால கடவுள்கிட்டே மட்டும்தான் வேதனையைக் கொட்ட முடியுது. ஏதோ ஒரு நம்பிக்கை. அப்படியாவது என்னை அம்மான்னு சொல்ல ஒரு குழந்தைப் பிறக்காதான்னு? ப்ளீஸ்... மறுக்காதீங்க. பெருமாள் சக்தி வாய்ந்தவர். கண்டிப்பா உங்க பேர் சொல்ல பிள்ளையைத் தருவார். எனக்காக ப்ளீஸ்...''

கண்கள் கலங்க... கெஞ்சிய மனைவியை இரக்கத்தோடு பார்த்தான்.

''ஏன் ஜோதி... எனக்கிருக்கிற பொறுமை உனக்கில்லே? கல்யாணமாகி எத்தனை வருஷமாய்டுச்சு நமக்கு? ரெண்டு வருஷம்தானே? எவ்வளவோப் பேருக்கு, பத்து பதினஞ்சு வருஷம் கழிச்செல்லாம் குழந்தைப் பிறந்திருக்கு. பிறக்கும் போது பிறக்கட்டுமே... அதையே நினைச்சு ஏன் ஃபீல் பண்றே?''

''கஷ்டமாயிருக்குங்க... என்னைப் பொறுமையா இருக்க யாரும் விடறதில்லே. குத்திப் பேசி குளவியாக் கொட்டும் போது.. வெறும் ஆறுதல் மட்டும் என் ரணத்துக்கு மருந்து போட்றாது.''

''அடடா... ஏன் சீரியஸாயிட்டே? கண்ணைத் துடை ஜோதி. பெருமாளுக்காக இல்லே... உனக்காக வர்றேன். ஒக்கேவா?'' மனைவியின் முகத்தை கையில் ஏந்தியவன் சிரித்தான்.

''தேங்க்ஸ் ராம்... தேங்க்யூ ஸோ... மச்!'' என்றபடி அவன் நெஞ்சில் முகம் புதைத்துக் கொண்டாள்.

''உனக்காக எதையும் செய்வேன் ஜோதி. ஆனா கண்ணீர் மட்டும் விடாதே. என்னால தாங்கிக்க முடியாது. அஞ்சு மணிநேரம் ஆகுமாம். நடப்பியா? என்னால முடியும். உன்னால?'' என்றான் வகிட்டில் கோடு போட்டபடி.

''முடியும்ங்க... அதுவும் பக்கத்தில் நீங்க இருக்கும் போது...'' என்றாள் நிம்மதியாய் மூச்சு விட்டபடி.

**வ**குப்பில் பாடம் நடத்திக் கொண்டிருந்த ஜோதி அப்போதுதான் அவளை கவனித்தாள்.

வர்ஷா டேபிள் மேல் கவிழ்ந்து படுத்திருந்தாள்.

'பாடத்தைக்கூட கவனிக்காமல் அப்படியென்ன தூக்கம்? கண்டித்தால், அம்மா வந்து டான்ஸ் ஆடிவிட்டுப் போகிறாள். படிப்பு ஏறாவிட்டாலும் என்னைதானே குறை சொல்லிவிட்டுப் போகிறாள்?' கோபம் மளமளவென தலைக்கு ஏறினாலும் கட்டுப்படுத்திக் கொண்டு அருகில் சென்றாள்.

''வர்ஷா...''

''.......!''

''ஏய் வர்ஷா... எந்திரி!''

மெல்ல தலையைத் தூக்கியவளைப் பார்த்து அதிர்ந்தாள்.



முகமெல்லாம்... அழுதழுது வீங்கிப் போயிருந்தது.

''வர்ஷா... என்னாச்சு... ஏன் அழறே?''

''வ்... வயிறு ரொம்ப வலிக்குது மிஸ்...!''

''மைகாட்... இப்படி எந்திரிச்சு வா... மைதிலி அவளுக்கு வழிவிட்டு எந்திரி...''

வந்தவளை வெளியில் அழைத்து வந்தாள். பார்த்த உடனே புரிந்துப் போயிற்று. ஜோதியின் முகம் மலர்ந்தது. வர்ஷாவின் கன்னத்தை ஆறுதலாய் தட்டிக் கொடுத்தாள்.

''பயப்பட ஒண்ணுமில்லே. ரெஸ்ட் ரூம்ல போய் உட்கார். அஞ்சு நிமிஷத்திலே வந்துடறேன்'' என்றவள் பிரின்ஸியின் ரூம் நோக்கி விரைந்து நடந்தாள்.

**டி**.வி. சீரியலில் மூழ்கியிருந்த ருக்மணியின் கவனத்தை சிதைத்தது காலிங்பெல் அலறல் சப்தம்.

''சே... இந்த நேரத்தில் யார்?'' எரிச்சலுடன் எழுந்தவள், ''யாரு?'' என்றபடி கதவைத் திறந்தாள்.

வாசலில் ஜோதியும், அவள் பின்னே வர்ஷாவும்.

'இந்த நேரத்தில் வர்ஷாவா? அதுவும் டீச்சருடன்! என்ன விஷயம்?' மெல்லிய நடுக்கம் உடலெங்கும் பயணித்தது.

''எ... என்ன டீச்சர்? வர்ஷாவை... இந்த நேரத்திலே...''

''ஏன் டென்ஷனாகறீங்க? எல்லாம் நல்ல விஷயம்தான். உங்கப் பொண்ணு மேஜராகிட்டா... இந்தாங்க ஸ்வீட்!'' சிரித்தபடி ஸ்வீட் பாக்ஸை நீட்டினாள்.

''நிஜம்மாகவா?'' ருக்மணியின் கண்களில் மகிழ்ச்சித் தாங்காமல் கண்ணீர் பொங்கியது.

இந்த காலத்தில் நிறைய பெண் பிள்ளைகள் பதினோரு, பனிரெண்டு வயதிலேயே பெரிய பெண்ணாகிவிட, பதினாலு முடிந்தும் மகள் ஆகாமல் இருக்கிறாளே என்று நெஞ்சு முட்ட வருத்தம் ருக்மணிக்கு. சந்தோஷத்திற்கு கேட்கவா வேண்டும்?

''வர்ஷா!'' மகளை மெல்ல அணைத்துக் கொண்டாள்.

''இந்தாங்க...'' ஸ்வீட் பாக்ஸை கொடுத்தாள் ஜோதி.

சட்டென எதையோ நினைத்துக் கொண்டவளாய் முகம் மாறியது ருக்மணிக்கு. வாங்கிக் கொண்டாள்.

''நான் கிளம்பறேங்க!''

''சரி!'' என்றாள். ஒரு மரியாதைக்கு உட்காரக்கூடச் சொல்லாமல்.

வாசலில் செருப்பு மாட்டிக் கொண்டிருந்த ஜோதிக்கு அந்த வார்த்தைகள் நெருப்பாய் காதில் விழுந்தன.

''என்டி முண்டம்... அறிவில்லே உனக்கு? இப்படி ஆச்சுன்னு தெரிஞ்சதும் எதையாவது பொய் சொல்லிட்டு வீட்டுக்கு கிளம்பி வரத் தெரியாதா? போயும், போயும் இந்த மலடிதானா முதமுதலா உன் கையப் பிடிச்சு அழைச்சிகிட்டு வரணும்? விளங்குமா? கடவுளே... இப்ப நான் என்ன செய்வேன்?''

ஜோதி துடித்துப் போய் விட்டாள்.

'கடவுளே... இதற்குமா மூடநம்பிக்கை?'

**நெ**ருப்பள்ளிக் கொட்டினதுப் போல் உடம்பெங்கும் எரிந்தது. அக்னிபகவான் அவ்வளவு கோபமாய் சுட்டெரித்துக் கொண்டிருந்தான்.

வருடா வருடம் வெயில் அதிகமாகிக் கொண்டே போகிறதேயொழிய குறைந்தபாடாய் தெரியவில்லை.

பார்வதியின் ஜாக்கெட், புடவை எல்லாம் வியர்வையில் நனைந்து விட்டிருந்தது. உதடுகள் காய்ந்து, தொண்டை வறண்டுப் போயிருந்தது. குளிர்ச்சியாய் தண்ணீர் குடிக்க வேண்டும் போல் ஆவலாயிருந்தது. இரு கைகளிலும் சுமைகள். ஒன்றில் பத்துலிட்டர் அடங்கிய மண்ணெண்ணெய் கேன். அடுத்த கையில் அரிசி, சர்க்கரை அடங்கிய இரண்டு துணிப்பைகள்.

ஒரு டீக்கடையின் வாசலில் சுமைகளை வைத்து விட்டு கைகளை உதறிக் கொண்டாள்.

''ஐயா... குடிக்கக் கொஞ்சம் தண்ணி தாங்களேன்!''

மறுபேச்சுப் பேசாமல் டீக்கடைக்காரர் தண்ணீர் தந்தார்.

குடித்தபின் நெஞ்சடைப்பு நீங்கியதுப் போலிருந்தது.

''நன்றிங்க!'' என்றபடி தண்ணீர் குவளையை நீட்டிய பார்வதிக்கு அறுபதை நெருங்கும் வயது. தலையில் இங்கொன்றும், அங்கொன்றுமாய் கறுப்பு முடிகள் எஞ்சியிருந்தது. மற்றபடி தும்பைப் பூவாய் வெளுத்திருந்தது. நெற்றியும், கழுத்தும் காலியாய் இருந்தது.

நான்கு மக்களைப் பெற்ற மகராசி பார்வதி.

இரண்டு ஆண்கள், இரண்டு பெண்கள். பார்வதியின் கணவன் தங்கமுந்து சொந்தமாய் தச்சுப்பட்டறை வைத்திருந்தார். சம்பாதிப்பதில் பெரும்பகுதி சாராயக் கடைக்கே போக... குடும்

ஒரு நாள் தங்கமுத்து குடல் வெந்து ஒரே யடியாகவே போய் சேர்ந்து விட்டார். நான்கு பிள்ளைகளையும் தனக்குத் தெரிந்த சாப்பாட்டுக் கடை வைத்துதான் காப்பாற்றினாள். காலையில் இட்லி, தோசை, பூரி, பொங்கல். மதியம் சாப்பாடு. மாலையில் போண்டா, பஜ்ஜி. இரவில் சாப்பாடு என்று ஓய்வு ஒழிச்சலின்றி உழைத்தாள். ஐந்து ஜீவன் சாப்பிட வேண்டுமே! குழந்தைகளை படிக்க வைக்க வேண்டுமே! எல்லாம் போக சேமிப்பிற்கென்று சொற்பமாகதான் எஞ்சியது.

ஆண் பிள்ளைகளை நன்கு படிக்க வைத்து பட்டதாரியாக்கினாள். வேலைக்குப் போய் தங்கைகளை கரையேற்ற மாட்டார்களா என்கிற நப்பாசைதான்?!

பெரியவன் மாறன் படிப்பு முடித்ததும் திறமையுடன் வேலையைத் தேடிக்கொண்டான். இளையவன் கோவிந்தும் அப்படிதான். அவர்களுக்கு அடுத்தவள் தாமரை. படிப்பு ஏறவில்லை என்று ஒன்பதாவதோடு வீட்டில் அமர்ந்து விட்டவள். அம்மாவிற்கு சட்னி, மசாலா என்று அரைத்துத் தந்து உதவியாக இருந்தாள். கடைசிப் பெண் ஜோதி. அடம்பிடித்து பி.ஏ. வரை படித்து விட்டவள்.

மாறன் ஒரு கிறிஸ்தவப் பெண்ணை காதலித்து, மணந்து, குடும்பத்தை மறந்து, ஒரிசாவில் மாற்றல் வாங்கிக் கொண்டு செட்டிலாகி விட்டான். ஏழு வருடமாகி விட்டது... அவன் மறந்தும் கூட இவர்களை தொடர்புக் கொள்ள



வில்லை.

கோவிந்துக்கு தேடிப்பார்த்துதான் சாந்தியை கல்யாணம் பண்ணி வைத்தாள். ''வீட்டில் சாப்பாட்டு கடை வைத்திருப்பது அசிங்கமாயிருக்கிறது. யார் யாருக்கோ வடித்துக் கொட்ட என்னால் முடியாது'' என்றாள் சாந்தி. இளம் மனைவி, அதுவும் அழகான மனைவி. சும்மாயிருப்பானா கோவிந்த்? அம்மாவிடம் சண்டைப் போட்டு கடைப்போடுவதை நிறுத்தினான்.

தாமரைக்கு தன் சேமிப்பு அத்தனையும் போட்டு செங்கல்பட்டு பக்கத்தில் திருமணம் செய்துக் கொடுத்தாள்.

அடுத்தவளுக்கு என்ன செய்வது, எப்படி கரையேற்றுவது என்று கவலைப்பட்டுக் கொண்டிருக்க... கடவுளாய் வந்து ஜோதியை தன் மனைவியாக்கிக் கொண்டான் ராம்மோகன்.

இப்போது கோவிந்த் வீட்டில்தான் காலத்தைக் கடத்திக் கொண்டிருக்கிறாள் பார்வதி.




நெற்றியிலிருந்து வழிந்த வியர்வை நீர் கண்களில் பட்டு எரிந்தது. கையை சற்றே உயர்த்தி ஜாக்கெட்டில் துடைத்துக் கொண்டவள் இருபதடி தொலைவில் சென்று கொண்டிருந்த பெண்ணைப் பார்த்தாள்.

பகீரென்றது பார்வதிக்கு.

'தாமரையா அது? அவளைப் போல்தான் தெரிகிறது. கடவுளே... மறுபடி வந்து விட்டாளா பிரச்சினைகளை மூட்டைக் கட்டிக் கொண்டு? இன்னும் என்னதான் சொல்லிப் புரிய வைப்பது?' அவளும் நடையை எட்டிப் போட்டு நெருங்கினாள்.

''தாம...'' என்று வாயைத் திறப்பதற்கும், அப்பெண் எதேச்சையாக ஆட்டோ ஹார்ன் சப்தத்திற்கு திரும்புவதற்கும் சரியாய் இருந்தது.

'இல்லை... தாமரை இல்லை... அப்பாடா!' என்று நிம்மதியாய் மூச்சு விட்டாள்.

அதே சமயம் கண்பார்வை மங்கிக் கொண்டே வருவதை நினைத்தும் கவலை ஏற்பட்டது.

பார்வதிக்கு உடம்பில் சர்க்கரையும், பிரஷரும் அளவுக்கதிகமாக இருந்தது. டாக்டர் தினமும் இரண்டு வேளை இன்சுலின் எடுத்துக் கொள்ள வேண்டும் என்றார். அதற்கு வசதி வாய்ப்பு இல்லை. கவனிக்க யாருக்கும் மனசும் இல்லை. போதாதற்கு அதிகளவு சர்க்கரையினால் ஒரு கண்ணில் காட்ராக்ட் விழுந்து 80 சதவீத பார்வை போய் விட்டது. இலவசமாய் கண் அறுவை சிகிச்சை செய்ய எத்தனையோ தொண்டு நிறுவனங்கள் இருக்கத்தான் செய்கின்றன.

ஆனால், அதற்கும் சர்க்கரையின் அளவை கட்டுப்படுத்த வேண்டுமல்லவா? அரசாங்க ஆஸ்பத்திரியில் மாத்திரைகள் வாங்கி சாப்பிட்டு நாட்களை கடத்திக் கொண்டிருக்கிறாள் பார்வதி.

அவளுடைய கவலையே இரண்டு பெண்களைப் பற்றிதான்.

அதிலும் முக்கியமாய் தாமரையைப் பற்றிதான்!

அவளை திருமணம் செய்துக் கொடுத்து மூன்றரை ஆண்டுகள் ஆகிவிட்டன. மாதத்தில் இரண்டு முறையாவது நெஞ்சு நிறைய சுமையோடும், கண்கள் நிறைய கண்ணீரோடும் தாய்மடி தேடி வந்து விடுவாள். மாமியார் வீட்டில் அவள் படும் சிரமங்கள் சொல்லக் கேட்கும் போது... அவளுக்கே நம்ப சிரமமாக இருக்கும்.

''என்னால் அங்கே இருக்க முடியவில்லைம்மா! நான் உன்னிடமே வந்து விடுகிறேன்'' என்பாள் கெஞ்சலாக.

பார்வதியும் கிளிப்பிள்ளையைப் போல ஒரே மாதிரி அட்வைஸ் பண்ணுவாள்.

''குடிகார அப்பனோடு நான் வாழவில்லையா? பெண் என்றால் சகிப்புத்தன்மை வேண்டும். வாழ்ந்தாலும், செத்தாலும் புருஷன் வீடாகத்தான் இருக்க வேண்டும். காலம் மாறும்... கவலைப்படாதே!'' என்பாள்.

அவளால் மகளுக்கு அட்வைஸைத் தவிர வேறெதையும் செய்யக்கூடிய நிலையில் இல்லை.

பெண்ணிற்கு புகுந்த வீட்டில் பிரச்சினை என்றால், குடும்பத்து ஆண்பிள்ளைகள் தான் கேட்டு சரிப்பண்ண வேண்டும்.

அப்பா இல்லை. பெரியவன் உறவை முறித்துக் கொண்டு போய்விட்டான். அடுத்தவன் கோவிந்தாவது தங்கையின் வாழ்க்கையில் தலையிட்டு சரிப் பண்ணலாம். அவனோ... எதையும் கண்டு கொள்வதில்லை.

பார்வதிக்கு மனம் பதைக்கும்தான். போய் கேட்கலாமா? என்று. ஆனால், பயந்தாள். காரணம்...



முதலில் அவளின் பரிதாபத் தோற்றம். எதிராளியின் பார்வையில் ஏளனத்தைதான் உற்பத்தி செய்யும். அடுத்து வாக்குவாதம் முற்றி... 'பெண்ணை அழைத்துச் சென்று விடுங்கள்' என்றால்? எங்கே அழைத்துச் செல்வது? அவளை ஏற்றுக் கொண்டு பாதுகாக்கிற அளவுக்கு கோவிந்துக்கோ, அவன் மனைவி சாந்திக்கோ விசாலமான மனசு இல்லை.

பார்வதியால் வேறு என்ன செய்ய முடியும்? புருஷனை இழந்து, மனைவியின் முந்தானையில் ஒளிந்துக் கொண்டு வாழும் பிள்ளைகளின் நிழலில் ஒதுங்கி வாழும் அவளைப் போன்ற அம்மாக்களின் நிலைமை பெரும்பாலும் பரிதாபகரமாகத்தான் உள்ளது.

சின்னவள் ஜோதிக்கு திருமணமாகி இரண்டு வருடமாகியும் குழந்தையில்லை. அதனால் அவள் வீட்டிலும் மாமியாரால் பிரச்சினை. ஆனால், மாப்பிள்ளை தங்கமானவர் என்பதால் ஜோதியைப் பற்றி பெரிதாய் கவலைப்படத் தேவையில்லை. பெண்கள் மாமியார்களால் சித்ரவதைப்படுகிறார்கள் என்றால், பார்வதியின் நிலைமையோ தலைகீழ்.

தான்படும் வேதனைகளை, சொல்லடிகளை அவள் மறந்தும் கூட மகள்களிடம் பகிர்ந்து கொண்டதில்லை. 'அதுங்க படுகிற வேதனைப் போதாதா?' என்கிற தாய் அன்புதான் காரணம்.

ஒரு வழியாய் வீடு வந்து சேர்ந்தாள் பார்வதி.

''ஏன் இவ்வளவு நேரம்? விக்ராந்துக்கு சாப்பாடு கொண்டு போய் கொடுக்கணும்ங்கறதே மறந்துப் போச்சா?'' வந்ததும் வராததுமாய் சிடுசிடுத்தாள் சாந்தி.

'அடடா... எப்படி மறந்து போனேன்?' தன்னையே நொந்துக் கொண்டாள்.

விக்ராந்த் கோவிந்தின் ஒரே செல்லப் பிள்ளை. பள்ளியில் யூ.கே.ஜி. படிக்கிறான். தினமும் மதிய உணவை பார்வதிதான் எடுத்துச் செல்வாள். அவள் கொஞ்சமாவது தன் பிரச்சினைகளை மறக்கிறாள் என்றால்... பேரனின் முகம் பார்க்கும் போதுதான். பேரன் என்றால் கொள்ளைப் பிரியம். அவனுக்கும் பாட்டியைக் கண்டால் பாசம்தான். எப்போதும் அவளிடமே ஒட்டிக் கொண்டிருப்பான்.

''ரேஷன் கடையிலே ஏகப்பட்ட கூட்டம் சாந்தி... அதனாலதான் லேட்டாயிடுச்சு.''

''அதுக்குதான் காலையிலே ஏழுமணிக்கெல்லாம் போங்கன்னு தலைப்பாடா அடிச்சுகிட்டேன். காதிலேயே வாங்கிக்கலே. ஆடி, அசைஞ்சு, சாப்பிட்டு பத்து மணிக்கு கிளம்பினா... க்யூவுல நிக்கிறவங்க... 'வாங்கம்மா, வந்து நின்னுக்குங்க'ன்னு வழிவிடுவாங்களா?''

''காலையிலே எந்திரிக்கும் போதே தலை சுத்தல் அதிகமாயிருந்தது சாந்தி. மாத்திரை காலியாய்டுச்சு. ரெண்டு நாளாப் போடலே... நாளைக்கு தான் ஆஸ்பத்திரி போகலாம்னு இருக்கேன்''

''ஆமா... எல்லாத்துக்கும் ரெடியா ஒரு பதிலை வச்சுக்குங்க. சாப்பாட்டுக் கடைப் போடும் போது காலைல மூணுமணிக்கெல்லாம் எந்திரிச்சு வேலை செஞ்சீங்களே... அப்பல்லாம் கூட இந்த தலை சுத்தல் இருந்துச்சுதானே?''

''விக்ராந்துக்கு சாப்பாடு கொடுத்தனுப்பிட்டியா சாந்தி?''

''யார்கிட்டே கொடுத்தனுப்பறது? ரெண்டு நாளா நககுத்தியால அவஸ்தைப்பட்டுக்கிட்டிருக்கேன். இந்த வேகாத வெயில்ல நான்தான் போய்ட்டு வந்தேன்''

''இந்தாம்மா... மீதிப்பணம்!''

வாங்கி எண்ணிப் பார்த்தவளின் முகம் மாறியது.

''பணம் குறையுதே!''

''இல்லியேம்மா... சரியாதானே இருக்கு!''

சாந்தி ரேஷன் கார்டை வாங்கிப்பார்த்தாள்.

''என்னென்ன வாங்கிட்டு வந்தீங்க?''

''மண்ணெண்ணெய், சர்க்கரை, அரிசி!''

''அப்புறம் ஏன் ரவை, மைதா, கோதுமையெல்லாம் வாங்கின மாதிரி டிக் பண்ணியிருக்கு... பணமும் எடுத்திருக்கிறான்.'' மாமியாரை வித்தியாசமாய் பார்த்தாள்.

''ஐயோ... நான் அதையெல்லாம் வாங்கவேயில்லையே...''

''இதிலேதான் வாங்கினதாப் போட்டிருக்கானே...''

''தெரியலேம்மா... படிப்பு வாசனையே இல்லாத எனக்கு என்னத் தெரியும்? நாளைக்கு காலையிலேயேப் போய் கேட்டுப் பணத்தை வாங்கிட்டு வந்திடறேன். பில் போடற பையன் எனக்குத் தெரிஞ்சவரோட பிள்ளைதான்.''

''நாளைக்கு ஏன் தள்ளிப் போடணும்? வாங்கிட்டுப் போனீங்களேன்னு சாதிப்பாங்க. இப்பவேப் போய் வாங்கிட்டு வாங்க.''

''இப்பவா? வெயில் ரொம்ப இருக்கு சாந்தி!''

''அதுக்காக பணத்தை அம்போன்னு விட்டுடச் சொல்றீங்களா? பெரிய மனுஷிக்கு இந்த விஷயத்திலே கொஞ்சமாவது கவனம் இருந்திருக்கணும். நாளைக்கெல்லாம் போனா வேலைக்காகாது. இப்பவே கிளம்புங்க'' என்றாள் கறா

ராய்.

அதற்கு மேல் மறுத்துப் பேசி பிரயோஜன மில்லை என்று புரிந்தது பார்வதிக்கு.

''இங்கேயே நின்னுக்கிட்டிருந்தா எப்படி? கடைய சாத்திட்டு போய்டப் போறான்.''

''சாந்தி... வெயில் அதிகமாயிருக்கு. தலைய சுத்துது. ஆட்டோவுல போய்ட்டு வர்றேனே... ஒரு இருபது ரூபா...''

''என்னது... இதோ இங்கே இருக்கிற இடத்துக்கு ஆட்டோவா? என்ன விளையாடறீங்களா? இப்ப வாங்கிட்டு வரப்போகிற பணத்துல பாதித் தொகை... அதுவாவதுப் புரியுதா?''

பார்வதி நெஞ்சு கனக்க... வாசலை நோக்கி நடந்தாள்.

''வெறும் கைய வீசிக்கிட்டுப் போனா எப்படி? நம்புவானா? இவ்வளவுதான் வாங்கினேன்னு காட்ட வேண்டாமா? எல்லாத்தையும் எடுத்துக்கிட்டுப் போங்க''

பார்வதி மறுபடி அதே சுமைகளோடு வெளியேறினாள். கண்கள் பொங்கியது.

சூரியன் அவளைப் பார்த்து கொடூரமாய் சிரித்தான்.

**க**ண்கள் எரிச்சலாய் இருந்தது.

'உடம்பில் சூடு அதிகமாகி விட்டது. தலைக்கு எண்ணெய் தேய்த்துக் குளிக்கலாமா?' பாத்திரங்களை கழுவியபடி யோசித்தாள் பார்வதி.

''பாட்டி... கழுவி விடு!'' சட்டையை வயிற்றுக்கு மேல் தூக்கி பிடித்தபடி வந்து நின்றான் விக்ராந்த்.

பார்வதி அவன் நின்றிருந்த கோலத்தைப் பார்த்து சிரித்தாள்.

''என் செல்லக்குட்டி வளர்ந்துகிட்டே வர்றானே! இன்னும் எத்தனை நாளைக்கு என்னை எதிர்பார்த்துக்கிட்டுருப்பே? இந்த வேலையெல்லாம் இனி நீதான் செஞ்சுக்கணும் என்ன?''

''போ... பாட்டி! எனக்கு எப்பவும் நீதான் கழுவணும்.''

''எத்தனை வயசு வரை இதே வசனத்தை சொல்வேன்னு பார்க்கறேன்'' செல்லமாய் அவன் முதுகில் தட்டி... கழுவி விட்டாள்.

''பிரஷ் பண்ணிட்டு வந்திடறேன்... குளிப்பாட்டி விட்ரு.''

''சரிடா செல்லம்!''

நேரம் கடந்தது. வேலைகள் முடிந்தது. எண்ணெய் பாட்டிலை எடுத்து தலைக்கு தேய்த்து விட்டு மூடி... அதே இடத்தில் வைக்கப் போன நேரம் கை நழுவி... சிதறியது பாட்டில்.

''கடவுளே...!'' சடுதியில் ஒரு கிண்ணம் எடுத்து எண்ணெயை வழித்து ஊற்றியதில் பாட்டில் துண்டுப்பட்டு விரலில் ரத்தம் கொட்டியது.

''என்னத்தைப் போட்டு உடைச்சீங்க? கடவுளே... தேங்காய் எண்ணெயா? நேத்துதானே வாங்கி வச்சேன். கண்ணுத் தெரியலே உங்களுக்கு?'' உள்ளே வந்த சாந்தி வாயில் அடித்துக் கொண்டாள்.

கோவிந்தும் சத்தம் கேட்டு வந்தான்.

''என்னம்மா பண்ணித் தொலைச்சே?''

''தலைக்கு எண்ணெய் தேய்ச்சு குளிக்கலாம்னு எடுத்தேன். வழுக்கி... ஸ்ஸ்... ஆ...'' ரத்தம் வழிந்த விரலை வலித்ததில் அழுத்திக் கொண்டாள்.

''எண்ணெய் தேய்ச்சு குளிக்கலேன்னு யார் அழுதா? செவ்வாய்க் கிழமையும் அதுவுமாப் போட்டு உடைச்சிருக்கே. விக்கிற விலைவாசியிலே... என்னமோப் போ... வரவர உன் போக்கே சரியில்லே!''

ரத்தம் கொட்டுகிறது. அதைப்பற்றிய கவலைக் கொஞ்சமும் இன்றி... அவளையே குற்றம் சாட்டி பேசியது... ரொம்பவே வலித்தது பார்வதிக்கு.



**ஒ**ரு மணிநேரம் கடந்திருக்கும். பாத்ரூமில் தண்ணீரோடு, கண்ணீராய் அழுது குளித்து முடித்து விட்டு அடுத்த வேலைக்குத் தயாரானாள் பார்வதி. சாப்பிடக்கூட மனம் ஒப்பவில்லை. நெஞ்சம் கனத்துப் போயிருந்தது.

'நாள் முழுக்க அடுப்பில் வெந்து எப்படியெல்லாம் வளர்த்து ஆளாக்கினேன்? என்னை யாடா அப்படிப் பேசினே?' மறுபடி கண்ணீர் துளிர்க்க முற்பட.... அதிர்ச்சியில் உள்விழுத்துக் கொண்டாள்.

வாசலில் தாமரை!

அம்மாவைப் பார்த்ததும் சற்றே தாங்கி நடந்தபடி வந்து கழுத்தை கட்டிப்பிடித்துக் கொண்டு அழுதாள்.

''என்னடி ஆச்சு?''

''நான் இனிமே அங்கே போக மாட்டேன்ம்மா... நீ என்ன சொன்னாலும் சரி... போதும் நான் வாழ்ந்தது. முடியலேம்மா... தாங்க முடியலே...''

''முதல்ல உட்காரு... இந்தா தண்ணியக் குடி!''

வாங்கிப் பருகினாள்.

அரவம் கேட்டு அலுவலகம் புறப்படத் தயாராயிருந்த கோவிந்த் அறைக்குள்ளிருந்து எட்டிப் பார்த்தான்.

''வந்துட்டியா? வேற வேலையே இல்லையா உனக்கு? இதே பொழப்பாப் போச்சா? சாப்பிட்டு கிளம்பற வழியைப் பார்... சாந்தி... போய்ட்டு வர்றேன்!''

''சரிங்க!'' உள்ளிருந்தே குரல் கொடுத்தாள்.

மறுபடி தங்கையை வெறுப்பாய் பார்த்து விட்டு வெளியேறினான். சற்று நேரத்தில் பைக் உறுமிக் கொண்டு செல்லும் சப்தம் கேட்டது.

தாமரை பொறுக்க மாட்டாமல் அம்மாவின் மடியில் படுத்து அழுதாள்.

''அண்ணன் என்ன சொல்லிட்டு போகுது பார்த்தியாம்மா? நான் படற வேதனை எனக்குதாம்மா தெரியும். எனக்கொரு பிரச்சினைன்னா நான் எங்கே போவேன்? இங்கேதானே வரமுடியும்?''

''இப்படியே அடிக்கடி கோவிச்சுக்கிட்டு வந்தா நல்லாயிருக்காது தாமரை. வேணும்னா நான் வந்து பேசட்டா?'' மகளின் முதுகை வாஞ்சையாய் தடவிக் கொடுத்தபடி கேட்டாள் பார்வதி.

''வேணாம்மா... உன்னை மதிக்கமாட்டாங்க. பிரச்சினை பெரிசாகும். பொண்ணைப் பெத்தவங்க அடங்கிப் போகணும்னு நினைக்கிற கும்பல் அது!''

''பைத்தியம் மாதிரிப் பேசாதே... அதுக்காக இப்படியே விட்டுட முடியுமா?''

''நீ நினைக்கிற மாதிரி இல்லேம்மா. கேட்டு எந்த பிரயோஜனமும் இல்லே... ஒரேயடியா வெட்டிக்கிட்டு வர்றதை தவிர...''

''அப்படியெல்லாம் பேசக்கூடாது தாமரை. நீ நல்லா வாழணும்னுதானே கஷ்டப்பட்டு கல்யாணம் பண்ணி வச்சேன். வார்த்தைக்கு வார்த்தை உறவை முறிச்சுக்கிட்டு வர்றதைப் பத்தியே பேசறியேம்மா!''

''வேற என்னம்மா பண்ணச் சொல்றே? மாமியார் கொடுமையையாவது தாங்கிப்பேன். ஏன்னா, நாட்டிலே அதே மாதிரி நிறையப் பெண்கள் அனுபவிக்கிறாங்க. ஆனா, மச்சினனின் அசிங்கமான பார்வையை, பேச்சை சகிக்கக்க முடியாதும்மா!''

''என்னடி புதுசா ஒரு குண்டை தூக்கிப் போடறே?'' திகைத்துப் போனாள் பார்வதி.

''ஆமாம்மா... நீ வேதனைப்படுவேன்னு தான் இத்தனை நாள் சொல்லாம மறைச்சேன். ஆனா, இருக்க இருக்க அவனோடத் தொல்லை தாங்கலேம்மா. இவர் காலைல வேலைக்கு போனா வீடு திரும்ப நைட்டு ஒன்பது, பத்து மணி ஆயிடுது. மாமியாருக்கு அக்கம் பக்கத்து வீடுகள்ல கதைப் பேசவே நேரம் போதலே. வீட்டுப் பக்கத்திலேயே அந்த நாய் லேத் பட்டறை வச்சிருக்கறதால... அடிக்கடி வீட்டுக்கு வந்து மோசமா பேசறான். அவனைப் பத்தி என் புருஷன்கிட்டேயோ, உன்கிட்டேயோ சொன்னா...

# மீன் முள்ளால் செய்த சிலை

மேற்கு வங்காளத்தில் பிஸ்வநாத் தாஸ் என்பவர் மீனின் முள் மற்றும் தோல்களை வைத்து சிலைகளை தயாரித்து வருகிறார். கொல்கத்தாவிலுள்ள பிரசித்தமான காளிஅம்மன் கோவிலில் உள்ள அம்மன் சிலையை போன்று இவர் மீன் முள்ளால் வடிவமைத்துள்ளார். அதை மக்கள் போட்டி போட்டுக் கொண்டு வாங்குகிறார்கள். இது மட்டுமல்ல ஹீரோ ஹோண்டா மோட்டார் சைக்கிள், கணபதி சிலை மற்றும் குதிரையில் செல்லும் போர் வீரர் போன்ற அழகிய சிலைகளையும் வடிவமைத்துள்ளார்.

-ஷைலஜா பாலமுருகன், சிக்மகளூர்.



பழியை என்மேல போட்டு நம்ப வப்பானாம்''

''என்னடி கொடுமை இது?''

''அப்படியும் என் புருஷன் கிட்டே சொல்லிப்பார்த்தேன். ஆனா, நான் சொல்றதை நம்பக் கூடிய நிலைமையிலே அவர் இல்லே''

''கடவுளே...!''

''என்னை ஜோதி மாதிரி நல்லா படிக்க வச்சிருக்கக் கூடாதாம்மா? படிப்பு ஏறலேன்னதும், இதுதான் சாக்குன்னு நிறுத்திட்டு கைவேலைக்கு வச்சுக்கிட்டே. படிச்சிருந்தா... எல்லாத்தையும் உதறிட்டு தனியே வந்திடுவேன்ம்மா. இங்கே பார்... தம்பி மேலே பழி சொல்றேன்னு என் புருஷன் சூடு போட்டதை...'' என்றபடி புடவையை விலக்கி தொடையை காண்பிக்க... கையகல அளவில் தீப்புண் தோலுரிந்து...

பார்வதியின் மனசு கதறியது.

''என்னடி இதெல்லாம்?''

அப்போது சாந்தி அங்கு வந்து நின்றாள். மாமியாரை ஒரு பார்வை பார்த்தாள்.

சுருண்டுப் போனாள்.

''இ... இங்கே பார் தாமரை! வாழ்க்கைன்னா ஆயிரம் பிரச்சினை இருக்கத்தான் செய்யும். நீதான் சமாளிக்கணும். இதையெல்லாம் பெரிய விஷயமா நினைக்காதே! களிம்பு தடவு... சரியாப் போய்டும்... க...கடவுளை நம்பு... அவ்வளவுதான். சாப்பிட்டு வெயிலுக்கு முன்னே கிளம்பற வழியைப் பார்!''

தாமரை அம்மாவை வெறுப்புடன் ஏறிட்டாள்.

''சே... நீயெல்லாம் ஒரு அம்மாவா? பெத்தப் பொண்ணு தினம் தினம் நெருப்புல குளிச்சிட்டிருக்காளேன்னு பரிதாபப்படாம... பெரிய விஷயமா நினைக்காதேன்னா சொல்றே? இனி இந்த வீட்டுப் படிய மிதிக்க மாட்டேன். அப்படி மீறி வந்தா... அது என் பிணமாகத்தான் இருக்கும்.''

ஆவேசமாய் பேசியவள், கன்னத்தில் வழிந்த நீரை சுண்டி எறிந்து விட்டு வெளியேறினாள்.

பெற்ற தாய் நெஞ்சம் பதைத்தது. 'போகாதே' என்று மகளை தடுக்க நினைத்தது. மருமகளின் முகம் பார்த்து கட்டுப்படுத்திக் கொண்டாள்.

பத்து நிமிடம் கடந்தது.

பிளாஸ்டிக் கூடையை எடுத்துக் கொண்ட பார்வதி, ''பணம் கொடு சாந்தி... மார்க்கெட் போய்ட்டு வந்துடறேன்'' என்றாள்.

''அளவாப் பார்த்து வாங்குங்க... இந்த மாசம் உங்க பிள்ளையோட சம்பளத்துல இந்த வரி, அந்த வரின்னு ஏகத்துக்கும் பிடிச்சிட்டாங்க'' என்றபடி பணம் கொடுத்தாள்.

''சரிம்மா...!'' என்றவள் செருப்பை மாட்டிக் கொண்டு விரைந்து நடந்தாள்.

பஸ் ஸ்டான்ட் பக்கம் நடையை எட்டிப் போட்டாள்.

'அங்காளம்மா தாயே... தாமரை போயிருக்கக் கூடாது...' மூச்சு வாங்க நடந்தாள்.

அவள் வேண்டுதல் வீண்போகவில்லை. தாமரை கண்களை துடைத்தபடி பஸ் ஸ்டான்டில் நின்றிருந்தாள்.

''தாமரை...''

திரும்பிய தாமரை அம்மாவைப் பார்த்ததும் முகத்தை வேறுபக்கம் திருப்பிக் கொண்டாள்.

''தாமரை உன்கிட்டே கொஞ்சம் பேசணும்... வா!''

''பேச என்ன இருக்கு? எனக்கு யாருமில்லே... நான் ஒரு அனாதை... போ... போய்டு!''

''என் சூழ்நிலை... அப்படி பேச வச்சிட்டது... என் கூட வா... பேசணும்!'' மகளின் கையை வலுக்கட்டாயமாய் பற்றி பக்கத்திலிருந்த பூங்காவிற்கு அழைத்துச் சென்றாள்.

ஒரு சிமெண்ட் பெஞ்சில் அமர்ந்தனர்.

''என்னை மன்னிச்சிடு தாமரை!'' கைகூப்பி கண்ணீர் விட்டாள் பார்வதி.

பக்கென்றானது தாமரைக்கு.

''என்னம்மா நீ!'' கையைப் பற்றி தாழ்த்தினாள்.

''பெத்தவளைத் தேடி ஓடி வர்றே... உன்னை பாதுகாக்கிற கடமை எனக்கிருக்கு... ஆனா... நான்... மோசமான சூழ்நிலையிலே நீ வாழ்ந்துக்கிட்டிருக்கே. இந்த நிலைமையிலே உன்னை அங்கே அனுப்பறது புத்திசாலித்தனமில்லே. ஆனா நான் இருக்கிற இருப்பிலே... உன்னை நான் எப்படி...?''

''என்னம்மா சொல்றே நீ?''

''கஷ்டப்பட்டுக்கிட்டிருக்கேன் தாமரை. சாந்தி என்னை வேலைக்காரிய விடவும் மோசமா நடத்தறா. உங்கண்ணனும் ஒத்து ஊதறான். வேற போக்கிடம் இல்லாம சகிச்சுக்கிட்டிருக்கேன்...'' என்றபடி நடந்த அத்தனையும் அன்று காலை நடந்த சம்பவம் உள்பட சொல்லி முடித்தாள் பார்வதி.

''ஏம்மா இத்தனை நாளா சொல்லாம மறைச்சே?'' அதிர்ச்சியுடன் கேட்டாள்.

''நீயே ஆறுதல் தேடி வர்றே. இதை வேற சொல்லி நோகடிக்க விரும்பலே. உடம்பும் முன்னே மாதிரி இல்லே தாமரை. இருந்தா...



தனியே போய் சாப்பாட்டு கடைப்போட்டு பிழைச்சுக்குவேன். என் நிலைமையே மோசமா இருக்கும் போது... நீயும் கோவிச்சுக்கிட்டு வந்தா சாந்தி விடுவாளா? இங்கே வந்து அசிங்கப்படறதை விட, கஷ்டப்பட்டு புகுந்த வீட்டிலேயே இரு. பொறுத்துக்க... நிலைமை மாறும். ஆனா தப்பான முடிவை மட்டும் எடுத்திடாதே தாமரை'' என்று கெஞ்சினாள்.

அம்மாவைப் பார்த்து கண் கலங்கினாள். காயம்பட்டிருந்த கைவிரல்களை இதமாய் தொட்டாள்.

''வலிக்குதாம்மா?''

''என் வலிய விட உன் வலி பெரிசாச்சே தாமரை. படுபாவி கொஞ்சம் கூட ஈவிரக்கமில்லாம இப்படி சுட்டுப் பொசுக்கி இருக்கானே?'' கண்கள் பொங்கின.

''என்னையும் ஒரு ஆண்பிள்ளையா பெத்திருக்கலாமேம்மா! உன்னை கண் கலங்காம வச்சுக் காப்பாத்துவேனே! இப்ப மட்டும் என்னம்மா... வந்துடு... நீயும் நானும் தனியா இருக்கலாம். சாப்பாட்டு கடை வச்சு பொழைச்சுக்கலாம்''

''என் காலம் முடியப்போகுது தாமரை. இன்னும் எத்தனை வருஷம் இந்த வண்டி ஓடும்னு நினைக்கிறே? பேசறதுக்கு எல்லாமே சுலபமா இருக்கும். ஆனா, நடைமுறைக்கு சரிப்பட்டு வராது. எனக்கப்புறம் உனக்கு யார் துணை? அதுக்காகதான் அங்கேயே பொறுமையா இருக்கச் சொன்னேன். பொறுமையா இருந்தா சாதிக்கலாம் தாமரை. உன் புருஷன் உன்னை நம்புவான். அதுக்கும் ஒரு நேரம் வரும்... கவலைப்படாதே! அடிக்கடி இங்கே வந்து உன்னை பலவீனமானவளா காட்டிக்காதே!''

''புரியுதும்மா... உன்னை இனி கஷ்டப்படுத்தமாட்டேன்ம்மா... நம்பிக்கையோட எதிர்த்துப் போராடப் போகிறேன். வரட்டுமாம்மா? உடம்பைப் பார்த்துக்க''

''பத்திரமா போய் வா!''

மகளை பஸ் ஏற்றி அனுப்பி வைத்தாள் பார்வதி.

'இனி அவளை எப்போது பார்க்கப் போகிறோம்' என்ற எண்ணம் ஏனோ எழுந்தது.

''**ஜோ**திம்மா... ஜோதி...''

வேதநாயகியின் அன்பொழுக அழைக்கும் குரல் கேட்க வறட்சியாய் சிரித்தாள் ஜோதி.

மகன் வீட்டிலிருக்கும் நேரங்களில் மருமகள் மீது பொழியும் பாசத்திற்கு அளவே இருக்காது.

''இதோ வந்துட்டேன் அத்தை''

''என்ன ஜோதி இது? இப்பதானே தலை குளிச்சிட்டு வந்தே? சரியா உலரக்கூட இல்லே. அதுக்குள்ளே ஜடை பின்னிட்டே?''

''பரவாயில்லே அத்தே... காத்துல உலர்ந்துடும்.''

''என்ன பேச்சு இது குழந்தைத்தனமா? முதல்ல பிரிச்சு காய வை. உடம்புக்கு முடியாமப் போனா எவ்வளவு அவஸ்தைப்படுவே?''

''அம்மாவுக்கு எப்பவும் உன்னைப்பத்திதான் ஜோதி கவலையே!'' சொல்லிக் கொண்டே டைனிங் டேபிள் முன் அமர்ந்தான் ராம்மோகன்.

மெல்ல புன்னகைத்த ஜோதி, இருவருக்கும் பரிமாறினாள்.

''ஏன் ராம்... நீ பாட்டுக்கு பிஸினஸ் பிஸினஸ்னு அலைஞ்சு லேட்டா வீட்டுக்கு வர்றே. இவளும் ஸ்கூல்ல பிள்ளைங்ககிட்டே மல்லுக்கட்டி கத்திட்டு வர்றா. உங்களுக்கு போரடிக்குதோ இல்லையோ... எனக்கு போரடிக்குது. எங்கேயாவது அவளை வெளியே அழைச்சிட்டுப் போய் வாயேன் ராம்!''

''சொல்லிட்டேயில்லே... அழைச்சிட்டுப் போறேன்ம்மா!''

அந்நேரம் செல்போன் ஒலிக்க... அறையை விட்டு எழுந்துச் சென்றான்.

''எருமைமாடு மாதிரி நிக்கறியே... சாம்பாரை ஊத்து முண்டம்'' என்றாள் வேதநாயகி.

பழகிப்போனவளாய்... அமைதியாய் சாம்பாரை ஊற்றினாள் ஜோதி.




''**ஹே**ய் ஜோதி... இன்னும் நீ ரெடியாகலையா?'' என்று ஆச்சர்யமாய் கேட்டான் ராம்மோகன்.

பால்கனியில் நின்றபடி... கொத்தாய் பறந்து சென்ற வெண்ணிற பறவைகளை ரசித்துக் கொண்டிருந்த ஜோதி திரும்பினாள்.

''வந்துட்டீங்களா?''

''ஏன் இன்னும் ரெடியாகலே?''

''ஏன்... எங்கே போகிறோம்?''

''என்ன ஜோதி... அதுக்குள்ளே மறந்துட்

டியா? காலையிலே ஏழெட்டு முறை சொல்லியிருப்பேன். சந்தர் வீட்லே பர்த்டே பார்ட்டிக்கு போறோம்னு!''

''அதுவா?''

''என்ன... அதுவா?''

''நீங்க மட்டும் போய் வாங்களேன் ப்ளீஸ்!''

''நான் மட்டுமா? என்ன விளையாடறியா? சந்தரும், அவன் வொய்ஃபும் கண்டிஷனா சொல்லிட்டாங்க. ஜோதியில்லாம தனியா வந்தா உள்ளேயே சேர்க்க மாட்டோம்னு. என்னோட க்ளோஸ் ஃப்ரன்ட் அவன். முதல் பிள்ளையோட முதல் வருட பர்த்டே. ரொம்ப செலக்டிவா... முக்கியமானவங்கள மட்டும்தான் இன்வைட் பண்ணியிருக்கான். நாம போகலேன்னா எப்படிடா?''

''நீங்க மட்டும் போங்க... என்னை விட்ருங்க!''

''அதான் ஏன்?''

''எல்லோரும் என்னை கேள்வி கேப்பாங்க... கஷ்டமாயிருக்குங்க... ஏதாவது ஃபங்ஷன்னாலே அலர்ஜியா இருக்கு.''

''இதென்ன அபத்தமாயிருக்கு? நாம அடுத்தவங்களுக்காகவா வாழறோம்? நமக்காக தானே? கேட்டா... கேட்டுட்டுப் போறாங்க. நமக்கென்ன வயசா ஆயிடுச்சு? வி ஆர் ஸோ யங்! பிறகென்ன?''

''அது... வந்து''

''எது வந்தாலும், போனாலும் சரி... நீ இப்ப கிளம்பறே! மறுத்தே... நானே டிரஸ் பண்ணி விடுவேன். என்ன சொல்றே?''

''ஏங்க... என்னை கம்பெல் பண்றீங்க?'' அப்பாவியாய் கேட்டாள்.

''பேச நேரமில்லை. பத்து எண்ணுவேன். அதுக்குள்ளே டிரஸ் பண்ண ஆரம்பிக்கலேன்னா... சாய்ஸ் என்னோடது. ராம் கவுன்டவுன் ஆரம்பமாயிடுச்சு... ஒன்...''

''சரியான உடும்பு!'' செல்லமாய் அவன் தோள்பட்டையில் ஓங்கி குத்திவிட்டு... அவ்விடத்தை விட்டு நகர்ந்தாள் ஜோதி.

அடுத்த அரைமணி நேரத்தில் தங்களது புதிய காரில் புறப்பட்டனர் ராம்மோகனும், ஜோதியும்.

அழகான பங்களா!

வண்ண விளக்குகளால் அலங்கரித்திருந்தனர். அவர்களுக்கு முன்பே ஏகப்பட்ட பேர் வந்திருந்தனர். அதில் பல தெரிந்த முகங்கள்.

இவர்களைப் பார்த்ததும் ஓடோடி வந்து வரவேற்றனர் சந்தரும், மானஸாவும்.

''வா... ராம்... வாங்க ஜோதி!''

சற்று நேரத்தில் ராம் ஆண்கள் குழுமியிருந்த டிபார்ட்மென்டில் கலந்துக் கொள்ள... ஜோதி தனியான இடம் தேடி அமர்ந்தாள்.

ஆனால் மானஸா விடவில்லை. அவள் கைப்பற்றி அழைத்துச் சென்று எல்லோருக்கும் அறிமுகப்படுத்தினாள். சகவயது என்பதால் வெகுவாகவே அவளோடு ஒட்டிக்கொண்டாள்.

கேக் வெட்டி ஃபங்ஷனும் துவங்கியது. விருந்தும் அமர்க்களப்பட்டது. பரிசை கொடுத்துவிட்டு வந்தவர்கள் கிளம்ப, சந்தர் ராம்மோகனை பிடித்து நிறுத்தினான்.

''என்னடா... நீங்களும் எல்லோரையும் மாதிரி கிளம்பிப் போறீங்க? இரு பேசலாம்.''

''நேரமாச்சு சந்தர்... அம்மா தனியா இருக்காங்க''

''இருக்கிற பிஸினஸ் டென்ஷன்ல நமக்கெல்லாம் சந்திச்சு பேசிக்க ஏது நேரம்? கால்ல சக்கரத்தைக் கட்டிக்கிட்டு ஓடிக்கிட்டே இருக்க வேண்டியதாயிருக்கு. இந்த மாதிரி சந்தர்ப்பங்கள் அமைந்தால்தான் உண்டு. தவிர, ஒரு பிஸினஸ் விஷயமா உன்கிட்டே கொஞ்சம் பேசணும்'' என்றான் வற்புறுத்தலாய்.

வேறு வழியின்றி இருந்தார்கள். சொன்னது போலவே அவன் பிஸினஸ் சம்பந்தப்பட்ட பயனுள்ள ஒரு விஷயத்தைச் சொன்னான். ஆறேமாதத்தில் நினைத்தேப் பார்க்க முடியாத உயரத்திற்கு அவனை உயர்த்தும் விஷயமாய் இருந்தது.

அதன் பிறகு பொதுவான விஷயங்களைப் பேசிவிட்டு, ஜோதி எதற்கு பயந்தாளோ... அந்த விஷயத்திற்கே வந்தனர்.

சந்தர்தான் கேட்டான்.

''என்ன ராம்... எங்களை மாதிரியே நீங்களும் லைஃபை என்ஜாய் பண்ணனும்னு குழந்தைப் பெத்துக்கறதை தள்ளிப் போட்டு இருக்கீங்களா? நாங்களாவது பரவாயில்லை. ஒரு வருஷம் தான் கேப் விட்டோம். உங்களோடது ஐந்தாண்டு திட்டமா என்ன?''

ராம்மோகனும், ஜோதியும் சங்கடத்தோடு பார்த்துக் கொண்டனர்.

''அ... அப்படியெல்லாம் எதுவுமில்லை சந்தர். குழந்தைன்னா ரெண்டு பேருக்குமே ரொம்ப ஆசை. அதுக்கு இன்னும் நேரம் வரவில்லை... அவ்வளவுதான்.'' என்றான் ராம்.

''ஓ... ஸாரி ராம்... நான் ஏதோ விளையாட்டா கேட்கப் போய் அது உங்க ரெண்டு பேர் மனசையும் காயப்படுத்தியிருந்தா... ஸாரி அகெய்ன்...''

''சேச்சே... இதிலே என்னடா இருக்கு?''

மானஸா தோழமையுடன் ஜோதியின் தோள்களைப் பற்றிக் கொண்டாள்.

''ரெண்டு வருஷம்ங்கறது பெரிய இடைவெளியே அல்ல ஜோதி. அப்படித் தோன்றினால், டாக்டரை கன்சல்ட் பண்ணலாமே!'' என்று கூற... ஜோதியின் முகம் வெளிறியது.

ராம்மோகன் மனைவியை கனிவுடன் பார்த்து விட்டு, ''பதினஞ்சு, இருபது வருஷமே ஆனாலும் பரவாயில்லை. காத்திருப்போம். என்னைப் பொறுத்தவரை இது ஒரு பெரிய விஷயமே இல்லை. என் வொய்ஃப்தான் எப்பவும் கவலைப்பட்டுக்கிட்டிருப்பா. கண்டிப்பாய் எங்களுக்கு குழந்தை அதுவும் ஒண்ணு ரெண்டு இல்லே... அஞ்சு குழந்தைங்க பிறக்கும். நான் தான் ஒத்தையா தனியா வளர்ந்துட்டேன். என் குழந்தைங்க அந்த கஷ்டத்தை அனுபவிக்கக் கூடாது.''

''என்னது அஞ்சா? இப்பல்லாம் பணக்காரங்க கூட ஒண்ணே ஒண்ணு, கண்ணே கண்ணுன்னு லிமிட் வச்சுக்கறாங்க. நீ என்னடான்னா குட்டி நர்சரி ஸ்கூல் வைக்கிற அளவுக்கு பெத்துக்கறேங்கறே?''

''நான் விளையாட்டுக்கு சொல்லலே சந்தர்... சீரியஸாதான். ஜோதி தாங்குவாள்னா இன்னும் கூட பெத்துக்குவேன். வீடு முழுக்க என் குழந்தைங்க ஓடியாடி விளையாடணும். கண்ணாடிப் பொருட்களை போட்டு உடைக்கணும். எங்கம்மா அதுங்களோட மல்லுக்கட்ட முடியாம, விரட்டி, விரட்டி அலுத்துப் போய் உட்காரணும். இன்னும்... இன்னும் ஏகப்பட்ட கற்பனை இருக்கு சந்தர். அது அத்தனையும் நிஜமாகும். அதுக்காக எத்தனை வருஷம் வேணும்னாலும் காத்திருப்போம்!'' என்றான் நம்பிக்கையும், உறுதியுமாய்.

அன்றிரவு... ராம்மோகனின் கனவில் ஒரு குழந்தை அவனை நோக்கி கைகளை நீட்டியபடி ஓடி வருகிறது. தாங்கமாட்டாத மகிழ்ச்சியுடன் நள்ளிரவு என்பதையும் பொருட்படுத்தாமல், ஆழ்ந்த உறக்கத்திலிருந்த ஜோதியை எழுப்பி... தான் கண்ட கனவினை சொல்லி மகிழ்கிறான். ஜோதிக்கும் உறக்கமெல்லாம் பறந்துப் போக வெகுவாய் மகிழ்கிறாள்.

புளியிலிருந்த கொட்டைகளை பிரித்தெடுத்துக் கொண்டிருந்த பார்வதியை அழைத்தாள் எதிர்வீட்டு புஷ்பாவதி.

''பார்வதி... பார்வதி...''

''என்னக்கா?''

''உனக்கு போன் வந்திருக்கு. உன் பொண்ணு தாமரை லைன்ல இருக்கா... சீக்கிரம் வா!''


''தாமரையா?'' பதற்றத்துடன்

## விந்தையான கம்ப்யூட்டர்

தைவான் நாட்டின் டாடங் கம்ப்யூட்டர் கம்பெனியின் அதிநவீன மாத்திரை கம்ப்யூட்டர் மற்றும் டெலிவிஷனுடன் (TABLET PC&TV)கூடிய இந்தக் கம்ப்யூட்டர் தைபேய் நகரில் நடைபெற்ற உலக வர்த்தகக் கண்காட்சியில் எல்லோரையும் பெரிதும் வியப்புறச் செய்துவிட்டது.

இந்த அதிசய டூ-இன்-ஒன் கம்ப்யூட்டருக்கு கீபோர்டோ அல்லது உரியபட்டன்களோ தேவையில்லை. இதற்கென்றுள்ள பிரத்தியேக இடத்தில் பேனாவினால் தொட்டால் போதும் கம்ப்யூட்டரை, டெலிவிஷனை இயக்கி புரோகிராமும் செய்து கொள்ளலாம். விவரங்களையும் தெரிந்து கொள்ளலாம். நிகழ்ச்சிகள் மற்றும் படங்களும் பார்த்துக் கொள்ளலாம். இது விந்தையான கம்ப்யூட்டர்தானே?

-இளசை ஜமால், ரியாத்.



எழுந்தவள் கைகழுவ ஓடினாள். ''இதோ வந்துட்டேன்க்கா... வைச்சிட வேணாம்னு சொல்லு.''

''இத்தனை நாளா இங்கே வந்து எல்லோருக்கும் தலைவலி தந்தா... இப்ப எதிர்வீட்டுக்காரம்மா மாட்டிக்கிட்டாங்களா? அளவுக்கு மிஞ்சினா அமிர்தமும் விஷம்தான். சொல்லி வைங்க உங்க பொண்ணுக்கிட்டே... அவங்களை அடிக்கடி டிஸ்டர்ப் பண்ண வேண்டாம்னு!'' டி.வி. பார்த்துக் கொண்டிருந்த சாந்தி, அதிலிருந்து பார்வையை எடுக்காமலேயே ஏளனமாய் கூறினாள்.

இந்த பேச்சொன்றும் புதிதில்லையே. அதை பெரிதுப்படுத்தாமல் ஓடினாள் எதிர்வீட்டிற்கு.

''ஹலோ... அம்மா பேசறேன் தாமரை!''

''அம்மா... நல்லாருக்கியாம்மா?''

''நீ எப்படியிருக்கே... அதை முதலில் சொல்!''

''நல்லாருக்கேன்னு சொல்ல ஆசை... முடியலியேம்மா!''

''இன்னுமாடி உன் பிரச்சினை தீரலை?''

''அது அனுமார் வால்ம்மா!''

''நீ கோபப்படாம பொறுமையா உன் புருஷன்கிட்டே எடுத்துச் சொல்லும்மா!''

''மூணுமுறை முகத்தில் அடித்தால், புத்தருக்கும் கோபம் வரும்மா! அப்பா, அம்மா, தம்பி எல்லாரும் முக்கியமானவங்கதான்... மறுக்கலே. ஆனா அவங்க மேலே வச்சிருக்கிற நம்பிக்கையிலே கொஞ்சமாவது என் மேலே இருக்க வேணாமா? போம்மா... எல்லாம் வெறுத்துப் போச்சு.''

''தா...ம...ரை!''

''பயப்படாதேம்மா... உனக்கு சங்கடம் தர மாட்டேன். அங்கே வந்துட மாட்டேன். இன்னைக்கு என் பிரச்சினைக்கெல்லாம் ஒரு தீர்வு வச்சிருக்கேன்''

''புதிராப் பேசறே... பயமா இருக்கு!''

''பயப்பட ஒண்ணுமில்லேம்மா. அந்தப் பொறுக்கி... என் கொழுந்தன் இன்னைக்கு எனக்கு கெடு வச்சிருக்கான்ம்மா. என் புருஷன் வேலை விஷயமா அரக்கோணம் போயிருக்கார். அது அவனுக்கு வசதியாப் போச்சு. நான் அவனுக்கு உடன்படணுமாம்... இல்லேன்னா நான்தான் தப்பா நடக்க முயற்சிப் பண்ணினேன்னு என் மேலேயே பழியைப் போட்ருவானாம். விடமாட்டேன்ம்மா... இன்னைக்கு அவனுக்கு ஒரு தண்டனை தராம விடமாட்டேன்!''

''பாவிங்களா... அக்கிரமமா இருக்கே? இதோப் பார் தாமரை. நீ பாட்டுக்கு போலீஸ் ஸ்டேஷன் அது இதுன்னு போய்டாதே... குடும்ப கவுரவம் சந்திக்கு வந்துடும். நீ கிளம்பி இங்கே வா! நான் கோவிந்த்கிட்டே சொல்லி...''

''வேண்டாம்மா! அங்கே வந்து அசிங்கப்பட நான் தயாரா இல்லே. நான் போலீஸ் ஸ்டேஷனுக்கெல்லாம் போக மாட்டேன்ம்மா! இங்கே நானே கோர்ட், நானே நீதிபதி''

''என்னென்னவோ பேசறே... ஒண்ணுமே புரியலே. அப்புறம் இங்கே அடிக்கடி போன்...''

''பண்ண மாட்டேன்ம்மா... இனிமே பண்ணவே மாட்டேன். உடம்பைப் பார்த்துக்க. ஜோதியை நான் ரொம்ப விசாரிச்சேன்னு சொல்லு... வச்சிடவா?''

வைத்து விட்டாள்.

பார்வதிக்கு நெஞ்சுக்குள் என்னமோ பிறாண்டியது. ஒரு மூச்சு அழவேண்டும் போல் இருந்தது.

அந்த உணர்வுகளுக்கு மறுநாள் அர்த்தம் புரிந்தது.

தினசரிகளில் தலைப்புச் செய்தியாகி இருந்தாள் தாமரை.

இளம்பெண் தற்கொலை! கற்பழிக்க முயன்ற கொழுந்தனை அரிவாள்மணையால் வெட்டிக் கொலை! கணவர், மாமனார், மாமியாரிடம் விசாரணை. தாமரையின் கடிதம் சிக்கியது.

பார்வதி மயங்கி விழுந்தாள்.



## 8

முகத்தில் பூத்த ஏகப்பட்ட வியர்வைப் பூக்களோடு அந்த பிரபலமான ஜோதிட நிலையத்திலிருந்து வெளிப்பட்டாள் வேதநாயகி. நெஞ்சை கப்பென்று ஏதோ அடைத்துக் கொள்வதுப் போல் இம்சித்தது. கர்ச்சீப்பால் முகம் கழுத்தை துடைத்துக் கொண்டாள்.

எதிர்ப்பட்ட ஆட்டோவில் ஏறி வீட்டிற்கு வந்தாள்.

வீடு வந்தது. டிரைவருக்கு பணத்தைக் கொடுத்து அனுப்பி விட்டு, அப்படியே நின்று வீட்டைப் பார்த்தாள்.

பிரம்மாண்டமாக இல்லாவிட்டாலும் ஒன்றரை கிரவுண்டில், முன்புறம் சிறியதாய் தோட்டத்துடன் கட்டப்பட்ட கச்சிதமான அழகிய வீடு. ஒருபக்கம் மகன் புதியதாய் வாங்கிய கார். அழகாய் பூக்களும், காய்களுமாய் ரம்மியமான சிறிய தோட்டம். மகன் ஆசையாய் கட்டிய வீடு. மாடியில் குழந்தைகளுக்கென்று இரண்டு அறைகளும் உண்டு. சுவற்றில் சிண்ட்ரெல்லா கதையின் ஓவியம். கூரை சுவற்றில் ஸ்கை ரூஃப். இரவில் விளக்கை அணைத்தால் வானம் அப்படியே பெயர்ந்து வந்ததுப்போல் நிலாவும், நட்சத்திரங்களும், மேகங்களும், கோள்களும் கண்ணைப் பறிக்கும்.

'இவை அனைத்தும் பயனற்றுப் போகப் போகிறதா? என் பிள்ளையோடு என் சந்ததி அழிந்துப் போய்விடுமா? என்னை பாட்டி என்றழைக்க ஒரு கண்மணி வந்து பிறக்கவே பிறக்காதா?'

உடல் நீரெல்லாம் வற்றிப் போனதுப் போல் தொய்ந்துப் போனாள் வேதநாயகி.

ராம்மோகன் யாரிடமோ செல்லில் பேசியபடி லுங்கி, பனியனோடு அறைக்குள்ளிருந்து வெளிவந்தவன், ''ஒன் செகண்ட் ப்ளீஸ்'' என்று கூறிவிட்டு அம்மாவை ஆச்சர்யமாய் பார்த்தான்.

''எங்கேம்மா போய்ட்டு வர்றே? ரொம்ப நேரமா ஆளே காணோம்?''

''அ... அது வந்து...''

''கோவிலுக்கா? இருக்காதே... இன்னைக்கு திங்கட்கிழமை... போகமாட்டே. வேறெங்கேப் போய்ட்டு வர்றே?''

''சும்மா கோவிலுக்குதான் போய்ட்டு வர்றேன். நீ பேசு.'' என்று கூறிவிட்டு அவனைத் தாண்டி சென்றாள்.

'சொல்லி விடலாமா? ஜோசியர் சொன்னதை அப்படியே சொல்லி விடலாமா? வேண்டாம்... இன்னைக்கு வேண்டாம்.'

இரவில் பெயருக்கு சாப்பிட்டு விட்டு படுத்தவளுக்கு நெஞ்சுப் பொங்கியது.

எப்போதும் இரவில் பாலில் டி.புரோட்டீன் கலந்து பதமாய் ஆற்றி மாமியார் தூங்கினால் கூட எழுப்பி குடிக்கத் தருவாள் ஜோதி.

அன்றும் ஒருக்களித்து படுத்திருந்தவளை தொட்டு எழுப்பினாள்.

''அத்தை... பால் சாப்பிடுங்க!''

''வச்சிட்டுப் போ!''

''சரிங்கத்தை!'' வைத்து விட்டு நகர்ந்தாள்.

'உன் பிள்ளை ஜாதகப்படி அவருக்கு குழந்தைப் பிறக்க வாய்ப்பே இல்லை!' ஜோதிடரின் கணீர் குரல் செவிகளில் மீண்டும், மீண்டும் முட்டி மோதியது.

பலவித வேதனைகளுடே எப்போது தூங்கினாளோ? காலையில் ராம்தான் வந்து எழுப்பினான்.

''என்னம்மா உடம்பு, கிடம்பு சரியில்லையா? மணி எட்டாகப் போகுது... எப்பவும் இவ்வளவு நேரம் தூங்கமாட்டியே. நைட்டு வச்ச பால் கூட அப்படியே இருக்கு. ஏன் குடிக்கலே?'' கவலையுடன் விசாரித்தான்.

''ஒண்ணுமில்லே ராம். தூங்கிட்டேன்.''

''உண்மையிலேயே உடம்புக்கு ஒண்ணுமில்லையே?''

''இல்லேப்பா... கிளம்பிட்டியா?''

''ஆமாம்மா... கடைக்கு புறப்படப் போகிறேன். இதோ ஜோதி ரெடியாய்ட்டிருக்கா. வந்ததும் கிளம்பிடுவேன். ஹாட்பேகிலே டிபன் வச்சிருக்கா. குளிச்சிட்டு சாப்ட்ரும்மா!''

''ரா... ராம்!''

''என்னம்மா?''

''உ... உன்கிட்டே கொஞ்சம் பேசணும்.''

''சொல்லும்மா... என்ன விஷயம்?''

''ஜோதியப் போய்ட சொல்லு... நீ இரு!''

''ஏம்மா?''

''காரணமாகதான்!''

அம்மாவை யோசனையுடன் பார்த்தபடி, ஜோதி மனம் நோகாதபடி ஒரு காரணம் சொல்லி அனுப்பி விட்டு, அம்மாவின் அருகில் வந்தமர்ந்தான்.

''சொல்லும்மா!''

''நா... நான் நேத்து ஜோசியர்கிட்டே போயிருந்தேன். உன் ஜாதகத்தை காட்டினேன்.''

''எதுக்கும்மா?'' கண்கள் இடுங்கின.

''எப்ப குழந்தைப் பிறக்கும்னு...?''

''அதை ஜோசியர்கிட்டே போய் கேப்பாங்களாக்கும்.''

''உனக்கு நம்பிக்கையில்லே... ஆனா எனக்கிருக்கே.''

''சரி... அதுக்கென்னம்மா?''

''உ... உனக்கு குழந்தையே பிறக்காதாம். கட்டினவளோட தரித்திரம் உனக்கு தடையா...''

''போதும் நிறுத்தும்மா. உன்னை புண்படுத்தறேன்னு நினைக்காதே... எனக்கு இதிலெல்லாம் நம்பிக்கை இல்லே. கண்டிப்பா எனக்கு குழந்தைப் பிறக்கும். இந்தப் பேச்சை இத்தோட விட்ரு. டைமாச்சு... நான் கிளம்பறேன்'' எரிச்சலுடன் புறப்பட்டான்.

வேதநாயகியின் டென்ஷன் மேலும் கூடிற்று.

கடைக்கு சென்றபின் ராம்மோகனின் கவனமெல்லாம் சிதறிப் போனது.

'இதென்ன புதுக்குழப்பம்? சலனமின்றி ஓடும் குளத்து நீரில் ஜோதிடம் என்ற கல்லை ஏன் எறிகிறார் அம்மா? இதனால் நிம்மதியான குடும்

பத்தில் சலனம் ஏற்படுமோ?'

அவன் அஞ்சியதுப் போல்தான் நடந்தது. வேதநாயகி அத்துடன் விட்டுவிடவில்லை. அவன் தலை தெரியும் போதெல்லாம் சாவிக் கொடுத்த பொம்மையை போல் அதையே பேசினாள்.

''இதோப் பார் ராம். உனக்கு இதிலெல்லாம் நம்பிக்கை இல்லாமப் போகலாம். ஆனால், எனக்கு மலையளவு நம்பிக்கை இருக்கு. என் பரம்பரை உன்னோடு முடிஞ்சுப் போய்டுமோன்னு பயமாயிருக்கு.''

''அம்மா... நீ நினைக்கிற மாதிரி எல்லாம் எதுவும் நடக்காதும்மா. ஜோசியக்காரன் சொல்றதெல்லாம் நடக்கும்னா... எல்லோரும் ஏன் கடவுளைக் கும்பிடறாங்க? ஜோசியக்காரனுக்கு கோவில் கட்டி, பாலாபிஷேகம், சந்தன அபிஷேகம்னு பண்ணிட மாட்டாங்களா? அவங்களுக்கு இதைவிட்டா வேற பொழைப்பு ஏது? மக்களை பயமுறுத்தி, எதையாவது சொல்லி குழப்பி, பரிகாரம் அது இதுன்னு ஆயிரக்கணக்கிலே சம்பாதிச்சாகணும். இல்லேன்னா... அவன் வீட்ல அடுப்பெரியாதே? ஒரு மனுஷனோட விதியை... அட்லீஸ்ட் கெஸ் பண்ணி சொல்றதுக்குகூட எந்த ஒரு சராசரி மனுஷனுக்கும் சக்தி இல்லேம்மா. ஒன்பது கோள்களை கட்டம் போட்டு கணக்கு சொல்லிதானே ஜோசியம் சொல்றாங்க? பத்தாவதா ஒரு கோளை கண்டுபிடிச்சிருக்காங்களே... அதை எந்த கணக்கிலே சேர்க்கப்போறாங்க?''



''நீ வியாக்கியானம் பேசாதே. என்னை சமாதானப்படுத்திடலாம்னு நினைக்காதே! ஒரு பிள்ளை வயித்துப் பேரக்குழந்தையை கொஞ்ச அதிர்ஷ்டம் இல்லே. சரி... அடுத்தப் பிள்ளையோட குழந்தையிருக்கேன்னு சமாதானப்படுத்திக்க நானென்ன ரெண்டு மூணா பெத்தேன்? உன்னை மட்டும்தானே?''

''சரி... இப்ப என்னை என்னப் பண்ணனும்ங்கறே? ஜோசியர் கால்ல வந்து விழச் சொல்றியா? பரிகாரம் பண்ணச் சொல்றியா?''

''நான் அப்படி சொல்லலியே... டாக்டர் கிட்டே போகலாம்னு சொல்றேன்.''

''அ...ம்...மா!'' என்றதிர்ந்தான்.

''பிரச்சினை என்னன்னு தெரிஞ்சுக்கலாமே?''

''அம்மா... கல்யாணமாகி ரெண்டு வருஷம்தாம்மா ஆச்சு. ஏன் அவசரப்படறே?''

''என் கவலை உனக்கு தெரியாது ராம். நம்ம பரம்புரையிலே யாருக்கும் எந்த பிரச்சினையும் இருந்ததில்லே. கண்டிப்பா உனக்கு எந்த குறையும் இருக்கப்போறதில்லே.''

ராமின் உள்ளம் தடதடத்தது.

'அம்மா என்ன சொல்ல வருகிறாள்? பிரச்சினை என் ஜோதிக்குதான் என்று முடிவேப் பண்ணிவிட்டாளா?'

நல்லவேளை... அந்த நேரம் பார்த்து ராமிற்கு செல்போன் அழைப்பு வந்தது. உடனே கிளம்பியாக வேண்டிய கட்டாயம். போய்விட்டான்.

ஆனால், பொழுது புலராமலாப் போகும்? வேதநாயகிக்காக பூமி அடுத்தநாளை பிரசவிக்காமலா போகும்?

அடுத்த இரண்டாவது நாளில் மகன் முன் திட்டமாய் வந்தமர்ந்தாள் வேதநாயகி.

''என்ன முடிவுப் பண்ணியிருக்கே ராம்?''

''எதைப்பத்திம்மா?''

''ஹாஸ்பிடல் போகணும்னு சொன்னேனே?''

''நான் ரொம்ப பிஸிம்மா. பிஸினஸ் டென்ஷன் வேற. என்னால இதுக்கெல்லாம் அலைய முடியாது. கொஞ்சநாள் போகட்டும். அப்புறம் பார்த்துக்கலாம்.''

''நீ உன் வேலையைப் பாருப்பா. ஆஸ்பிடலுக்கு ஒருத்தர் வந்தாலே போதும். நான் ஜோதியை கூட்டிக்கிட்டு போகத்தான் போறேன்'' என்றாள் தீர்மானமாய்.

இதை எதிர்பார்க்கவில்லை ராம்.

''கொஞ்சம் டைம் கொடும்மா... யோசிச்சு சாயந்தரத்துக்குள்ளே பதில் சொல்றேன்'' என்று அகன்றான்.

## சிறிய ரெயில்...

**1889**-ம் ஆண்டு ஜெர்மனியில் ஓடிய ஒரு ரெயிலைப் போலவே மினியேச்சரில் செய்து, பெர்லினில் நடைபெற்ற கண்காட்சியில் ஓட வைத்து காட்டினார் ராபர்ட் என்ற வல்லுனர். அரை மீட்டர் நீளமும், எட்டு கிலோ எடையும் கொண்ட இதில் அமர்ந்து பயணித்த காட்சி அனைவரையும் அதிசயப்பட வைத்தது.

- பார்த்தசாரதி.



'ஏன் அம்மா பிடிவாதமாய் இருக்கிறாள். அம்மா சொல்வதை சாதாரணமாய் விட்டுவிட முடியாது. ஜோதியை டாக்டரிடம் அழைத்துச் சென்று பரிசோதிப்பாள். ஒருவேளை, எதிர்பாராதவிதமாக அவளுக்கு குறை என்று டாக்டர் கூறிவிட்டால்? நினைத்துப் பார்க்கவே கொடுமையாக இருக்கிறதே! நான் அதை பெரிதாக எடுத்துக் கொள்ளப்போவதில்லை. ஆனால், அம்மா? என்னதான் மருமகள் மீது பாசமாய் இருந்தாலும், அவளால் இனி ஒரு குழந்தையை பெற்று கொடுக்க முடியாது என்ற ஒரே காரணத்திற்காக வெறுத்து விட்டால்?'

பதறினான், குழம்பினான். தீவிரமாய் யோசித்து ஒரு முடிவுக்கு வந்தான்.

'நான் ஜோதியை நேசிக்கிறேன். ஜோதி முக்கியமா, குழந்தை முக்கியமா? என்ற கேள்வியை முன் வைத்தால்... ஜோதிதான் முக்கியம் என்பேன். அவளும் அப்படித்தான். என்மீது உயிரையே வைத்திருக்கிறாள். எனக்கு குறை என்றால்... கண்டிப்பாய் முன்பை விட அதிகம் என்னை நேசிப்பாள். அம்மாவுடன் ஹாஸ்பிடலுக்கு சென்றால்... பிரச்சினைதான். ஜோதியை பத்து நாளைக்கு அவள் அம்மா வீட்டில் தங்க வைத்து, இருவரும் டெஸ்ட் பண்ணி ரிசல்ட்டை கொண்டு வந்து வாயை அடைத்து விடலாம். தாமரையின் அகால மரணத்தால் வேதனையில் வெந்து ததும்பும் அத்தைக்கும், ஜோதியின் அருகாமை ஒரு ஆறுதலாய் இருக்கும்.'

''சரிம்மா... நாங்க ரெண்டு பேரும் டெஸ்ட் பண்ணிக்கறோம். ரெண்டு மூணு நாள் டைம் கொடு. சிட்டியிலே எது நல்ல ஹாஸ்பிடல்னு விசாரிச்சிட்டு போறேன். இப்ப சந்தோஷமா?''

அந்த வரைக்கும் சம்மதித்தானே என்ற ஆறுதலுடன் சரியென தலையாட்டினாள் வேதநாயகி.

வீட்டில் பத்துநாட்களாய் நடந்த இந்த கலந்துரையாடல் நிகழ்ச்சியை ஜோதியும் கேட்டுக் கொண்டிருந்தாள்.

அன்றிலிருந்து இதயம் படக்... படக் என துடித்துக் கொண்டுதானிருந்தது.

'இது எதில் கொண்டு போய் முடியும்? குறை எனக்கென்றால்? என்னாகும்?' சட்டென உடல் முழுக்க ஜுரம் பரவியது.

'ஏற்கனவே மாமியாருக்கு என்னைக் கண்டால் ஆகாது. எனக்கு எதிராய் ரிசல்ட் வந்துவிட்டால், என் வாழ்க்கை முடிந்தது. அடுத்த நிமிடமே வீட்டை விட்டு வெளியேற்றுவாள்.'

அதீத கற்பனையும், பயமும் ஜோதியின் உடல்நிலையை பாதித்தன.

கவலைப்பட்டான் ராம். டெஸ்ட் பிரச்சினைப் பற்றி விலாவரியாக மனைவியிடம் பேச அச்சப்பட்டான். அதே சமயம் தன் முடிவில் தெளிவாயிருந்தான்.

இதுதான் சமயம் என்று மனைவியை அம்மா வீட்டில் விட்டான்.

''ஜோதிக்கு உடம்புக்கு முடியலேம்மா. அவளை உடனிருந்து யாராவது பார்த்துக்கணும். உனக்கும் முடியாதப்ப... உன்னாலேயும் பார்த்துக்க முடியாது. அதான் அவளை அவங்கம்மா வீட்லே பத்துநாள் விட்டுட்டு வரலாம்னு இருக்கேன். நாங்க டெஸ்ட் பண்ணப்போகிற பெஸ்ட் ஹாஸ்பிடல் கூட அவங்க ஏரியா பக்கத்திலே தான் இருக்கு. அப்படியே முடிச்சிட்டு வந்துடறோம். தாமரையோட இழப்பால அத்தை ரொம்பவே நொடிச்சுப் போயிருக்காங்க. ஜோதியை பார்த்தா... அவங்களுக்கும் ஆறுதலா இருக்கும். என்னம்மா சொல்றே?''

''சரிதான்ப்பா... நீ சொல்றதும் சரிதான்!'' என்றாள் அரைகுறை மனதோடு.




மகளையும், மருமகனையும் கண்டதும் துவண்டுப் போயிருந்த பார்வதி மகிழ்ந்தாள்.

''வாங்க மாப்பிள்ளே... வா ஜோதி!''

''எப்படிம்மா இருக்கே?'' தாயைக் கண்டதும் கண்கள் கலங்கி விட்டன ஜோதிக்கு.

பார்வதியின் கண்ணீர்தான் ஜோதியின் கேள்விக்கு பதிலாய் அமைந்தன.

சாந்தி வாயெல்லாம் பல்லாக வரவேற்றாள்.

''வாங்க... வாங்க... கார் புதுசுப் போலயி

ருக்கு?''

''ஆமாம்... இப்பதான் வாங்கினேன். மச்சான் இல்லையா?''

''வேலைக்கு போயிருக்கார். வர்றதுக்கு அஞ்சாறு மணியாகிடும். நீங்க இருந்து சாப்பிட்டுதான் போகணும்''

''கவலையேப் படாதீங்க. ஜோதி பத்துநாள் இங்கேதான் இருக்கப் போகிறா. அம்மா தனியா இருக்கிறதால நான் இங்கே தங்க முடியாது. ஆனா, தினமும் இங்கே வந்துட்டுதான் போவேன். கண்டிப்பா சாப்பிடுவேன்.''

''ரொம்ப சந்தோஷம். ஜோதி இங்கே தங்கப்போறது... ரெட்டிப்பு சந்தோஷம். கார்ல ஏசிக் கூட இருக்கா?''

''ஆமாங்க!''

பார்வதியின் மனசு குமைந்தது.

'இதே கரிசனத்தை ஒரு நாளாவது தாமரையின் மீது காட்டியிருப்பாளா? என் கண்மணி, நான் பெற்ற செல்வம் ஒதுங்க இடம் இல்லாததால் தானே ஒரேயடியாய் போய் சேர்ந்து விட்டாள். பணம்! அதுதானே உறவுகளை சேர்த்து வைக்கும் சங்கிலியாக இருக்கிறது? அன்பிற்கும், பாசத்திற்கும் மதிப்பில்லையே!'

அதன்பின் மாமியாரிடம் ஆறுதலாய் பேசி விட்டு புறப்பட்டு போனான்.

ஜோதி, தாமரையின் நினைவுகளை பகிர்ந்து சகோதரிக்காக அழுதுவிட்டு, தன் பிரச்சினைக்கு வந்தாள்.

அவள் வந்ததன் நோக்கம் அறிந்ததும் பதை பதைத்துப் போனாள் பார்வதி.

'இதென்ன புதுகுண்டு?'

''என்ன சொல்றே ஜோதி?''

''ஆமாம்மா... யாரோ ஒரு ஜோசியக்காரன் சொன்னானாம். இவருக்கு புத்திர பாக்கியமே இல்லையாம். அதுக்கு தடையா இருப்பது நான் தானாம்.''

''மாப்பிள்ளைக்குதான் இதிலெல்லாம் நம்பிக்கை இல்லையே!''

''அவர் இப்பவும் நம்பலேம்மா. அத்தைதான் விடாப்பிடியா இருக்காங்க. 'நம்ம பரம்பரையிலே யாருக்கும் இப்படி ஒரு நிலைமை வந்ததில்லே. இப்பவும் நம்பறேன். உனக்கு எந்த குறையும் இருக்காது. ஜோதிக்கு இருக்கதான் வாய்ப்பிருக்கு. ஜோசியத்தை நம்ப வேண்டாம். மருத்துவத்தை நம்பறேயில்லே. அப்ப கண்டிப்பா பரிசோதனை பண்ணியே ஆகணும். நீ அழைச்சிட்டுப் போகலேன்னா... நான் ஜோதியை ஆஸ்பிடலுக்கு கூட்டிட்டுப் போவேன்'னு ஒரே அடம். அதான் அவர் என்னை இங்கே கொண்டு வந்து விட்டிருக்கார். நாளன்னைக்கு பவித்ரா ஆஸ்பிடல்ல ரெண்டு பேருக்கும் டெஸ்ட். அப்பாய்ண்ட்மென்ட் வாங்கியாச்சு!''

''எனக்கு நெஞ்செல்லாம் அடைக்கிற மாதிரியிருக்கு. கொஞ்சம் தண்ணி எடுத்துட்டு வா ஜோதி!''

விரைந்து சென்று குவளையில் எடுத்து வந்தாள். குடித்து தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டாள்.

ஜோதி அம்மாவின் நெஞ்சை நீவி விட்டாள்.

''என்னம்மா செய்யுது?''

''ஒண்ணுமில்லே... தண்ணி குடிச்சதும் சரியாப் போய்டுச்சு. கொஞ்ச நேரம் படுத்து எந்திரிச்சா சரியாப் போய்டும்.'' அப்படியே தரையில் படுத்துக் கொண்டாள்.

ஜோதி அம்மாவை கவலையுடன் பார்த்தாள்.

**கா**ரிலிருந்து ராமும், ஜோதியும் இறங்கினர்.

பவித்ரா மருத்துவமனை!

தமிழிலும், ஆங்கிலத்திலும் பித்தளை போர்டு வெயிலில் பளபளத்தது.

சுறுசுறுப்பாய் இயங்கிக் கொண்டிருந்த மருத்துவமனை படுசுத்தமாய் இருந்தது.

மனைவியின் கையைப் பற்றிக் கொண்ட ராம்... அவளின் நடுக்கத்தை உணர்ந்தான்.

''இந்த ஹாஸ்பிடலைப் பொறுத்தவரை வேரியேஷன் தப்பாகாது. கரெக்டா சொல்லிடுவாங்க. பயப்படாதே ஜோதி. நம்ம ரெண்டு பேருக்கும் எந்த குறையும் இருக்காது. நமக்கு பாஸிட்டிவான பதில்தான் வரும். இந்த டெஸ்ட் கூட அம்மாவோட நச்சரிப்புக்காகதான். மத்தபடி எனக்கு துளியும் விருப்பமில்லே. அதை நீ புரிஞ்சுக்கணும்.''

கணவனை நன்றியுடன் ஏறிட்டாலும்... மனசென்னவோ துடியாய் துடித்துக் கொண்டுதானிருந்தது.

ஜோதி புரட்சிப் பெண் அல்ல. சாமானியமும், சாதுர்யமும் நிறைந்த புத்திசாலியும் அல்ல. புழுவையும், கரப்பான் பூச்சியையும் பார்த்து அலறும் சராசரிக்கும் கீழான சாதாரணப் பெண். அவளுக்குத் தெரிந்த ஒரே தாரக மந்திரம் அன்பு மட்டும்தான். அந்த அன்பு எந்தவிதத்திலும் தைரியத்தை தந்துவிடவில்லை.

பரிசோதனை முடிந்தது.

மறுநாளே ரிப்போர்ட் தருவதாக கூறிவிட்டார்கள்.



அவளை வீட்டில் கொண்டு வந்துவிட்டான் ராம்மோகன்.

''எல்லாமே... நல்லதே நடக்கும்... கண்டதையும் போட்டு குழப்பிக்காதே... ம்...!'' மனைவியின் கன்னத்தை செல்லமாய் தட்டினான்.

''ம்!''

''சரி... வரட்டுமா? ஏகப்பட்ட வேலையிருக்கு!''

''சாப்பிட்டு போகலாமே மாப்பிள்ளை?''

''டைமாய்டுச்சு... நைட்டுக்கு வந்து சாப்பிட்டுட்டுப் போறேன் அத்தை. வரட்டுமா ஜோதி?''

''ம்!'' என்று கையசைத்து விடைகொடுத்த ஜோதிக்கு அவனை அனுப்ப மனசே வரவில்லை. அருகில் அமரவைத்து அவனையே பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் போல் தோன்றியது.

போய் விட்டான்.

''என்ன சொன்னாங்க ஜோதி?'' என்று கேட்டாள் அம்மா.

''நாளைக்குதாம்மா தெரியும். ரிசல்ட் நாளைக்குதான்!''

'நாளையா? என் மகளின் தலைவிதி நாளைத் தெரிந்து விடுமா? ஒருவேளை ஜோதிக்கு பாதகமாய் நடந்து விட்டால் என்னாகும்?'

நினைக்கவே பயங்கரமாக இருந்தது.

'தாமரைக்கு புகுந்த வீட்டில் ஒரு வகை பிரச்சினை என்றால்... ஜோதிக்கு வேறு வகைப் பிரச்சினை. ஜோதியின் கணவன் வசதியானவர் என்பதால்தான் சாந்தி அவளை நன்றாக கவனித்துக் கொள்கிறாள். இல்லாவிட்டால் தாமரையைப் போலவே வார்த்தையாலேயே அண்ட விடமாட்டாளே!'

ஜோதிக்கும் உணவு இறங்க மறுத்தது.

மதியம்... அரக்கப்பரக்க வந்தான் ராம்மோகன்.

''ஜோதி, நான் அவசரமா பெங்களூர் புறப்படணும்.''

''என்னங்க... திடீர்னு?''

''என் மாமா பையன் அனுமந்த் பத்தி ஏற்கனவே சொல்லியிருப்பேனே...''

''ஆமாம்!''

''அவனுக்கு காலையிலே ஆக்ஸிடன்ட் ஆகி ரொம்ப சீரியஸா இருக்கானாம்.''

''அடடா...''

''ஹெல்ப்புக்கு யாருமில்லை. உடனே வரச்சொல்லி போன் வந்தது. அம்மாவோட் இப்பவே கிளம்பறேன். வர... எப்படியும் ரெண்டு மூணு நாளாகிடும்.''

''......?!''

''உடம்பைப் பார்த்துக்க. எதையும் போட்டு குழப்பிக்காதே! நாளைக்கு நீயும், அத்தையும் போய் ரிசல்ட் வாங்கிட்டு வந்திடுங்க. நம்ம ரெண்டுபேருக்கும் எந்த குறையுமில்லேன்னுதான் ரிப்போர்ட் சொல்லும். நீயே பார்க்கதானேப் போகிறே?''

''சரிங்க!''

''கிளம்பட்டுமா?''

''பார்த்துப் போங்க!''

''சரிடா!'' சிரித்தபடி அவள் கன்னத்தை ஈரப்படுத்தினான்.

**ம**றுநாள்!

ஜோதிக்கு போன காய்ச்சல் மறுபடி வந்துவிட்டது.

''ஒண்ணும் ஆகாது... ஏன் பயப்படறே ஜோதி?''

''நா... நான் ஒண்ணும் பயப்படலேம்மா!''

''நீ வீட்லேயே இரேன் ஜோதி. நான் போய் ரிப்போர்ட் வாங்கிட்டு வர்றேன்.''

''இல்லேம்மா... அந்தளவுக்கு எனக்கு பொறுமையில்லே! நானும் வர்றேன்.''

இருவரும் புறப்பட்டனர்.

வழியில் இருந்த கருமாரியம்மன் கோவிலுக்குச் சென்று மனமுருக வேண்டிக் கொண்டனர்.

ஹாஸ்பிடல் சென்று கைநடுங்க ரிப்போர்ட்டை வாங்கினாள் ஜோதி.

படித்தவள் வியர்த்து... விறுவிறுத்துப் போனாள்.

''என்ன ஜோதி... ஏன் முகமெல்லாம் ஒரு மாதிரியாயிருக்கு?''

''அம்மா... அம்மா!'' அதற்கு மேல் பேச முடியாமல் காரிடாரிலிருந்த சேரில் அமர்ந்து... விம்மினாள்.

''என்ன ஜோதி?''

''என் தலையிலே இடி விழுந்திடுச்சும்மா!''

''எ... என்னடி சொல்றே?'' உடம்பெங்கும் ரத்தம் வேகமாய் குதியாட்டம் போட்டது பார்வதிக்கு.

''நா... நான்... எனக்குதான்...''

''எ... என்ன?''

''மலடிம்மா... நான் மலடி!''

''இதோப் பார்! கண்ணைத்துடை முதல்ல. எந்திரி வீட்டுக்குப் போகலாம்!''

"போச்சம்மா... என் வாழ்க்கை ஒரு முடிவுக்கு வந்தாச்சு"

"முதல்ல எந்திரி... சொல்றேன்"

ஆதரவாய் சொல்லி மகளை அழைத்துச் சென்றாலே ஒழிய பார்வதி ரொம்பவே ஆடிப் போயிருந்தாள்.

வீட்டிற்கு வந்த பின்பும் ஜோதியின் அழுகை நிற்கவில்லை.

சற்றே கோபமாகவே கண்டித்தாள் பார்வதி.

"இப்ப... அழுறதை ... ாயா.

இல்லையா?"

"முடியலேம்மா... என் இழப்போட வீர்யம் உனக்குப் புரிஞ்சா இப்படி சொல்ல மாட்டே..!"

"முட்டாள்மாதிரி பேசாதே. சாந்தி பார்த்துட்டுப் போகிறா. இந்த டெஸ்ட் விஷயமெல்லாம் அவளுக்குத் தெரியாது."

"தெரியட்டுமேம்மா... நாளைக்கு வெளிச்சத்துக்கு வரப்போகிற விஷயம்தானேம்மா!"

"கொஞ்சம் அமைதியாயிரு... யோசிக்க

ஒரு வழி சொல்றேன்!"

"வழியா? எல்லா வழியும் மூடிப்போச் சம்மா!"

"சும்மாயிருன்னா... கேக்க மாட்டியா?" அதட்டினாள்.

ஜோதிக்கு பாலில் ஒரு தூக்க மாத்திரை கலந்து உறங்க வைத்து... பார்வதி இமைகள் மூடவில்லை.

பலவித யோசனைகள்.

விடியும் போது உறக்கம் வந்து... கூடவே கனவும்!



ராம்மோகனுக்கும், இன்னொரு பெண்ணுக்கும் திருமணம் நடக்கிறது.




**த**டக்,தடக் இதயத்துடிப்புடன் ஜோதிக்கு அன்றைய காலைப் பொழுது விடிந்தது.

பார்வதியின் முகத்தில் ஒரு நிதானம் வந்தமர்ந்திருந்தது. அம்மாவைப் பார்த்த மாத்திரத்தில் ஜோதியின் உதடுகள் அழத் தயாராயின.

''ஏய்... மொதல்ல அழறதை நிறுத்து.''

''எப்படிம்மா அழாம இருக்க முடியும்?''

''மொதல்ல குளிச்சிட்டு, சாப்பிட்டுட்டு வா. நான் இதுக்கு ஒரு நல்ல தீர்வு வச்சிருக்கேன்.''

''என்னம்மா சொல்றே... என்ன தீர்வு அது?''

''நான் சொன்னதை செய்து முடிச்சிட்டு வா... சொல்றேன்.''

அம்மா ஆணித்தரமாக சொல்லவும் ஏதோ ஒரு நம்பிக்கை பரவ... பாபரவென குளித்து முடித்து பெயருக்கு ரெண்டு வாய் அள்ளிப் போட்டுக் கொண்டு அம்மாவிடம் வந்தமர்ந்தாள்.

''இப்ப சொல்லும்மா!'' என்றாள் ஆவலாய்.

''நான் கேட்கிற கேள்விகளுக்கு மட்டும் பதிலைச் சொல்'' என்றவளின் கையில் டெஸ்ட் ரிப்போர்ட் இருந்தது.

''..........''

''உங்க மாமியார் எப்படி?''

''உனக்கு தெரியாதா என்ன? என்னைக் கண்டாலே ஆகாது. என் புருஷனிடம் ஒரு முகத்தையும், என்னிடம் ஒரு முகத்தையும் காட்டறவங்க.''

''உனக்கு குழந்தையே பிறக்காதுன்னு தெரிஞ்சா...?''

''நினைக்கவே பயமாயிருக்கும்மா. எந்த வழியிலாவது என்னை வெளியில் அனுப்பிட்டு அவருக்கு வேற கல்யாணம் பண்ணி வச்சிடுவாங்க. அதுமட்டும் நிச்சயம்.''

''உன் புருஷன் ஒத்துக்குவாரா?''

''என் மேல அவர் ரொம்ப பாசம் வச்சிருக்கார். அதே சமயம் குழந்தைங்கன்னாலும் உயிர். நிறைய குழந்தைகளை பெத்துக்கணும்பார் அடிக்கடி. அம்மா பேச்சை கண்ணை மூடிக்கிட்டு கேட்பார். நானா, அம்மாவான்னு கேட்டா, யோசிக்காம பதில் சொல்வார் 'அம்மாதான் முக்கியம்'னு.''

''அப்ப நான் சொல்றதைக் கேள்!''

''என்ன சொல்லு?''

அடுத்த விநாடி ரிப்போர்ட்டை சுக்கல் சுக்கலாய் கிழித்தாள் பார்வதி.

''ஐயோ... அம்மா என்ன காரியம் பண்ணிட்டே? ஏன் கிழிச்சுப் போட்டே?'' பதறிவிட்டாள் ஜோதி.

''உன் வாழ்க்கை இப்படி சுக்கல், சுக்கலா ஆகிடக் கூடாதுன்னுதான்.''

''..........?!''

''உன் புருஷன் வந்தார்னா நான் பேசிக்கறேன்.''

''என்னன்னு?''

''ஜோதிக்கு எந்த குறையுமில்லையாம். உங்களுக்கு தான் குறைன்னு தெரிஞ்சதும், அந்த வேதனையிலே அழுது ஆர்ப்பாட்டம் பண்ணி ரிப்போர்ட்டை கிழிச்சுப் போட்டுட்டான்னு!''

''அம்மா!'' அதட்டினாள். ''என்ன பேசறோம்னு தெரிஞ்சுதான் பேசறியா? அநியாயமா பொய் சொல்லி அவர் மனசை வேதனைப்படுத்தணுமா?''

''அதனால எந்த பாதகமும் இல்லே. என்னா நீ அவரை விட்டு பிரிஞ்சுப் போறதில்லே. ஆனா, உண்மைத் தெரிஞ்சா என்னாகும்? நீ அங்கே இருக்க மாட்டே... அதைப்புரிஞ்சுக்க.''

''நீ என்ன சொன்னாலும் சரி... நான் ஒத்துக்க மாட்டேன்.''

''போடி அறிவுக் கெட்டவளே! ஆயிரம் பொய் சொல்லி ஒரு கல்யாணம் நடத்தலாம். ஒரு பொய் சொல்லி அந்த கல்யாண வாழ்க்கையை தக்க வச்சுக்கக் கூடாதா? இதிலே என்னடி தப்பிருக்கு? காலம் காலமா கல்யாண வாழ்க்கையிலே பொம்பளைங்க தான் நஷ்டப்படணுமா? காயப்படணுமா? உங்கப்பன் ஒழுங்கா இருந்திருந்தா நான் இப்படி சீரழிவேனா? தாமரையோட புருஷன் அவளை நம்பியிருந்தான்னா, என் பொண்ணை எமனுக்கு வாரிக்குடுத்திருக்க மாட்டேனே! நான் பெத்த பிள்ளை கோவிந்த், என் மருமகள் பேச்சை கேட்கறதால நான் எந்தளவு கஷ்டப்படறேன்னு உனக்குத் தெரியுமா ஜோதி!

உன் புருஷனை குறை சொல்லலே. ரொம்ப நல்லவர்தான். உன்மேலே பாசமா இருக்கிறவர்தான். ஆனா, மாமியார்க்காரிக்கு உன்னைப் பிடிக்கலையே. உன் வாழ்க்கை என் கண்ணெதிரே பாழாப் போறதை பார்த்துக்கிட்டு நான் என்ன பண்றது. சரி, ஆனது ஆச்சு, வந்துடுடின்னு உன்னை எத்தனை காலம் வச்சு என்னால தாங்க முடியும்? கடவுள் எனக்கு மட்டும் சாகாவரம் கொடுத்து படைச்சிருக்கானா என்ன?

வாழ்க்கையிலே ஜெயிக்கணும்னா உங்கண்ணி மாதிரி சாமர்த்தியசாலியா இருக்கணும் ஜோதி. எனக்கும், தாமரைக்கும் அது இல்லே. நீயாவது சாமர்த்தியமா பொழைச்சுக்க. மீறி உன் புருஷன்கிட்டே உண்மையை பேசறேன் பேர்வழின்னு உளறிக் கொட்டினியோ... என்னை உயிரோட வே பார்க்க மாட்டே... சொல்லிட்டேன்.'' என்றாள் உறுதியாக... மூச்சிரைக்க.

''அ...ம்...மா!''

''எல்லாம் உனக்காகதான்டி சொல்றேன். உன்னை பிள்ளைக் குட்டியோடதான் பார்க்க முடியாது. கடைசி வரை புருஷன் கூடவாவது சந்தோஷமா வாழணும்னு ஆசைப்பட மாட்டாளா ஒரு பெத்தவ? பெத்தாதான் குழந்தையா? தத்து எடுத்து வளர்த்துக்கிட்டாப் போச்சு! தாமரை வாழ்க்கைதான் கருகிப்போச்சு. நீயாவது...'' மகளின் முகத்தை இரு கைகளில் தாங்கி அழுதாள் பார்வதி.

ஜோதி பதிலறியாது தவித்துப் போனாள்.

**ரா**ம்மோகனுக்கு வானம் பொல பொலவென இடிந்து தலையில் விழுந்ததுப் போல் துடிதுடித்துப் போய் விட்டான்.

பார்வதிதான் மெல்ல, நாசூக்காய் விஷயத்தைச் சொன்னாள். தாங்க முடியாத வலியால் முகம் சிவந்துப் போக அறைக்குள் புகுந்துக் கொண்டான்.

ஜோதிக்கு அவன் முகத்தை நிமிர்ந்து பார்க்கவே அச்சமாக இருந்தது.

சட்டென எதிர்பாராத ஒரு நொடியில் அவள் மடியில் முகம் புதைத்து அழ ஆரம்பித்தான்.

ஆருயிர் கணவனின் கண்களில் கண்ணீரை, அதுவும் முதன் முதலாக பார்த்த போது இதயமே பிளந்து போவதுப் போலிருந்தது.

''ஐயோ... என்னங்க இது?''

''தாங்க முடியலே ஜோதி. மனசு வலிக்குது. உறுதியா நம்பினேன் ஜோதி. முடிவு ரெண்டு பேருக்கும் பாஸிட்டிவா வரும். அப்படியே நெகடிவா வந்தாலும் குறை உனக்குதான் இருக்கும்னு இந்த ஆணாதிக்க மனசு ஆணித்தரமா நினைச்சது. அப்படி உனக்கு இருக்கும் பட்சத்தில் எங்கம்மாகிட்டே எனக்குதான் குறைன்னு சொல்லி ரெண்டு குழந்தையை தத்தெடுத்து வளர்த்துக்கலாம்னு நிறைய திட்டம் போட்டிருந்தேன். ஆனா...''

கணவன் பேசப் பேச தன்னை புழுப்போல் அருவருப்பாய் உணர்ந்தாள்.

'இவரையா, இவரைப் போயா காயப்படுத்தினேன். எந்த மனைவியும் சொல்லத் தயங்குகிற பொய்யை... இவர் மேல் சுமத்திவிட்டேனே. இந்த பாவத்தை எந்த ஜென்மத்தில் தொலைப்பேன்? உண்மையை சொல்லி விடலாமா? என்னைப்பற்றி என்ன நினைப்பார்? ஜோதியா இப்படி? என்று மட்டமாய் நினைத்து விட்டால்?'

''ஜோதி... ஜோதி... ரொம்ப கஷ்டமாயிருக்கு ஜோதி. நான் ஒண்ணு கேப்பேன்... உண்மைய சொல்லுவியா?''

''என்ன உண்மை?'' பீதியுடன் பார்த்தாள்.

''எ... என்னை வெறுத்துட மாட்டியே!''

''ஐயோ... ஏன் என்னை கொல்றீங்க?'' கணவனை அப்படியே அணைத்துக் கொண்டு அழுதாள்.

'நான் பாவி... கம்பீரமான என் புருஷனை அழவைச்ச சண்டாளி. கண்ணால மெடிக்கல் ரிப்போர்ட்டைப் பார்க்கலே. ஆனாலும் வாயால சொன்னதை நம்பி தன்னை வருத்திக் கொண்டிருக்கிறாரே. இந்த நம்பிக்கை எனக்கேன் இல்லாமல் போய்விட்டது? உண்மையை சொன்னால் அம்மாவையும், என்னையும் மன்னிக்கவே மாட்டார். ஆனால், உண்மையை சொல்லாவிட்டால் என்னை குற்ற உணர்ச்சியே கொன்று விடும். என்ன செய்யப் போகிறேன்? என் சுயநலத்துக்காக இவரை காயப்படுத்தி விட்டேனே... மன்னிப்பே இல்லையே எனக்கு!'

இரவு முழுக்க அரற்றியபடி அழுதுக் கொண்டே இருந்தான் ராம்மோகன். ஜோதிக்கும் குற்ற உணர்ச்சி தூங்கவிடவில்லை. பலதையும் யோசித்து குழம்பிப் போனவள் கணவன் உறங்கிய விடியற்காலையில் தீர்க்கமாய் யோசித்து... அந்த விபரீதமான முடிவிற்கு வந்திருந்தாள்.

ஹாலில்... தூக்கில் தொங்கிக் கொண்டிருந்தாள் ஜோதி.

**எ**ன் ஆருயிர் கணவருக்கு!

உங்களை விட்டு நிரந்தரமாக பிரிந்துப் போகிறேன். அதற்காக என்னை மன்னித்து விடுங்கள். உங்கள் வேதனை என்னைக் கொல்கிறது. அதைப் பார்த்துக் கொண்டிருக்கும் சக்தி எனக்கில்லை. நீங்கள் கண்டிப்பாக... உங்களுக்காகவும், அத்தையை கவனித்துக் கொள்வதற்காகவும் மறுமணம் செய்துக் கொள்ள வேண்டும்.

இது உங்கள் ஜோதியின் ஆசை. நிறைவேற்றுவீர்களா?

பிரியா விடை பெறும்,
ஜோதி!

அந்த கடிதத்தை எத்தனை முறை படித்திருப்பானோ தெரியாது. ஆனால், காகிதம் நைந்து, அழுக்கேறியிருந்தது.

ஒரு மாதமாய் மழிக்கப்படாத முகம், ராம் மோகனை நோயாளியைப் போல் காட்டியது.

'ஏன்... ஏன் ஜோதி? எதற்காக அப்படியொரு மோசமான முடிவெடுத்தாய்? உன்னைப் பிரிந்து என்னால் இருக்க முடியாது என்று தெரிந்தும், எப்படி என்னை விட்டுப் போக மனசு வந்தது? நீ பக்கத்தில் இருந்தால் எதையும் சமாளிப்பேன். என் வேதனைகளை மறப்பேன். ஆனால் வலியை இரட்டிப்பாக்கி விட்டல்லவா போய் விட்டாய்? ஈவிரக்கமில்லாத பாவிடி நீ!' பொங்கி அழுதான்.

அறைப்பக்கமாய் எட்டிப்பார்த்த வேதநாயகி... ஆழ்ந்த பெருமூச்சொன்றை வெளியிட்டபடி நகர்ந்தாள்.

மகன், தனக்குதான் குறை என்று மெடிக்கல் ரிப்போர்ட் சொன்னதாகவும், அந்த வேதனையில் ஜோதி தற்கொலை பண்ணிக் கொண்டதாகவும், தனக்கு தெரிந்த உண்மையை அம்மாவிடம் கூறினான்.

ஆனால், வேதநாயகி நம்பவில்லை. எந்த சூழ்நிலையிலும் கணவனை விட்டு பிரிய நினைக்க மாட்டாள் ஜோதி. அப்படிப்பட்டவள் தற்கொலை செய்துக் கொண்டாள் என்றால்? அவளுக்கல்லவா குறை இருக்க வேண்டும்? தன் கணவனுக்கு குறை என்றால் ஆறுதல் கூறி, அரவணைக்கும் பெண்ணல்லவா அவள்?

அப்படி என்றால்?

முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைக்கிறான் ராம். ஏன்?

குழம்பினாள் வேதநாயகி.




**எ**ட்டு மாதம் றெக்கை கட்டிப் பறந்த சுவடேத் தெரியவில்லை. வியாபாரத்தை கவனித்த நேரம் போக வீட்டிற்குள்ளேயே அடைந்துக் கிடந்தான். அதுவும் தன்னறையை விட்டு வருவதேயில்லை. ஜோதியின் லேமினேட்டட் போட்டோ பெரிய அளவில் மாட்டப்பட்டு... சந்தன மாலைக்குள் சிரித்துக் கொண்டிருந்தவளை பொங்கும் விழிநீரோடு பார்த்துக் கொண்டேயிருப்பான் ராம்.

'ஏன் ஜோதி முட்டாள்தனமான முடிவெடுத்தாய்? என்னைப் பார்க்கிறாய் அல்லவா? எப்படி இருக்கிறேன்? இதற்காகவா? பெரிதாய் லெட்டர் எழுதி வைத்து விட்டுப் போய்விட்டாய். அவசியம் மறுமணம் செய்துக் கொள்ள வேண்டும் என்று. எதற்கு? உன்னிடத்தில் வேறு எவளோ எதற்காக இடம் பெற வேண்டும்? அவ்வளவு வீக்கானவனா உன் கணவன்? ஒருவேளை இவனால் நாம் தாயாக முடியாது என்ற உண்மையை ஜீரணிக்க முடியாமல் என்னை உதாசீனப்படுத்திவிட்டுப் போய்விட்டாயா? ஒன்றுமே புரியவில்லை ஜோதி. ஆனால், எனக்கு நீ வேண்டும் ஜோதி. உன்னை ரொம்ப நேசிக்கிறேன்டா ராஜாத்தி. வந்துவிடேன். ப்ளீஸ் வந்து விடேன்!'

''ராம்...'' அறை வாசலிலிருந்து வேதநாயகி அழைத்தாள்.

'வா... ஜோதி! இல்லேன்னா என்னையாவது உன்கிட்டே அழைச்சிட்டுப் போய்டு'

''ராம்...''

''அ... எ... என்னம்மா?'' அப்போதுதான் கவனித்தான்.

''வாப்பா... சாப்பிடலாம்.''

''எனக்கு பசிக்கலே... நான் அப்புறமா

## கொலஸ்டிராலை கண்டுபிடிக்கும் நவீன கடிகாரம்!

**ல**ண்டன் மாய்ஹறம் எலெக்ட்ரானிக் கம்பெனியினால் அறிமுகம் செய்யப்பட்ட இந்த அதிசயமான கடிகாரத்தைப் போன்ற கருவி நம் உடம்பிலுள்ள கொழுப்பின் அளவை, ரத்த ஓட்டத்தின் வேகம் மற்றும் அழுத்தத்தை துல்லியமாக காட்டக் கூடியதாகும்.

இதன் இரண்டு பக்கமும் உள்ள கருப்பு பட்டனை பெருவிரலினால் அழுத்தினாலே போதும். கொலஸ்டிரால், ரத்த



அழுத்த அளவு தெரிந்துவிடும். டாக்டரிடம் போய் ஒவ்வொரு தடவையும் பணத்தைக் கொடுக்க வேண்டிய அவசியம் கிடையாது.

- இளசை ஜமால், ரியாத்.



சாப்பிடறேன். நீ சாப்பிட்ரும்மா!''

''நீ சாப்பிடற அழகைதான் தினமும் பார்க்கிறேனே. நேத்துக்கூட சாப்பிடாம அப்படியே இருந்தது. நீ உன்னை மட்டும் வருத்திக்கலே... என்னையும் சேர்த்துதான்.''

''சரிம்மா... நான் அப்புறம் கண்டிப்பா சாப்பிடறேன்ம்மா... நீ போய் சாப்பிடு.''

''நீ வர்றியா, இல்லே இங்கேயே சாப்பாடை கொண்டு வரவா?''

''என்னம்மா நீ வேற...'' சலிப்புடன் வெளியில் வந்தான்.

வேதநாயகி மகனுக்கு பரிமாறியபடி ஆதங்கத்துடன் பார்த்தாள்.

கம்பீரமான, அழகான மகன் நோய் கண்டவன் மாதிரி இளைத்து, கறுத்து...

இட்லியை கசப்பு மருந்தை சாப்பிடுவதுப் போல் சாப்பிட்டான்.

''ஓட்டல் பக்கமே போறதில்லையாமே ராம்?''

''ப்ச்... பார்ட்னர்ங்க பார்த்துக்கறாங்கம்மா!''

''என்னப்பா பதில் இது? அதிலே உனக்கும் பங்கிருக்கே? நம்ம தொழிலை நாமளும் உடனிருந்து பார்த்துக்கணுமில்லையா?''

''எதுக்கும்மா சம்பாதிக்கணும்? யாருக்காக சம்பாதிக்கணும்? எனக்கென்ன பொண்டாட்டி இருக்காளா? இல்லே பிள்ளைக்குட்டிங்கதான் இருக்கா?''

''ஜோதி போனது மறக்க முடியாத துக்கம்தான். அதுக்காக வாழ்க்கையே முடிஞ்சுப் போச்சுனு நினைச்சிட முடியும்மா? ரெண்டே ரெண்டு வருஷம் வாழறதுக்கா கல்யாணம்?''

''என்னை பொறுத்தவரை ஜோதிதாம்மா என் வாழ்க்கை. அவ போய்ட்டா... அவளோட என்னோட எல்லாமே போய்டுச்சும்மா!''

''தப்புப்பா... அப்படி நினைக்கறதே தப்பு. மிச்ச வாழ்க்கை வாழ்ந்தாகற கட்டாயத்துல இருக்கறப்ப, அதை சந்தோஷமா நமக்காக வாழறதுல என்ன தப்பிருக்கு. இன்னொரு இட்லி வைக்கவா?''

''வேணாம்மா... போதும்!''

''ரெண்டு இட்லிக்கூட சாப்பிட முடியலே உன்னால. முன்பெல்லாம் ஆர்வமா நாலஞ்சு சாப்பிடுவே'' என்றாள் வருத்தமாக.

''பசிக்கலே... சாப்பிட முடியலே!''

''உன்னைப் பார்க்கவே வயிறு எரியுது ராம். உன்னை நீ மாத்திக்கிட்டுதான் ஆகணும்.''

''..........''

''எனக்கு ஒரே பிள்ளை நீ! உன்னோட என் வம்சம் அழிஞ்சிடக் கூடாது.''

''அம்மா... இந்தப் பேச்சை இத்தோட விட்ரு''

அம்மா எதை சொல்ல வருகிறாள் என்று புரிந்தது. சில நாட்களாகவே அவளின் பேச்சில் மகனின் மறுமணம் பற்றியதாகவே இருந்தது.

''ராம்... உன் வேதனை எனக்குப் புரியாமஇல்லை. ஆனா, அதுக்காக அதையே நினைச்சிட்டிருக்க முடியுமா? உங்கப்பாவும், நானும் மனசொத்து எவ்வளவு சந்தோஷமா வாழ்ந்தோம்? அவரில்லாம நானில்லைங்கற நிலைமையிலேதான் நானிருந்தேன். ஆனாலும், அவர் திடீர்னு என்னை விட்டுப் போனதும், உன்னை மாதிரி தான் துடித்தேன். அதே சமயம் உனக்காக வாழ்ந்தாகணுமேன்னு நான் வாழலே? அதுமாதிரிதான்ப்பா நீயும் வாழணும்! ஜோதியை மறக்கச் சொல்லலே... மறக்கவும் முடியாது. ஆனா நாலு பேரைப் போல நாமளும் வாழ்ந்தாகணும். என்ன வயசாய்டுச்ச உனக்கு? ரதகனவே உனக்கு பொண்ணு தர நீ, நான்னு போட்டிப் போட்டாங்க. இப்பவும் வீடு தேடி ஏகப்பட்ட வரன் வருது. எனக்காகவாவது...''

''அம்மா... இந்த பேச்சை விட்ருன்னு எப்பவோ சொல்லிட்டேன்.''

''இப்படியே பிடிவாதம் பிடிச்சா எப்படி ராம்?''

''இப்ப நிறுத்தப் போறீங்களா, இல்லையா?''

எங்கேர்ந்துதான் அவ்வளவு ஆத்திரம் வந்ததோ? டேபிள் மீதிருந்த தட்டை தள்ளிவிட... கூடவே சாம்பார், சட்னி, இட்லி, தண்ணீர் என நாலாமூலைக்கும் சிதறியது.

எரிச்சலுடன் கையை உதறியபடி வெளியேறினான்.

வேதநாயகி விக்கித்துப் போனாள்.

அந்த சம்பவத்துக்கு பின் வேதநாயகி மகனிடம் பேசுவதை நிறுத்தினாள். ராம்மோகனுக்கு தனிமை தேவைப்பட்டதால், அம்மாவிடம் ஏற்பட்ட வித்தியாசத்தை உணரவில்லை. சாப்பிடும் போதும் அமைதியாய் இருந்தது... அவனுக்கு நிம்மதியைத் தந்தது. பெரும்பாலும் அறைக்கே உணவை அனுப்பி வைத்தாள்.

அன்று...

கடையில்... சரக்குகளை கணக்கெடுத்துக் கொண்டிருக்கும் போது அவன் செல்போன் அலறியது.

வீட்டு வேலைக்காரி சரளாதான் பேசினாள்.

''ஐயா... நான் சரளாப் பேசறேங்க!''

''என்ன சொல்லும்மா?''

''வழக்கம் போல... இன்னைக்கு பதினோரு மணிக்கு வீட்டுக்கு வந்தேனுங்க. பாத்திரமும் ஒழிச்சுப் போடலே, துவைக்கத் துணியும் எடுத்துப் போடலே. இங்கே முடிச்சிட்டு அடுத்த வீட்டு வேலைக்குப் போகணும்மா... சீக்கிரம் எடுத்துப் போடுங்கம்மான்னு சொல்றேன்... அம்மாக்கிட்டேர்ந்து எந்த சத்தமும் இல்லீங்க. மயக்கமாயிருக்காங்க!''

''எ... என்னது? அதை முதல்லேயே சொல்றதுக்கென்ன? இப்படி நீட்டி முழக்கி கதை செல்லணுமா? நான் இப்பவே வர்றேன்...''

உடம்பெங்கும் பதட்டம் பரவ... காரை சீற விட்டுப் பறந்தான்.

அடுத்த பதினைந்தாவது நிமிடம் வீட்டிலிருந்தான். மற்ற நேரங்களில் அரைமணி நேரமாகும்.

வேதநாயகியிடம் எந்த சலனமும் இல்லை. சீரான மூச்சு வந்துக் கொண்டிருந்தது. ஆழ்ந்த மயக்கத்தில் இருந்தாள். எவ்வளவோ முயன்றும் மயக்கம் தெளியவில்லை.

உடனே காரில் அள்ளிப் போட்டுக் கொண்டு ஹாஸ்பிடலுக்கு விரைந்தான்.

ஆபத்தான கட்டத்திலிருப்பதாக சொல்லி, அவசர சிகிச்சை பிரிவில் அனுமதித்தார்கள்.

அதிக சர்க்கரையும், கவலையும் அவள் உடலை வெகுவாக பாதித்திருந்தன. இதயத்திற்கு செல்லும் ரத்தம் சீராக செல்லவில்லை. அதனாலேயே கோமா அளவிற்கு போய்விட்டது.

ஒரு வாரம் ராம்மோகன் நெருப்பின் மேல் நின்றான். ஒரு வழியாய் அவளை காப்பாற்றி விட்டார்கள்.

நினைவு திரும்பியிருந்த அம்மாவை கண்ணீருடன் பார்த்தான்.

அவளோ முகத்தை வேறுபக்கம் திருப்பிக் கொண்டாள்.

அந்த செய்கை ராமை பலமாக தாக்கியது.



## 12

அம்மாவை வீட்டிற்கு அழைத்து வந்திருந்தான். வேதநாயகி குணமாகியிருந்தாலும், அவளால் பிறர் துணையின்றி நடக்க முடியாது. அவளை கவனித்துக் கொள்ள எப்போதும் ஒரு ஆள் தேவைப்பட்டது. ராம்தான் அவளுக்குத் தேவையான உணவை ஊட்டி விட்டான். வேறு வழியின்றி, அவனை ஏறிட்டு பார்க்க பிடிக்காமல் கண்களை மூடிக்கொண்டோ, வேறு பக்கம் பார்த்து கொண்டோதான் சாப்பிடுவாள்.

அவனாக வலியப் பேசினாலும், வேதநாயகியின் வாயிலிருந்து ஒரு வார்த்தைப் பெயராது.

தான் மிக மிக நேசித்த தாய் முகம் கொடுத்துப் பேசாத கொடுமையை அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

அன்று கேட்டே விட்டான்.

''ஏம்மா என்னை வதைக்கிறே? உனக்கு நான், எனக்கு நீ. நமக்கு நம்மளை விட்டா வேறு யாருமில்லே. ஆனா, நீ என்கிட்டே பேசமாட்டேங்கிறே! மனசை அறுக்குதும்மா உன்னோட உதாசீனம்!''

''ஏம்ப்பா பேசணும்? நீதான் ரொம்ப மாறிட்டியே. அடிக்கடி கோபம் வருது. சாப்பாடு, தட்டையெல்லாம் தூக்கி எறியறே. எதனால? நான் வாயத் திறந்ததாலதானே? மறுபடி பேசினா, என்னையே கைநீட்டி அடிச்சிடுவியோன்னு பயமாயிருக்கு''

''ஐயோ... கொல்லாதேம்மா. அன்னைக்கு ஏதோ கோபத்துல... சரி, இந்த பேச்சை விடு. இப்



போதைய என்னோட கவலையெல்லாம் நீ மறுபடி பழைய மாதிரி நடமாடணும். அதனால ஒரு நல்ல நர்சுக்கு ஏற்பாடு பண்ணியிருக்கேன். இருபத்தி நாலு மணி நேரமும் உன் பக்கத்திலேயே இருந்து பார்த்துப்பா. நாளைலேர்ந்து வருவா!''

''எதுக்கு வீண் செலவு?''

''என்னம்மா பேச்சு இது? உனக்கு செலவுப் பண்ணாம வேற யாருக்கு பண்ணப் போறேன்?''

''நான் அதை சொல்லலே. என்ன செலவுப் பண்ணினாலும் எனக்கு குணமாகப் போறதில்லே. அதுக்கு மனசுல தெம்பு வேணும், நிம்மதி வேணும். அது சாகறவரை எனக்கு கிடைக்கப் போறதில்லை. பிறகெதுக்கு?''

''மனசைப் போட்டு குழப்பிக்காதேம்மா. எனக்கு கடையிலே கொஞ்சம் வேலையிருக்கு. போய்ட்டு உடனே வந்திடறேன். அதுவரைக்கும் சரளாவை உனக்கு துணையா இருக்க சொல்றேன். நான் வர்றேன்ம்மா!''

அவளை மேலும் பேசவிடாமல் புறப்பட்டு விட்டான்.

வேதநாயகியின் மார்புக்கூடு கவலையுடனும், பெருமூச்சுடனும் ஏறியிறங்கியது.

இசபெல்லாவிற்கு முப்பது வயதிலிருந்து முப்பத்தைந்திற்குள் இருக்கும். கேரளாவை சேர்ந்தவள். தமிழ் சரளமாய் வந்தது. பல ஹாஸ்பிடல்களில் வேலைப் பார்த்த அனுபவம். பெரும்பாலும் வேதநாயகிப் போன்ற தனிப்பட்ட நோயாளியை வீட்டிலேயே தங்கி பார்த்துக் கொள்வதில் ஆர்வம். திறமையும், நல்ல கவனிப்பும் இருந்ததால் அவளுக்கு அதுபோன்ற வாய்ப்புகள் நிறையவே வந்தது.

ராம்மோகனுக்கு அவளை ரெகமண்ட் பண்ணியதுக்கூட நண்பன் விஜயன்தான். அவனுடைய அப்பாவை கண்ணும் கருத்துமாகப் பார்த்துக் கொண்டதில், பக்கவாதத்தில் படுத்திருந்த அப்பா விரைவிலேயே குணமாகி எழுந்து நடமாடத் துவங்கி விட்டாராம். சொன்னதும் உடனடியாக, சம்பளம் அதிகமென்றாலும் நியமித்து விட்டான் ராம்.

ஆனால், வேதநாயகிக்கு என்னவோ, அவளை பார்த்த முதல் பார்வையிலேயே பிடிக்கவில்லை. அவளிடம் ஏதோ தப்பு ஒளிந்திருப்பதாகவே தோன்றியது.

வேதநாயகிக்கு ஒரு பக்கம் முழுக்கவே அதிகமாய் இயங்க முடியாது. கை, காலை அசைப்பாள். ஆனால், பயன்படுத்தும் போது வலி உயிர்போகும். அடிக்கடி பாத்ரூம் போக நடமாடுவது மிகவும் சிரமமாக இருந்ததால்... எல்லாமே படுக்கையில்தான்.

இசபெல்லாவிடம் ஊர் வம்புக்கு அலையும் புத்தி அதிகம்.

''சார்... உங்களுக்கு ஒரே பிள்ளையோ?''

''ஆமாம்!''

''உங்கமேலே ரொம்ப பாசம் அவருக்கு.''

''ஆமாம்!''

''பொண்டாட்டி செத்துப்போச்சா?''

''இந்த பக்கம் ரொம்ப வலிக்குது...'' மேற்கொண்டு பேச்சை வளர்க்கப் பிடிக்காமல் மாற்றிப் பேசினாள்.

''இதோ மருந்துப் போட்டு மெல்ல தேய்ச்சு விடறேன். வலி காணாமப் போய்டும்'' மெல்ல... இதமாய் தேய்த்தாள்.

''ஹால்ல மாட்டியிருக்கிற போட்டோவைப் பார்த்தேன். அதானே உங்க மருமக... ரொம்ப அழகு. பாவம்... தற்கொலைப் பண்ணிக்கிச்சாமே!''

''ம்!'' என்றபடி கண்களை மூடிக் கொண்டாள் வேதநாயகி.

ஒரு நாளல்ல... இரண்டு நாளல்ல தினமும் இந்த டார்ச்சர் தொடர்ந்தது.

சரளா வீடு துடைத்து, பாத்ரூம் தேய்த்து, துணி துவைத்து விட்டுப் போய் விடுவாள். ஜோதி இறந்த பின் உடல் தளர்ந்து போனதால் சமையலுக்கு வேணியம்மா என்னும் பெண்மணியை அமர்த்தியிருந்தாள். மூன்று வேளைக்கும் வந்திருந்து சமைத்துக் கொடுத்து விட்டு போய் விடுவாள்.

வேதநாயகிக்கு அவ்வப்போது பாலும், கஞ்சியும் காய்ச்சி தரவேண்டியிருந்தது. ஆளில்லாத காரணத்தால் இசபெல்லாவே சமையலறைக்குள் சென்று காய்ச்சினாள்.

''உனக்கு ஏன் நர்ஸ் சிரமம்? சொல்லிட்டியானா... நாளைலேர்ந்து வேணியம்மாவே செய்து ஃப்ளாஸ்க்ல ஊத்தி வச்சிட்டுப் போய்டுவா!'' என்றாள் அவள் சமையலறை வரை செல்வதுப் பிடிக்காமல்.

''எனக்கொன்னும் சிரமமில்லே. கஞ்சியெல்லாம் அப்பப்ப காய்ச்சி சாப்பிட்டாதான் கொஞ்சமாவது தொண்டையில் இறங்கும்'' என்பாள்.

ஒரு மாதம் ஓடிப் போயிற்று.

அப்படியொன்றும் உடல்நிலையில் முன்னேற்றம் தெரியவில்லை.

ஒருநாள்!

கடையிலிருந்து மாலை வீடு திரும்பியவன் உச்சமாய் அதிர்ந்துப் போனான்.

காரணம் வேதநாயகி!

கட்டிலோடு சேர்த்து அவள் கைகளையும், கால்களையும் கட்டிப்போடப்பட்டிருந்தது. பயத்திலும், அவசர உபாதையாலும் படுக்கையிலேயே அசிங்கம் பண்ணிவிட்டிருந்தாள். அழுதழுது முகமெல்லாம் உப்பிப்போயிருந்தது.

''அம்மா... என்னம்மா இது?'' அவசர அவசரமாய் கட்டுகளை அவிழ்த்து விட்டான்.

''அந்த சண்டாளி நர்ஸ் என்னைக் கட்டிப் போட்டுட்டு...''

''யாரு இசபெல்லாவா?''

''அதே கடங்காரிதான்! தலையணைக்கடியிலிருந்த சாவியை எடுத்து, பீரோவை திறந்து பணம், நகை எல்லாம் திருடிட்டுப் போய்ட்டா!''

''எ... என்ன?'' அவனால் நம்பவே முடியவில்லை.

''ஆரம்பத்திலிருந்தே அவளோட பேச்சும், பார்வையும் சரியில்லேப்பா. வேண்டாம்னேன்... நீதான் கேக்கலே''

ராம் தலையாட்டியபடி அடுத்த வேலைகளில் இறங்கினான். அம்மாவை சுத்தம் செய்து உடை மாற்றினான். படுக்கை விரிப்பை மாற்றிப் போட்டான். வேதநாயகி கூச்சத்தால் நெளிந்தாள். கண்ணீர் விட்டாள்.

பிறகு பீரோவை பார்த்தான். ராம் எப்போதும் நகைகளை பேங்க் லாக்கரில் வைத்திருப்பான். அம்மாவின் அன்றாடத் தேவைக்கென்று இருபது பவுன் வீட்டிலிருந்தது. முப்பதாயிரம் பணம் மற்றும் வெள்ளி சாமான்கள் இருந்தது. அவை எதுவும் இல்லை.

''என்ன ராம்... எல்லாத்தையும் எடுத்துட்டுப் போய்ட்டாளா?''

''ஆமாம்மா... கண்டுபிடிச்சிடலாம் கவலைப்படாதே! அதே சமயம் ஒரே ஆறுதல்... உனக்கு எந்த ஆபத்தும் விளைவிக்காமப் போனாளே... தாங்க் காட்!''

சொன்னதோடு நில்லாமல் ஒரு நிமிடமும் அங்கிங்கு அசையாமல் அம்மாவின் பக்கத்திலேயே இருந்துப் பார்த்துக் கொண்டான். கடைக்கு கூட செல்வதில்லை.

என்னதான் தான் சுமந்து பெற்ற மகனென்றாலும், அவனுடைய சிஷ்ருஷையை ஏற்றுக் கொள்ள தாய்மனம் தடுத்தது. தாலிகட்டிய கணவனைத் தவிர, தன் நிர்வாணத்தை வானம் கூட பார்க்க அனுமதிக்காதவள் நம் நாட்டு தமிழச்சி அல்லவா? ஒவ்வொரு நாளும் இயற்கை உபாதைகளுக்கு ஆளாகும் போது செத்துப் போய்விடலாம் போல் துடித்தாள்.

அம்மாவின் மூடிய விழிகளிலிருந்து கண்ணீர் வழிவதைப் பார்த்து அவளுக்கு துடைத்து சுத்தம் செய்து கொண்டிருந்த ராம்மோகன் திடுக்கிட்டான்.

''என்னம்மா வலிக்குதா?''

''ஆமாம்ப்பா... மனசு வலிக்குது!''

''அ..ம்..மா!''

''ரொம்ப முடியாம படுத்துக் கிடக்கிறவங்களுக்கு அவங்க விருப்பப்படி கருணைக் கொலை செய்வாங்களாமே... அதே மாதிரி என்னையும்...''

சட்டென தாயின் வாயைப் பொத்தினான்.

''ஏம்மா இப்படியெல்லாம் பேசறே? நானிருக்கேனே உனக்கு? உன்னை கண்ணும் கருத்துமா நான் பார்த்துக்குவேன்ம்மா!''

''தெரியும் ராம். ஆனா, நீ... ஆண் பிள்ளை ராம். சங்கடமாயிருக்குப்பா!'' அழ ஆரம்பித்தாள்.

புரிந்தது. கண்ணீர் துளிர்த்தது.

''அம்மா... கவலைப்படாதே... இன்னைக்கே ஒரு நர்ஸை...''

''எதுக்குப்பா? இந்தமுறை என்னையும் சேர்த்து கொலைப் பண்றதுக்கா?''

''.........?!''

''என்னைப் பார்த்துக்க ஒரு பொண்ணு அவசியம் தேவை தான். அதுக்கு நல்ல மனசுள்ள, நமக்கு சொந்தமான உறவுக்காரியா இருக்கணும். நர்ஸோ, வேலைக்காரியோ தேவையில்லே. நான் யாரையும் நம்பற மாதிரியில்லே. என்னை மட்டுமல்ல... உன்னையும் கண்ணுக்குள்ளே வச்சுப் பார்த்துக்கறவளா இருக்கணும். அது... எனக்கு வர்ற மருமகளால மட்டும்தான் இருக்க முடியும்.''

''அ...ம்...மா!''

''என் கவலையே உன்னைப்பத்திதான் ராம். என் ஒரே பிள்ளை தனிமரமா நிக்கறானே.

## ஒவிய நத்தைகள்

மனிதர்கள் வரையும் ஓவியங்களை விட நத்தைகள் வரையும் இந்த ஓவியங்கள் ஐரோப்பிய நாடுகளில் தற்போது அதிக விலைக்கு விற்கப்படுகின்றன. வண்ணங்களை



குவித்து அதன்மேல் நத்தைகளை ஊர்ந்து செல்ல வைத்து தீட்டப்படும் இம்முறையை இத்தாலியில் செய்து வருகின்றனர். பல்வேறு வண்ணங்களில், கோணத்தில் ஊர்ந்து வரையப்படும் இந்த ஓவியம் மக்களை வெகுவாக கவர்ந்துள்ளது.

- பார்த்தசாரதி



எந்த தாய்தான் சந்தோஷப்படுவா? நீ நல்லா இருந்தா... நானும் ஆரோக்கியமா இருப்பேன் ராம். இல்லேன்னா என்னை இப்படியே விட்ரு. முடிஞ்சா பெரிய மனசுப் பண்ணி கருணைக் கொலைப் பண்ணிடு!'' என்றாள் கைகூப்பி.

''அம்மா!'' என்றவன் அந்த கைகளைப் பற்றி கண்களில் ஒற்றிக் கொண்டான்.

கரங்கள் ஈரமாயின.

சிறிது நேரம் அப்படியே இருந்தவன் பெருமூச்சுடன் நிமிர்ந்தான்.

மெல்ல... ஆமோதிப்பவன் போல் தலையாட்டினான்.




அடுத்த சில தினங்களிலேயே வேதநாயகியின் உடல் நிலையில் நல்ல முன்னேற்றம் தெரிந்தது. அவள் தகவல் அனுப்பி தரகரும் வந்தார்.

ராம்மோகன் அம்மாவை கேள்வித் தொக்கிய கண்களுடன் ஏறிட்டான்.

''உனக்குதான் நிறைய வரன்கள் கொண்டு வந்திருக்கார். ரொம்ப ராசியானவர். தரகரே... அந்த போட்டோவெல்லாம் எடுத்துக் காட்டுங்க. உனக்குப் பிடிச்சப் பொண்ணா தேர்ந்தெடு ராம்.'' என்றாள் குதூகலத்துடன்.

ராம்மோகனுக்கு கோபம் வந்தது. கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டான்.

''சார்... இதெல்லாம் வேண்டாம். நீங்க போய்ட்டு வாங்க. சிரமத்துக்கு மன்னிக்கணும்'' என்றபடி இருநூறு ரூபாய் நோட்டை எடுத்து தரகரிடம் கொடுத்தான்.

தரகர் சங்கடத்துடன் வேதநாயகியைப் பார்த்தபடி வாங்கிக் கொண்டார்.

வேதநாயகியின் முகமோ இருண்டு விட்டிருந்தது.

'வேதாளம் மறுபடி முருங்கை மரத்தில் ஏறிவிட்டதோ?'

தரகர் போய் விட்டார்.

''ஏன் அவரை அனுப்பிட்டே?''

''அவரை எல்லாம் வரச்சொல்லி ஏம்மா என்னை சங்கடப்படுத்தறே?''

''நீதான் கல்யாணத்துக்கு சம்மதிச்சிட்டியே... பிறகென்ன? உனக்கேத்த மாதிரி, நம்ம குடும்பத்துக்கு ஏத்த மாதிரி ஒரு பொண்ணை பார்த்து...''

''போதும் நிறுத்தும்மா. இப்போ என் தகுதி என்ன? ரெண்டாவது கல்யாணம். அதுவும் இன்னொருப் பொண்ணையும் மலடியாக்கப் போகிற கல்யாணம். இதுக்கு சம்பிரதாயங்கள் எதுக்கு? இது உனக்காக பண்ணிக்கப் போகிற கல்யாணம். அதனால அந்தப் பொண்ணு பரந்த மனசுள்ளவளா, நல்லவளா, உன்னை தாய் மாதிரி கவனிச்சுக்கறவளா இருந்தா மட்டுமே போதும். புரியுதா?''

''உனக்கெந்த குறையும் இல்லே ராம். நீ வேணாப் பாரு... நான் பேரன் பேத்தியை...''

''அம்மா... ஆசைகளை வளர்த்துக்காதே!

அவ்வளவுதான் சொல்லுவேன். இந்த வீட்டுக்கு மருமகளா வரப்போறவ அனாதை ஆசிரமத்திலிருந்தோ, இல்லே மகளிர் காப்பகத்திலிருந்தோ தான் வரமுடியும். இதுக்கு நீ சம்மதிச்சா... நானும் ரெடி.''

''என்ன ராம் இப்படி சொல்லிட்டே?''

''பொண்ணு ஒழுக்கமா, நல்லவளா இருந்தா மட்டும் போதும். வேற எதையும் எதிர்பார்த்தா... நீ நினைக்கறது நடக்காது. இதுதான் என் முடிவு!'' என்றான் தீர்மானமாக.

அவனின் தீர்க்கமான பேச்சின் முன் அடங்கிப் போனாள் அரைமனதாக.

**வ**ள்ளியம்மை மகளிர் காப்பகம்!

விஸ்தாரமான கட்டிடம் கம்பீரமாய் வீற்றிருக்க... காரை விட்டிறங்கினான் ராம்மோகன்.

மகளிர் காப்பகம் என்று பெயர்தான் தவிர, பிள்ளைகளால் கைவிடப்பட்ட முதிய ஆண்கள், பெண்கள், குப்பைத் தொட்டிக்கென்றே தாரை வார்த்துக் கொடுக்கப்படும் தளிர்கள், அபலைப் பெண்கள் என எல்லோருக்கும் அடைக்கலம் கொடுக்கும் ஆலமரமாய் இருந்தது காப்பகம்.

நல்ல மனிதர்களின் தாராள மனதால், எந்தக் குறையுமின்றி கிட்டத்தட்ட எண்ணூறு பேர் வரை பசியாறுகின்றனர். தொழிலைக் கற்றுக் கொள்கிறார்கள்.

காப்பகத்தின் நிர்வாகி முத்துராமலிங்கம் ராம்மோகனுக்கு நன்கு பழக்கம். ஒவ்வொரு வருடமும் மறைந்த தகப்பனாரின் திதிநாளில் ஒரு குறிப்பிட்டத் தொகையை அவன் நன்கொடையாக தருவதை வழக்கமாக் கொண்டிருந்தான்.

ஒரு வாரத்திற்கு முன்பு அவரை சந்தித்து தன் எண்ணத்தை வெளிப்படுத்தியிருந்தான். பெரிதாய் மகிழ்ந்துப் போன அவர், ராம் கேட்டபடி ஒரு நல்ல, குணமுள்ள பெண்ணை தேர்ந்தெடுத்து தருவதாகவும், ஒரு வாரம் அவகாசம் தரும்படியும் கேட்டிருந்தார்.

சொன்னபடியே இன்று போன் பண்ணி வரச் சொன்னார்.

எந்தவித எதிர்பார்ப்புமின்றி ராம், முத்துராமலிங்கத்தின் அறையை நோக்கி நடந்தான்.

பார்த்ததும், மலர்ந்த முகத்துடன் வரவேற்று உபசரித்தார். வழக்கமான பேச்சுகளுக்கு பின் விஷயத்திற்கு வந்தார்.

''முதல்ல உங்களோட பெருந்தன்மையான இந்த முடிவிற்கு தலை வணங்குகிறேன் மிஸ்டர் ராம். ஒரு ஆண் எத்தனை திருமணம் செய்தாலும், பெண்ணை தராசில் எடைபோட்டு தனக்கு எல்லா விதத்திலும் சரியானவள் தானா? என்று பார்த்துதான் தேர்ந்தெடுக்கிறான். ஆனால் நீங்கள் தாய், தந்தையில்லாத, யாருமற்ற அனாதைப் பெண்ணை திருமணம் செய்ய முன் வந்திருக்கிறீர்கள். நீங்கள் எதிர்பார்த்த நல்ல குணத்துடன், பெரியவர்களை உள்ளங்கையில் வைத்து தாங்கும் நல்ல பெண்ணை தேர்ந்தெடுத்திருக்கிறேன்.''

''அப்படியா?'' என்றான் எந்த உணர்ச்சியுமின்றி.

''ஆமாம்! எட்டு வருடம் முன்பு இங்கு வந்து சேர்ந்தாள். முதியவர்களை கவனித்துக் கொள்ளும் பொறுப்பான பணியில் இருக்கிறாள். பெயர் தரங்கிணி. வயது இருபத்தி நான்கு. இங்குள்ள பலரின் அன்புக்கு பாத்திரமான அடக்கமான பெண். வரச்சொல்கிறேன். பேசிப் பாருங்கள். பிடித்திருந்தால் மேற்கொண்டு பேசுவோம்''

''சரி!'' என்றான்.

அடுத்த ஐந்தாவது நிமிடம் வந்து நின்றாள் தரங்கிணி.

முகத்தில் அன்பும், கருணையும் பொங்கி வழிய... அதுவே தனி அழகைத் தந்தது. கண்களில் தீட்சண்யம். அடக்கத்தை வெளிப்படுத்தும் புன்னகை. சிவப்புமின்றி, கறுப்புமின்றி மாநிறம். நெற்றியில் சின்ன சாந்துப்பொட்டிற்கு கீழே குங்குமக் கீற்று.

முத்துராமலிங்கம் அறிமுகப்படுத்த, வெட்கமும் பதற்றமுமாய் அவனை பார்த்தும், பார்க்காமல் கை கூப்பி வணங்கினாள் தரங்கிணி.

''பேசிக் கொண்டிருங்கள். ஒரு வேலையிருக்கிறது. முடித்து விட்டு அரைமணி நேரத்தில் வந்து விடுகிறேன்'' என்று நாசூக்காய் நகர்ந்தார் முத்துராமலிங்கம்.

சற்று நேர மவுனப் போராட்டத்திற்குப் பின் பேச ஆரம்பித்தான் ராம்.

''உட்காருங்கள்''

''பரவாயில்லை''

''உட்கார்ந்தால் பேச வசதியாக இருக்கும்.''

தயங்கித் தயங்கி அவன் எதிரே அமர்ந்தாள்.

''முத்துராமலிங்கம் சார் உங்களிடம்...''

''எல்லாம் சொன்னார். எ... எனக்கு பரிபூரண சம்மதம்.'' என்றாள் தரையைப் பார்த்தபடி.

''நான் மற்ற ஆண்களைப் போல் எனக்காக திருமணம் செய்து...''

''அதுவும் தெரியும். உங்கள் அம்மாவை என்னைப் பெற்ற தாய் போல் பார்த்துக் கொள்வேன். என்னைப் போன்ற பெண்களுக்கெல்லாம் திருமணம் என்பது கனவில் காணும் வாழ்க்கை! என் பொறுப்புணர்ந்து நடந்துக் கொள்வேன்.''

''நல்லது... உங்கள் சொந்த ஊர் எது?''

''சிதம்பரம்...'' என்றவள் தன் கதையை சொன்னாள்.

தரங்கிணிக்கு சிறுவயதிலேயே அம்மா இறந்துப் போக, அக்கா வர்ஷிணிதான் அம்மாவாக தாங்கி வளர்த்தாள். இருவருக்கும் பத்துவயது வித்தியாசம். அப்பா செல்லத்துரை ரிக்ஷா ஓட்டும் தொழிலாளி. முட்டி வீங்க ரிக்ஷா மிதித்து சம்பாதித்தால் தான் வீட்டில் அடுப்பெரியும். வலி மறக்க சாராயத்தின் துணையும் அவசியப்பட்டது அவருக்கு. தரங்கிணி கார்ப்பரேஷன் பள்ளியில் ஒன்பதாவது வரை படித்தாள். அதற்கு மேல் படிக்க செல்லத்துரை அனுமதிக்கவில்லை.

அவ்வளவு கஷ்டத்திலும் வர்ஷிணிக்காக கொஞ்சம் பணம் சேர்த்திருந்தார் செல்லத்துரை. மாப்பிள்ளைத் தேடினார். வலிய திருமணம் செய்துக் கொள்ள முன் வந்தான் பாண்டியன். வர்ஷிணியின் தாய் மாமன். முறைப் பையன். அவளை விட பத்துவயது மூத்தவன்.

சொந்தமாய் லாரி வைத்து... ஓரளவு வசதியாய் இருப்பவன். வர்ஷிணியின் அழகிற்காகவும், அவள் மேல் கொண்டிருந்த காதலாலும் அவளை கட்டியப் புடவையுடன் ஏற்றுக் கொள்ள தயாராய் இருந்தான்.

அவன் செலவில் திருமணம் தடபுடலாய் நடந்தது. அவளுக்கு திருமணமான ஆறே மாதத்தில் ஒரு விபத்தில் செல்லத்துரை ரிக்ஷாவுடன் சேர்ந்து நசுங்கிப் போனான். யாருமற்ற அனாதையான தரங்கிணி அக்காவின் நிழலில் வாழ்ந்தாக வேண்டிய கட்டாயம். அடுத்தடுத்து மூன்று குழந்தைகள் அபார்ஷன் ஆகிவிட்டதால், வர்ஷிணி அழகு குலைந்து நைந்த துணியைப் போல் ஆனாள்.

பருவத்தின் ஆரம்பக்கட்டத்தில் இருந்த தரங்கிணியின் வயதுக்கு மீறிய செழிப்பு பாண்டியனின் கண்களை உறுத்த ஆரம்பித்தது.

ஒரு நாள் வர்ஷிணி திடீரென இறந்துப் போனாள். ஏன், என்ன காரணம் என்று தெரியவில்லை. பாண்டியனின் அழுகைக்கூட செயற்கைத்தனமாய் இருப்பதுப் போல் தெரிந்தது. அப்போது தரங்கிணிக்கு பதினாறு வயது. பாண்டியனுக்கு முப்பத்தாறு.

ஊரில் ஓரளவு செல்வாக்கான பாண்டியன் தரங்கிணியின் சம்மதத்தைக் கூட கேட்காமல் வர்ஷிணி இறந்த மூன்றே மாதத்தில், அவளை திருமணம் செய்ய ஏற்பாடுகளை செய்தான். அவளுக்கு தன்னை விட்டால் வேறு நாதியில்லை என்கிற எண்ணம். மாமாவைக் கண்டாலே பயந்த தரங்கிணி இரவோடு இரவாக யாருக்கும் தெரியாமல் ஊரை விட்டு ஓடி வந்து விட்டாள். பாண்டியன் வலை வீசி தேடியும் கிடைக்கவில்லை. அன்று இந்த காப்பகத்தில் அடைக்கலமானவள்தான். இன்று வரை அவளின் தாய்வீடு இதுதான்.

தன் கதையை சொல்லி முடித்தவள் அவனை ஏறிட்டாள்.

''கேட்கவே கஷ்டமாக இருக்கிறது. சரி, அதையெல்லாம் மறப்போம். என் வீட்டில் உனக்கு எந்த பிரச்சினையும் இருக்காது. பட், எனக்கு ஒழுக்கமும், நாணயமும், உண்மையும் இருக்கணும். அதை ரொம்பவே எதிர்பார்ப்பேன்.''

''உங்கள் எதிர்பார்ப்பிற்கு மாறாக நடக்க மாட்டேன்.''

''அப்புறம்...?'' என்றவன் தன்னைப்பற்றி மெடிக்கல் ரிப்போர்ட் சொன்னதை சொல்லி விடலாமா என்று யோசித்தான். ஏனோ, தயக்கம் தடுத்தது.

''சொல்லுங்க...'' என்றாள் ஆவலாய்.

''ஒண்ணுமில்லே... இன்னும் ரெண்டு நாள்ல கல்யாண தேதியோட வர்றேன்.'' என்று பேச்சை மாற்றினான்.




**ரா**ம்மோகனின் வெறிச்சோடிப் போயிருந்த வீட்டை மறுபடி கலகலப்பிற்கு மாற்றினாள் தரங்கிணி. மஞ்சளும், குங்குமமும் பளபளக்க... மெட்டி ஒலியுடன் நடமாடி அந்த வீட்டிற்கே மங்களகரத்தை சேர்த்தாள். ஜோதியோடு ஒப்பிட்டால் தரங்கிணி எல்லா வகையிலும் தகுதி குறைவென்றாலும், வேதநாயகி புது மருமகளை முழுமனதுடன் நேசிக்க ஆரம்பித்து விட்டாள்.

படுக்கையில் இருந்த போது அவள் பட்ட சிரமங்கள் அவளின் புத்தியை சீர்மைத்திருந்தது. ஜோதியை தாம் வெகுவாக துன்புறுத்தி விட்டோம் என்பதை உணர்ந்தாள்.

தரங்கிணி வீட்டை சுத்தமாக வைத்துக் கொண்டாள். அருமையாக சமைத்தாள். அதனால் வீட்டு வேலைக்கு வந்து கொண்டிருந்த இரண்டு பேருக்கும் வேலைப் போய்விட்டது.

எல்லாவற்றையும் விட பெரிய ஆச்சர்யம் அவள் வந்த பதினைந்தே நாளில் வேதநாயகி பழையபடி எழுந்து நடமாட ஆரம்பித்து விட்டாள். பக்குவமான அவளின் கவனிப்பு, தேர்ந்த நர்ஸின் திறமையை வெளிப்படுத்தியது.

வேதநாயகிக்கு மனப்பூர்வ திருப்தி. அம்மாவின் உற்சாகம் கண்டு தனயனும் மகிழ்ந்தான்.

எல்லாவற்றையும் கவனித்துக் கொள்ளும் தரங்கிணியை நாம்தான் கவனித்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் மட்டும் ராமிற்கு தோன்றவில்லை.

தரங்கிணி அவன் அன்பிற்காக ஏங்கினாள். அவன் வீட்டில் இருக்கையில் குட்டிப்போட்ட பூனையாய் அவனையே சுற்றி வந்தாள்.

''அம்மா சாப்பிட்டாங்களா? மாத்திரை குடுத்தியா?''

''ம்... ஆச்சுங்க!''

''எனக்கு போதும்... நீ சாப்பிட்டியா?''

''இனிமேல்தான்!''

''இந்த சம்பிரதாயமெல்லாம் எதற்கு? ஃப்ரீயா இரு. நேரத்துக்கு சாப்பிட்டு படு. லேட்டாச்சுன்னா நானே எடுத்துப் போட்டு சாப்பிட்டுக்க றேன்'' என்று கையை கழுவி விட்டு எழுந்து விட் டான்.

அவள் மீதான அக்கறையான விசாரிப்பு அந்தளவிற்குதான். மூன்று மாதம் ஓடிவிட்டது. இதுவரை சுண்டுவிரல் கூட தொட்டதில்லை. கோவிலில் தாலி கட்டும் போது விரல் நகம் கழுத்தை தீண்டியதாக நினைவு. இன்று வரை தனித்தனி படுக்கைதான். உரிமை இருந்தும் கண வனை நெருங்க பயந்தாள். சதையோடும், ரத்தத் தோடும், உணர்ச்சிகளும் கலந்த பெண்ணவள் என்பதை மறந்தான் ராம்.

பலமுறை ஜோதியின் புகைப்படத்திற்கு அருகில் அமர்ந்து கண்ணீர் விட்டிருக்கிறாள்.

'அனாதை என்பதால் அந்த அன்பு மறுக் கப்படுகிறதோ? இல்லை, அப்படியெல்லாம் எண்ணுபவர் அவரில்லையே! ஜோதி அவருள் நிறைந்திருக்கிறாள். இருக்கட்டும். எனக்கும் ஒரு ஓரமாய் இடம் தரலாமே!'

'ம்ஹூம்... இப்படியே விடக்கூடாது. நானும் அவர் மனைவிதான் என்பதை உணர வைக்க வேண்டும்.' தீர்மானித்தவள் அதற்கான சந்தர்ப்பத்தை எதிர்நோக்கி காத்திருந்தாள்.

அன்று...

வழக்கத்திற்கு மாறாக மாலையே வந்து விட்டான். ஜோதி இருந்த போது ஆறுமணிக் கெல்லாம் வீட்டில் இருப்பான். தரங்கிணியை மணந்தபின் பத்து, பதினொன்று ஆகும் வர.

''ரொம்ப தலையை வலிக்கிறது. சூடாய் ஒரு காபி கிடைக்குமா?'' என்று கேட்டான்.

''இதோ... கொண்டு வர்றேங்க!''

அடுத்த ஐந்தாவது நிமிடம் ஸ்ட்ராங்காய் ஃபில்டர் காபி போட்டு அறைக்குள் எடுத்துச் சென்றாள்.

கட்டிலில் விட்டத்தை வெறித்தபடி படுத்திருந்தான்.

''காபி...''

''தேங்க்ஸ்'' வாங்கிப் பருகியவன், கோப்பையை கொடுத்து விட்டு அப்படியே மல்லாந்து படுத்து கண்களை மூடி நெற்றியை சுருக்கினான்.

சில கணங்களில் மென்மையான ஸ்பரிசமும், தைல வர்சனையும் கண்களை திறக்க வைத்தன.

தரங்கிணிதான் நெற்றிப்பொட்டில் இதமாய் தைலத்தை தேய்த்துக் கொண்டிருந்தாள்.

அவன் மறுத்து சொல்ல வாயைத் திறக்கு முன், ''ரெண்டே நிமிஷம்தான். தலைவலி காணாமல் போய்விடும்'' என்றாள்.

நிஜமாகவே அந்த இதமான அழுத்தம் வலியை சற்று குறைப்பதாக இருக்கவே அமைதியானான்.

கிட்டத்தட்ட பத்து நிமிடம். தலைவலி காணாமல் போய் விட்டிருந்தது.

கண்களை திறந்தவன் மெல்ல புன்னகைத் தான்.

''ரொம்ப தேங்க்ஸ்... தலைவலி போயே போச்!'' என்றான்.

''அதுக்காக தேங்க்ஸ் சொல்லணுமா?''

''என்ன தப்பு?''

''நா... நான்... உங்க மனைவி!''

அருகில் வந்தமர்ந்தவள் அவன் தலையை மெல்ல கோதி விட்டாள்.

தடுப்பதா, அனுமதிப்பதா என்று புரியாமல் சங்கடப்பட்டான்.

''ஜோதிக்கா உங்களை பேர் சொல்லி கூப்பிடுவாங்களா?''

''எ... என்ன சொன்னே?'' வியப்புடன் பார்த்தான்.

''ஜோதிக்கா உங்களை பேர் சொல்லி கூப்பிடுவாங்களான்னு கேட்டேன். முறைப்படி எனக்கு அவங்க அக்காதானே? நான் தப்பா எதுவும்...''

''இல்லையில்லை...'' என்றவனின் முகம் பரவசமாகி இளகியது.

நினைவுகள் ஜோதியை சூழ்ந்துக் கொண்டன போலும்.

''எங்களை நாங்கள் மறக்கும் நேரத்தில் 'ராம்' என்று செல்லமாய் அழைப்பாள்.''

''ம்... அப்படியானால் அந்தப் பெயர் அவர்களுக்கு மட்டுமே உரிமை. நான் மோகன் என்று அழைக்கட்டுமா?'' நாணத்துடன் கேட்டாள்.

''என்னது? என்னை பெயர் சொல்லி கூப்பிடப் போகிறாயா? அம்மா காதில் விழுந்தால் அவ்வளவுதான்!'' அதிர்வுடன் துள்ளி அமர்ந்தான்.

''அம்மா காதில் எப்படி விழும்? நம்மை நாம் மறக்கும் நேரத்தில் உங்கள் காதுக்கு மட்டுமே கேட்கிறா மாதிரி செல்லமாய் அல்லவா கூப்பிடுவேன்!'' முகத்தை பார்க்க தைரியமின்றி தலை கவிழ்ந்தபடி சொன்னாள்.

திடுக்கிட்டு அவளையேப் பார்த்தான்.

அந்த வார்த்தைகளில் தென்பட்ட அன்பு, ஏக்கம், எதிர்பார்ப்பு, உரிமை, அவனை புரட்டிப் போட்டது.

'இந்தப் பெண் மனதில் இப்படியொரு ஆசையா?

ஏன் வரக்கூடாதா? அவள் உன் மனைவி அல்லவா? அவளும் உணர்ச்சிக் குவியலால் படைக்கப்பட்ட பெண்தானே? நீயொன்றும் மாத சம்பளத்துக்காக வேலை செய்ய அழைத்து வரப்பட்ட வேலைக்காரி இல்லையே அவள்? தாலிகட்டி மாமியாருக்கும், கணவனுக்கும் பணி விடை செய்ய உரிமையோடு அழைத்து வரப்பட் டவளுக்கு நியாயமான ஆசை ஏற்படுவது வாஸ்

# உத்தரவிட்டால் பணிமுடிக்கும் ரோபோட்!

மனித இயக்கம், வரவர எந்திரமயமாகிக் கொண்டிருக்கிறது. மனிதன் செய்யும் காரியங்களை இன்றைக்கு ரோபோட்டுகளே செய்து முடித்து விடுகின்றன. கணினியின் ஆதிக்கம் மனிதனின் நினைவு ஆற்றலையும் மங்கச்செய்து வருகிறது. எந்தவொரு விஷயத்தையும் நினைவில் நிலைநிறுத்தி வைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் இன்றைக்கு மனிதனுக்கு தேவை இல்லாத ஒன்றாகி வருகிறது.

எதை ஒன்றையும் மனிதன் கம்ப்யூட்டரில் பதிவு செய்து விடுகிறான். தேவைப்படும் போது அதனை எடுத்தாளுகிறான். இதனால் வருங்காலங்களில் மனிதனுக்கு நினைவாற்றல் என்பது மறந்தேபோகும் என்ற அபாய எச்சரிக்கையையும் விஞ்ஞானிகள் விடுத்துள்ளனர்.



இந்த நிலையில் தான் ஜப்பான் அதிநவீன ரோபோட் ஒன்றை கண்டு பிடித்துள்ளது. இதன் உயரம் என்னவோ 4 அடி தான். ஆனால் இதன் பணியோ அபாரம். வாய்மொழி உத்தரவை கேட்டே, இந்த ரோபோட் சரக்குகளை எடுத்து வைக்க வேண்டிய இடத்தில் கனகச்சிதமாக எடுத்து வைத்து விடுகிறது. இந்த ரோபோட்டின் அடியில் சக்கரம் பொருத்தப் பட்டிருப்பதால் எளிதாக நகர்கிறது.

மனிதன் தன் கைகளால் எடுத்து ஆளமுடியாத ரசாயனப் பொருட்களை இந்த ரோபோட்டின் உதவியால் மிக எளிதாக எடுத்து வைத்து விட முடியும் என்று இந்த ரோபோட்டை கண்டு பிடித்த ஜப்பானிய கணிப்பொறி வல்லுனர்கள் கூறுகிறார்கள்.

அடுத்த மாதம் இந்த அதிநவீன ரோபோட் சந்தைக்கு வருகிறது. விலை ரூ. 24 லட்சத்து 30ஆயிரம். என்ன மலைப்பாக இருக்கிறதா?

-- பாலாஜி.

தவம்தானே? ஜோதி எப்போதும் மனதில் இருக்கிறாள்தான். ஆனால், அதன் காரணமாகவே அவளுக்கு தீரவேண்டிய உரிமை மறுக்கப்படுவது சுயநலமல்லவா?

பாவம். சிறுவயதிலேயே பெற்றோரை இழந்து, பாதுகாத்த அக்காவையும் இழந்து, மாமாவின் உடும்புப் பிடியிலிருந்து தப்பி காப்பகத்தில் வாழ்ந்தவளுக்கு, வாழ்க்கையில் இதுவரை சுவாரஸ்யம் என்று எந்த நிகழ்ச்சியும் இருந்திருக்காது. உண்மையில் இதுவரை அவளை ஒரு வேலைக்காரி என்ற ஸ்தானத்தில் அல்லவா வைத்திருந்திருக்கிறேன்? இதோ, இன்று அவள் மனதின் ஆசையை பூடகமாக வெளிப்படுத்தி விட்டாளே! அதை தவறென்று சொல்ல முடியுமா?

ஜோதியை மறக்க முடியாதுதான். ஆனால், தரங்கிணியும் உன் மனைவிதான். அதையும் மறக்காதே! உன் குறைபாட்டை மறைத்து திருமணம் செய்ததே தப்பு. அதை விட பெரிய தப்பு மனைவி என்கிற ஆத்மார்த்த உறவை, உரிமையை தர மறுப்பது. இன்னும் சுயநலக்காரனாக இருக்காதே ராம்.'

அவனுள் பெரும் போராட்டமே நடந்தது.

சில கணங்களுக்கு பின் குனிந்திருந்த அவள் முகத்து மோவாயை ஒரு விரலால் நிமிர்த்தினான்.

ஆழமாய் பார்த்தான்.

ஜிவ்வென்று ரத்தம் பாயவைத்த ஸ்பரிசமும், அவனின் பார்வையும் இதயத் துடிப்பை எகிற வைத்தது. முகம் வெட்கத்தில் சிவக்க... அழகு கூடித் தெரிந்தாள். மெல்ல அவள் தோளைப் பற்றி தன்பக்கம் இழுத்தான்.

இதுதான் சமயம் என்று ரோஜாக் குவியலாய் அவன் நெஞ்சில் முகம் புதைத்துக் கொண்டாள் தரங்கிணி.

ராம்மோகனின் வலிய கரங்கள் அவளை இறுக்கமாய் அணைத்துக் கொண்டன.

**சா**லையோரமாய் நடந்துக் கொண்டிருந்த பாாவதியை பார்த்தால் அவ்வளவு எளிதில் யாரும் அடையாளம் கண்டு பிடித்து விட முடியாது. முன்பை விட பாதியாய் மெலிந்து காணப்பட்டாள். தாமரைக்கு அடுத்து ஜோதியின் மரணம் அவளை வெகுவாக பாதித்து விட்டது.

மாலை நேரங்களில் கோவிலுக்கு வந்து அமர்ந்து விடுவாள். அன்றும் கோவிலுக்குதான் சென்றுக் கொண்டிருந்தாள்.

அப்போதுதான் சிக்னல் விழக்காத்திருந்த காரைப் பார்த்தாள். உள்ளே ராம்மோகனும், பக்கத்தில் தரங்கிணியும் அமர்ந்திருக்க... கார் போய் விட்டது.

ராம்மோகனுக்கு திருமணம் நடந்ததை அறிந்திருந்தாலும் இப்போதுதான் ஜோடியாய் பார்க்கிறாள். பார்த்த மாத்திரத்தில் கண்கள் கலங்கி விட்டது.

ஜோதி இடத்தில் வேறொருத்தி. எதற்கு பயந்தாளோ, அது நடந்து விட்டது. முட்டாள் பெண் அநியாயத்திற்கு உயிரை பலி கொடுத்து விட்டாள். பெண் வாழ்க்கையை காப்பாற்றப் போய், அதற்கு தண்டனையாய் அவளையே பலி கொடுத்து விட்டாள்.

கோவில் வந்து விட... வழக்கமாய் அமரும் பிரகாரத் தூணில் சாய்ந்தமர்ந்தவள் திடுக்கிட்டாள்.

'ஒரு வேளை, இந்த பெண் கர்ப்பமாகி விட்டால்!? எல்லா உண்மையும் தெரிந்து விடுமே! ராமிற்கு மட்டுமல்ல, கோவிந்துக்கும்தான் இப்படியொரு குற்றம் செய்தது தெரிந்தால் வீட்டை விட்டே துரத்தி விடுவானே!' எண்ணும் போதே மூச்சு முட்டியது பார்வதிக்கு. உடம்பு குப்பென்று வியர்த்து கொட்டியது.

'அம்மா தாயே... என்னைக் காட்டி கொடுத்து விடாதே... அந்தப் பெண் கர்ப்பமாகாமல் என்னைக் காப்பாற்று!' சுயநலமாய் வேண்டிக் கொண்டவளை அம்மன் ஏளனமாய் பார்த்தாள்.

## 15

**நா**ட்கள் வெகுவேகமாக ஓடியது. மேலும் நான்கு மாதங்கள் கடந்தது.

அன்று அந்த வீட்டில் இரண்டு ஆத்மாக்கள் எல்லையில்லா சந்தோஷத்தில் சிறகடித்துப் பறந்தன.

மாலை நேரம் நெருங்கி வராதா என்று காலையிலிருந்தே காத்திருந்தவள், மாலை ராம்மோகனின் கார் சப்தம் கேட்டதும் ஓடிப்போய் ஒளிந்துக் கொண்டாள் தரங்கிணி.

ஹார்ன் சப்தம் ஒலித்துக் கொண்டேயிருக்க, வேதநாயகி மருமகளை ஆச்சர்யமுடன் பார்த்தாள்.

''ராம் வந்துட்டான்... போய் கேட்டைத்



திறம்மா...''

''ம்ஹூம்... நான் போகமாட்டேன் அத்தை!''

அவளின் வெட்கத்தை ரசித்து சிரித்தவள், ''நல்ல பொண்ணுதான் போ!'' என்றபடி அவளே சென்று திறந்தாள்.

''என்னம்மா நீ வந்து திறக்கிறே? தரங்கிணி எங்கே?''

''நீயே போய் பார்!''

குறும்புடன் சொன்ன அம்மாவை குழப்பமாய் பார்த்தபடி காரை விட்டிறங்கினான்.

''தரங்கிணி... தரங்கிணி...'' ஒவ்வொரு அறையாய் தேடிப்பார்த்து, கடைசியில் கிச்சனில் பார்த்து வியந்தான்.

''என்ன இங்கே வந்து ஒளிஞ்சிருக்கிறே?''

''நான் சொல்ல மாட்டேன்!''

''சரி... அப்புறமாவே சொல்லு. டயர்டா இருக்கு, மொதல்ல காபி கொண்டு வா! இந்தா இது உனக்கு. இதை ஜோதி படத்துக்கு போட்டு!''

இரண்டு மல்லிகைப் பொட்டலங்களை நீட்டினான். இது அவனின் தினசரி வாடிக்கை.

சற்று நேரத்தில் காபியுடன் அவன் அறைக்குச் சென்றவளின் முகத்தில் அதே... விலகாத வெட்கம்.

காபியை பருகியவன் முகம் சுளித்தான்.

''என்னயிது இவ்வளவு சர்க்கரை?''

''காரணமாகதான்''

''என்ன சொல்றே?''

''ஒரு நல்ல விஷயம் சொல்லணும். அதுக்காகதான்!''

''நல்ல விஷயமா?''

''ஆமா... ஆனா, அதை நான் சொல்ல மாட்டேன். அத்தைக்கிட்டே போய் கேளுங்க... சொல்லுவாங்க.''

ராமிற்குள் என்னவோ நெருட, விறுவிறுவென்று அம்மாவிடம் சென்றான். அறைக்கதவை சார்த்தினான்.

''என்னம்மா விஷயம்? அவகிட்டே கேட்டா, உன்கிட்டே போய் கேளுங்கறா!''

''கடவுள் கண்ணைத் தொறந்துட்டான் ராம். நீ அப்பாவாகப் போறே!'' என்றாள் வாயெல்லாம் பல்லாக.

''எ... என்ன? அதெப்படி... எனக்குதான்...!'' அப்படியொரு அதிர்ச்சியை வாழ்நாளில் அவன் சந்தித்ததில்லை.

''எல்லாம் எனக்கும் தெரியும் ராம். ஜோதி ஏன் செத்தா? ஒண்ணும், ஒண்ணும் ரெண்டுன்னு இந்த சின்னக் கணக்கைக் கூட பெரியவ எனக்கு போடத் தெரியாதா என்ன? ஜோசியர் சொன்ன மாதிரி ஜோதி உனக்கொரு தடையா இருந்தா. அவ விலகினா... சரியாய்டுச்சு. பொய்யான பழியைத் தூக்கி எவ்வளவு நாளைக்குதான் சுமக்க முடியும்?''

'கடவுளே... அம்மா எல்லாத்தையும் தப்பாகவே புரிஞ்சிருக்காங்களே! உண்மை அப்படி இருக்கும்பட்சம் என் ஜோதிக்காக பழியை ஏற்றுக் கொள்ளத் தயாராயிருந்தேனே! என்ன கொடுமை இது? இப்பதான் படுக்கையிலிருந்து தேறி நடமாடுகிறார்கள். இதுதான் உண்மை என்று நிரூபித்தால் தாங்கி கொள்வார்களா? தரங்கிணியை வீட்டை விட்டே துரத்துவார்கள். இப்ப என்னப் பண்ணுவது?'

''எம்ப்பா... யோசிச்சுக்கிட்டே நிக்கறே? முதல்ல அவளை ஆஸ்பத்திரிக்கு கூட்டிட்டுப் போ. கர்ப்பம்தான்னு உறுதியானதும் அப்படியே கோவிலுக்குப் போய் ஒரு அர்ச்சனை பண்ணிட்டு வந்துடு. நான் ரொம்ப சந்தோஷமா இருக்கிறேன் ராம். இன்னைக்கு நைட்டுக்கு நான்தான் சமைக்கப் போகிறேன். கிளம்பு முதல்ல''

வேதநாயகிக்கு தலைகால் புரியவில்லை.

'உறுதிப்படுத்திக் கொள்வது நல்லது தானே?'

உடனே ஆஸ்பிடலுக்கு அழைத்துச் சென்றான். பரிசோதனைகள் அவள் கர்ப்பத்தை உறுதி செய்தன. அறுபது நாள் தாண்டிய கர்ப்பம்.

அதிர்ந்துப் போனான்.

அப்போதும் கூட ஜோதியின் மீதோ, அவள் இறப்பின் மீதோ அவனால் ஒரு துளிக்கூட சந்தேகப்பட முடியவில்லை. தான் அப்பாவாகும் தகுதியில்லாதவன் என்பதை மட்டும் தான் உறுதியாக நம்பினான்.

அவன் சந்தேகமெல்லாம் தரங்கிணி மீது தான் நிலைத்தது.

நல்லப்பெண் என்று நினைத்தது தவறோ? இப்போது தான் பல காப்பகங்கள் பற்றி தாறுமாறாய் பத்திரிகைகளிலும், தொலைக்காட்சிகளிலும் ஆதாரப்பூர்வமான செய்திகள் வருகின்றனவே...? அதுபோலவே தரங்கிணியையும்?

கடவுளே... நினைக்கவே தலையை சுற்றுகிறதே? என் குறையை மறைத்ததால் தானே, ஒழுக்கமற்றப் பெண் என் மனைவியாய் வாய்க்க நேரிட்டது? என்ன செய்யப்போகிறேன்?

தன் மீதே வெறுப்பு வந்தது. அம்மாவுக்காக செய்த கல்யாணம். மிக கஷ்டப்பட்டே தரங்கிணி மீது பிரியம் வளர்த்தான். ஆனால், இப்போது அவள் தரங்கெட்டவள் என்று அறிந்த பின், அவனால் சகித்துக் கொள்ள முடிய

வில்லை. அவள் முகம் பார்க்கவே அருவருப்பாய் இருந்தது.

வீட்டை விட்டு துரத்த ஒரு நிமிடம் ஆகாது. அம்மாவைக் கூட சமாளித்துக் கொள்ளலாம். ஆனால் இந்த சமூகத்தை? சும்மா விட்டு விடுமா? பொம்மைக்கு உயிர் கொடுத்து' நடமாட விடாமல் ஓயாதே!

'ராமோட ரெண்டாவது பொண்டாட்டி இப்ப அவன் கூட இல்லையாமே! விரட்டியடிச்சுட்டானாமே!'

'அட, விஷயம் தெரியாதா? அந்தப் பொண்ணு ஒரு மாதிரி. அனாதை ஆசிரமத்திலே கண்டிக்க சொந்தக்காரங்க இல்லாம வளர்ந்தப் பொண்ணு எப்படியிருக்கும்?'

'ராமுக்கு குழந்தையே பிறக்காதாம். அந்த வேதனையிலேதான் ஜோதி தற்கொலைப் பண்ணிக்கிட்டாளாம். இப்ப என்னடான்னா, ரெண்டாவதுப் பொண்டாட்டி கர்ப்பமா இருக்காளாம்! இது எப்படி? எந்த ஆம்பளைதான் பொறுத்துக்குவான்?'

ராம்மோகனுக்கு நினைக்க... நினைக்க பதறியது. பிரஷர் ஏறியது. சரியாக சாப்பிடுவதில்லை, தூங்குவதில்லை. வீட்டிற்கு வர நள்ளிரவானது.

தரங்கிணி குழம்பிப் போனாள்.

கடந்த பதினைந்து நாட்களாகவே கணவனிடம் தெரிந்த மாற்றம் அவள் இதயத்தை கூர் வாளால் அறுப்பதுப் போலிருந்தது.

'எந்த ஆண்மகனுமே தன் ஆண்மை நிரூபிக்கப்பட்டு ஒரு குழந்தைக்கு அப்பா ஆவது, வானத்தின் கூரையைத் தொட்டு விட்டதுப் போல் குதிப்பான். ஆனால், இவரோ எப்போதும் சதா யோசனையில் மூழ்கியபடி இருக்கிறார். எதையாவது கேட்கப் போனால் எரிந்து விழுகிறார். சம்பந்தமேயில்லாமல் முத்துராமலிங்கம் எப்படிப்பட்டவர் என்று ஐயாவைப் பற்றி கேட்கிறார்.' என்னாயிற்று இவருக்கு? காலையில் எழுந்திரித்தவுடன் குளித்து விட்டு ஓடுகிறார். சாப்பிடுவதே இல்லை. நள்ளிரவில் வீடு திரும்புகிறார். கேட்டால் சாப்பிட்டு விட்டேன், வேண்டாம் என்கிறார். ஏனிந்த மாற்றம்? ஒரு வார்த்தைக் கூட அன்பாக பேசமாட்டேன்கிறாரே. இந்த சமயத்தில் தானே பெண்கள் கணவ





னின் அன்பையும், அரவணைப்பையும் அதிகமாய் எதிர்பார்ப்பார்கள்?'

ஏங்கிப்போயிருந்தாள் தரங்கிணி. தவிர குமட்டலும், வாந்தியும் வேறு அவளை பாடாய்ப்படுத்த... வேதநாயகி மருமகளை தாங்கு, தாங்கென்று தாங்கினாள்.

ராம்மோகனுக்கு எரிச்சலாய் வந்தது. 'எவனுடைய கருவையோ சுமக்கிறாள். அம்மா என்னடாவென்றால் இவளுக்குப் போய் சேவை செய்கிறாள். இதற்கு ஒரு முடிவு கட்டியே ஆகவேண்டும். என்ன செய்யலாம்?' தீவிரமாய் யோசித்து ஒரு முடிவுக்கு வந்தான்.

அன்று அதிசயமாய் சீக்கிரமே வீடு

திரும்பிவிட்ட கணவனை ஆச்சர்யமாய் பார்த்தாள். உடனே அவனுக்குப் பிடித்த காலிபிளவர் பக்கோடாவையும், காபியையும் எடுத்துக் கொண்டு அறைக்குள் சென்றாள்.

''இந்தாங்க... சூடா இருக்கு. முதல்ல சாப்ட்ருங்க'' சிறு குழந்தை போல் கெஞ்சலும், கொஞ்சலுமாய் பேசியவளை பார்க்க ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது.

''அதிருக்கட்டும். உன்னிடம் ஒரு முக்கியமான விஷயம் பேச வேண்டும். இப்படி உட்கார்.'' எதிர் நாற்காலியை கைக்காட்டினான்.

''எவ்வளவு நாளாச்சு இப்படி பேசி. நான் கூட ஒரு முக்கியமான விஷயம் பேசணும்ங்க. உங்க அளவுக்கு நான் நிறமில்லே. குழந்தை என்னை மாதிரி பிறந்துடக்கூடாது. அப்படியே அச்சு அசலா உங்களை மாதிரி நிறமா, முகச்சாயலோட பிறக்கணும். அதனால எனக்கு குங்குமப்பூ வேணும். வாங்கித் தர்றீங்களா?'' என்றாள் ஆவலாய்.

அவ்வளவுதான் டென்ஷன் ஏறிவிட்டது.

''வில் யூ ஸ்டாப் இட்!'' கத்தினான்.

அரண்டுப் போனாள்.

''எ... என்னங்க?''

''ச்சே!'' கண்மூடி தன்னை நிலைப்படுத்தினான்.

''நாம வர்ற சனிக்கிழமை ஹாஸ்பிடல் போறோம்.''

''ஆமாம். மன்த்லி செக்கப்புக்கு வரச் சொன்னாங்க.''

''நான் சொல்றதை மட்டும் கேக்கறியா?''

''.........?''

''இ... இந்த குழந்தைய அபார்ஷன் பண்ணிடு!''

''எ... என்ன?'' முகம் சுருங்க, தூக்கி வாரிப்போடக் கேட்டாள்.

''எனக்கு இந்தக் குழந்தை வேண்டாம்!''

''அதான் ஏன்?'' துடித்துப் போனாள்.

''அ... அது... வந்து!''

''.........?!''

''எனக்கு ஜோதிதான் எல்லாம். இந்தக் குழந்தை இல்லாமதான் அவ என்னை விட்டுப் போனா.''

''அதுக்காக?''

''அவளுக்கு பிறக்காத குழந்தை உனக்கு பிறக்கக் கூடாது.''

''இதென்ன அநியாயம்?''

''நீ எப்படி வேணும்னாலும் நினைச்சுக்க. அதைப்பத்தி கவலையில்லே. எனக்கு இந்தக் குழந்தை வேணாம். இந்த வாழ்க்கை தொடரணும்னா, நான் சொன்னதை செய்... இல்லேன்னா...''

''.......?!''

''இந்த விஷயம் அம்மாவுக்கு தெரியக்கூடாது. சனிக்கிழமை ரெடியாயிரு!'' தீர்மானமாய் சொல்லி விட்டு வெளியேற...

''ஐயோ... கடவுளே... என் குழந்தை!'' என்றபடி வயிற்றைப் பிடித்துக் கொண்டு கதறியழ ஆரம்பித்தாள் தாங்கிணி.

## 16

**நீ**ண்ட வரிசையில் நின்று மின் கட்டணத்தை செலுத்திய பார்வதி வியர்த்து வழிந்த முகத்தை முந்தானையால் துடைத்துக் கொண்டாள். இத்தனை நாட்களாய் இந்த வேலையை மகன் கோவிந்த் தான் பார்த்துக் கொண்டான். இரண்டு மாதமாய் அதையும் இவள் தலையில் கட்டி விட்டார்கள்.

முக்கியமாய் இரண்டு மாத்திரை வாங்க வேண்டி இருந்தது.

எதிரில் தென்பட்ட மெடிக்கல் ஷாப்பிற்கு சென்றாள். அங்கு கடைக்காரன் ஒரு இளம் பெண்ணிடம் கோபமாய் பேசிக் கொண்டிருந்தான்.

''இதோ பாரும்மா... டாக்டரோட ப்ரிஸ்க்ரிப்ஷன் இல்லாம எந்த மாத்திரையும் தரமாட்டேன். மரியாதையா இடத்தை காலிப்பண்ணு. தொலைஞ்சு போச்சுன்னா... வேற ப்ரிஸ்க்ரிப்ஷன் வாங்கிட்டு வா!''

''சார்... ரொம்ப அவசியமா...''

''இதோ பார்... என்ன விளையாடறியா? மருந்து சீட்டு இல்லாம காய்ச்சலுக்கு மாத்திரை தர்றதே பெரிய ரிஸ்க். இதுல உனக்கு இருபது தூக்க மாத்திரை வேணும்னு கேட்டா... தூக்கி குடுத்துடுவாங்களா? என் வியாபாரத்தை கெடுக்காம கிளம்பு. இல்லேன்னா போலீஸைக் கூப்பிடுவேன்.''

அந்த பெண் தொங்கிய முகத்துடன் திரும்பி நடக்க... பார்வதி புருவம் உயர்த்தினாள்.

'இவளை எங்கோப் பார்த்திருக்கேனே... எங்கே? முகம் ரொம்ப வாட்டமாயிருக்கு. தூக்க மாத்திரை கேட்கிறாள் என்றால்?'



ஏதோ விபரீதம் என்று புரிய... மெல்ல அவளைப் பின் தொடர்ந்தாள் பார்வதி.

ஆளரவமற்ற ஒரு பூங்காவில் ஒதுக்குப்புறமாய் இருந்த மரத்தடியில் அமர்ந்து, முழங்காலில் முகத்தைப் புதைத்து அழுதாள்.

பார்வதிக்கு மனதைப் பிசைய அருகில் சென்றமர்ந்து தோளைத் தொட்டாள்.

திடுக்கிட்டு நீர் திரண்ட விழிகளுடன் பார்த்தாள்.

''யாரும்மா நீ? ஏன் அழறே?''

''ஒ... ஒண்ணுமில்லே...!''

''நான் உன்னை கவனிச்சிட்டுதாம்மா தொடர்ந்து வந்தேன். மருந்துக் கடையிலே தூக்க மாத்திரைக் கேட்டு வீம்புப் பண்ணியே... அப்பவிருந்தே உன்னை கவனிச்சேன். இதோ, இங்கே வந்து அழுதுட்டிருக்கே. உன்னை மாதிரிப் பொண்ணுங்க இந்த இடங்களுக்கு தனியே வரக்கூடாதும்மா. பாதுகாப்பு இல்லே.''

''எல்லாம் முடியப்போகுது... பிறகெதுக்கு எனக்கு பாதுகாப்பு?'' என்றாள் விரக்தி மேலோங்க.

''இந்த சின்ன வயசுல உனக்கென்ன கஷ்டம்? என்னை உன் அம்மாவா நினைச்சுக்க. உடன் வயசிலே ரெண்டு பொண்ணுங்களை வாரிக் கொடுத்த பாவிம்மா நான். உன்னை பார்க்கவே பகீர்னு இருக்கு. என்ன விஷயம் இந்த அம்மாகிட்டே சொல்லு.''

தரங்கிணி நெகிழ்ச்சியுடன் அவளையே பார்த்தவள், சட்டென அவள் கையைப் பற்றிக் கொண்டாள்.

''சின்ன வயசிலேயே அம்மாவை இழந்தவம்மா நான்! உங்களைப் பார்க்கிறப்ப எங்க அம்மாவையே நேர்ல பார்க்கிற மாதிரி இருக்கு. அடுத்தடுத்து ஒவ்வொருத்தரையா இழந்து கடந்த எட்டு வருஷமா மகளிர் காப்பகத்துல இருந்தேன். கடவுள் என்னை மட்டும் ரொம்ப ஆசிர்வதிச்சமாதிரி ஒரு அருமையான மனிதர் தேடி வந்து என்னை கல்யாணம் பண்ணிக்கிட்டார். மகளைப் போல கவனிச்சுக்கிட்ட மாமியார். இதோ, இப்ப வயித்துல கரு!''

''அப்புறம் என்னம்மா குறை உனக்கு?''

''என் புருஷனுக்கு நான் ரெண்டாவது மனைவி. முதல் மனைவி உயிரோட இல்லை. அவங்க மேலே அவர் உயிரையே வச்சிருக்கார். எனக்கு தினமும் பூ வாங்கித் தர்ற மாதிரி, அவங்க போட்டோவுக்கும் பூ வாங்கிப் போடுவார். நல்ல விஷயம். ரெண்டு பேரையும் சரிசமமா நடத்தறார். ஆனா, அதுக்காக அவங்களால பெத்துக்க முடியாத குழந்தையை நானும் பெத்துக்கக்கூடாது, கர்ப்பத்தை கலைச்சிடுன்னா என்னம்மா அர்த்தம்? இது நியாயமா? என் வயித்துக் குழந்தையை அழிச்சிட்டு நான் மட்டும் எதுக்கும்மா உயிரோட இருக்கணும்? அந்த ஜோதியக்காதான் என் குழந்தைய காப்பாத்தணும்'' என்றபடி மறுபடி அழ ஆரம்பித்தாள்.

பூமியில் எறியப்பட்ட பந்தாய் பார்வதியின் உடல் எம்பி குதித்தது.

''ஜோ... ஜோதியா... யாரது?''

''அவரோட முதல் சம்சாரம்!''

''உ... உன் புருஷனோடப் பேர் என்ன?''

''ராம்மோகன்!''

இப்போது நினைவுக்கு வந்துவிட்டது. 'அன்று ராமின் பக்கத்தில் அமர்ந்து காரில் சென்றப் பெண்ணல்லவா இவள்? கடவுளே... இதென்ன சோதனை? பாவம் இவள். என் பெண்களுக்காவது சொந்தம் என்று சொல்லிக் கொள்ள நானும், கோவிந்தும் இருந்தோம். இவளுக்கு? என் மீதும், ஜோதி மீதும் எவ்வளவு நம்பிக்கை இருந்தால்... இன்னும் எங்களை சந்தேகப்படாமல்... இவளை... இவள் கர்ப்பத்தை... ஒ... இப்போது புரிகிறது. இந்த பெண்ணை சந்தேகப்பட்டுதான் கர்ப்பத்தை கலைக்கச் சொல்லியிருக்கிறார். பாவி நான்! ஒரே ஒரு பொய் சொல்லி என் ஜோதியை பறி கொடுத்தேன். இப்போது அடுத்த பலி இவளா? வேண்டாம்... இதை இப்படியே தொடர விடக்கூடாது. இவளும் என் பெண் மாதிரிதான். இவள் வாழ்க்கையாவது காப்பாற்றப்பட வேண்டும். நான் வாழ்ந்து முடித்தவள். மரியாதையையும், கவுரவத்தையும் எதிர்பார்த்து வாயை மூடிக் கொண்டிருந்தால் உயிர்ப்பலி தொடரும். ஜோதி, இந்தப் பெண், வயிற்று சிசு என்று! என்ன ஆனாலும் சரி... இதற்கு ஒரு முடிவுக் கட்டியே ஆகவேண்டும்.' தீர்மானமான முடிவிற்கு வந்தாள்.

''அம்மா... அம்மா!'' தரங்கிணி அவளைப் பிடித்து உலுக்கினாள்.

''அ... எ... என்ன?''

''என்னாச்சு உங்களுக்கு?''

''ஒண்ணுமில்லேம்மா. நீ தைரியமா வீட்டுக்கு போ. அசட்டுத்தனமா எந்த முடிவுக்கும் போய்டாதே. உன் ஜோதியக்கா கண்டிப்பா உன்னையும், உன் குழந்தையையும் காப்பாத்துவா... நீ கிளம்பு!''

''எப்படி சொல்றீங்க?''

''அது அப்படித்தான். நான் சொன்னது நடக்கும். நாளை வரை பார். இல்லேன்னா தாராளமா நீ எந்த முடிவுக்கு வேணாலும் போ!''

தரங்கிணி அவளை ஆச்சர்யமாய் பார்த்

தாள்.

''புறப்படும்மா. ரொம்ப நேரம் இங்கே இருக்க வேண்டாம். சாயந்தரம் உன் புருஷன் எப்படி நடத்தப்போறார் பாரு!''

''நீ... நீங்க யார்?''

''உங்கம்மா!'' என்றாள்.

தரங்கிணி அவளையே திரும்பித் திரும்பிப் பார்த்தபடி சென்றாள்.

ராம்மோகன் ஆக்ரோஷமாய் பார்வதியைப் பார்த்தான்.

''சீச்சீ... நீயெல்லாம் ஒரு பொம்பளையா? எப்படி... எப்படி மனசு வந்தது இப்படியொரு பொய்யைச் சொல்ல? ஒரு நிமிஷம் நினைச்சிப் பார்த்தியா? நான் எப்படித் துடிச்சிப் போவேன்னு?''

பார்வதி அவனுக்கு போன் பண்ணி வீட்டிற்கு வரவழைத்து உண்மையை சொன்ன நேரத்தில் வெளியில் சென்றிருந்த கோவிந்தும், சாந்தியும் வந்துவிட தர்மசங்கடமாகிவிட்டது பார்வதிக்கு.

''மா... மாப்பிள்ளே... தெரியாமப் பண்ணிட்டேன். என் பொண்ணோட வாழ்க்கையை காப்பாத்ததான்...''

''நிறுத்து... இன்னும் என்ன மாப்பிள்ளே? காதலிச்சி கல்யாணம் பண்ணிக்கிட்டவனுக்கு பொண்டாட்டியை காப்பாத்த மனசில்லாமப் போய்டுமா? குழந்தைக்காக என் ஜோதியை விரட்டியடிச்சிடுவேனா? அநியாயமா உன்னால என் ஜோதியை இழந்தேனே... சீச்சீ... உன் முகத்தைப் பார்க்கவே அருவருப்பாயிருக்கு. கொலைகாரி நீ!''

பார்வதி உடைந்துப் போய் அழுதாள்.

''இப்ப அழுது என்ன பிரயோஜனம்? கோவிந்த்... உங்கம்மாவால நான் நிறைய துன்பங்களை அனுபவிச்சிட்டேன். இப்ப என் குழந்தையை... நானே... மைகாட் நினைச்சாலே பதறுது. இனியாவது நல்ல புத்தியை எடுத்து சொல்லி உங்கம்மாவை திருத்தற வழியைப் பாருங்க'' என்றவன் புழுவைப் போல அவர்களைப் பார்த்துவிட்டு வீட்டை விட்டு வெளியேறினான்.

அவன் சென்ற அடுத்த கணமே கோவிந்த் பாய்ந்து வந்து பார்வதியின் கன்னத்தில் அறைந்தான்.

பார்வதி இதை எதிர்பார்க்கவில்லை. நிலைகுலைந்து விழுந்தாள்.

''நீயெல்லாம் என்ன ஜென்மம்? பேசிட்டுப் போறான் பார்த்தியா? நாண்டுக்கிட்டு சாகலாம் போலிருக்கு. சோறு போடத்தான் முடியும். நல்ல புத்தியைக் குடுன்னு கடவுள்கிட்டே வேண்டிக்கதான் முடியும். வேறென்ன செய்யமுடியும்? அநியாயமா என் தங்கச்சிகளோட வாழ்க்கையை நாசம் பண்ணிட்டியே''

ஒருவேளை சாப்பாடு போடக்கூட யோசித்த கோவிந்த், தாமரை இறந்ததற்கு அவனும் ஒரு வகையில் காரணம் என்பதை மறந்துப் பேசினான்.

''உன்னையெல்லாம் பெத்தவளாச்சேன்னு வீட்லே வச்சு காப்பாத்திட்டிருக்கேனே... என்னை செருப்பால அடிக்கணும். இப்படியே விட்டா என்கிட்டேர்ந்து என் பொண்டாட்டியைக் கூட பிரிச்சு சாகறதுக்கு வழித் தேடுவே. போதும்மா நான் பட்டது... கிளம்பு!''

பார்வதி அதிர்ச்சியுடன் மகனை ஏறிட்டாள்.

''ஏன் என்னை மட்டுமா பெத்தே? மாறன் இல்லே? அவன்கிட்டே போ... உன்னை அம்மான்னு சொல்லிக்கவே அசிங்கமாயிருக்கு. போ... தயவு செய்து போய்டு. உண்மையிலேயே என் மேலே கொஞ்சமாவது ஈவிரக்கம் இருந்தா... நாங்க நல்லாயிருக்கணும்னு நினைச்சா... போய்டு... ப்ளீஸ்!'' கையெடுத்து கும்பிட்டான் கோவிந்த்.

சாந்தியோ கணவனை ஆச்சர்யமாய் பார்த்தாள்.

'பரவாயில்லையே... நான் சொல்லிக் கொடுக்காமலேயே இவ்ளோ பேசறாரே. ம்... நல்ல முன்னேற்றம்!'

பார்வதி மனசுக்குள் பொடி பொடியாய் உதிர்ந்துப் போனாள்.

கஷ்டப்பட்டு சுவற்றைப் பிடித்து எழுந்தவள், மனம் முழுக்க பாரத்துடன் வீட்டை விட்டு வெளியேறினாள்.

நடந்தாள்... நடந்தாள்... நடந்துக் கொண்டேயிருந்தாள்.

பிள்ளைகளை கஷ்டப்பட்டு அனலில் வெந்து சம்பாதித்து காப்பாற்றி கரை சேர்த்ததெல்லாம் நினைவிற்கு வந்தது.

'என்ன தவறு செய்து விட்டேன்? மகளின் வாழ்க்கை கண்ணெதிரே நாசமாக போவதை எந்தத் தாயால்தான் பார்த்துக் கொண்டிருக்க முடியும்? ஆனால், இப்படி எல்லாம் நடக்கும் என்று நினைத்தேனா? எனக்கு மட்டும் ஏன் தொடர் வேதனைகள்? எந்த உறவும் எனக்கு சொந்தமில்லையா? இதுதான் சமயம் என்று பெற்ற மகன் வீட்டை விட்டே விரட்டி விட்டான். இனி, எனக்கு யார் இருக்கிறார்கள்? நாதியற்று சாவேனா? என் பிணத்தை காக்கையும், நாயும் தின்னுமா? அப்படியா பாவத்தை செய்து விட்டேன்?'

சாலையோரம் அமர்ந்து கண்ணீர் விட்டவளைப் பார்த்து ஒரு கார் தன் இயக்கத்தை நிறுத்தியது.

அதிலிருந்து இறங்கினார் செபாஸ்டியன். கொல்கத்தாவில் உள்ள அன்னை தெரசா சேவை இல்ல நிர்வாகி.

''யாரும்மா... நீங்க... ஏன் அழறீங்க?''

''நீங்க?''

தன்னைப்பற்றிக் கூறி, தான் ஒரு வேலை விஷயமாக வந்ததாகக் கூறினார். சட்டென ஒரு எண்ணம் தோன்ற, ''நான் ஒரு அனாதையப்பா!'' என்றாள்.

''இனி அப்படி சொல்லக்கூடாது. உங்க பிள்ளையா நான் இருக்கிறேன். உங்களை மாதிரி ஆட்களுக்கென்றே ஒரு பெரிய குடும்பம் அங்கிருக்கு. என் கூட வாங்கம்மா!''

பார்வதி முதன் முறையாய் காரில் சவாரி செய்தாள்.

நான்கு குழந்தைகளை வலிக்க, வலிக்க பெற்றவள், இரண்டு பிள்ளைகள் வலுவாய் உயிரோடிருந்தும் அனாதையாகி விட்டாள்.

ராம்மோகன் காரை நிறுத்தி விட்டு வேகமாய் வீட்டிற்குள் சென்றான்.

''தரங்கிணி எங்கேம்மா?'' என்றான்.

''மொட்டை மாடியிலே இருக்கா!'' என்றாள் வேதநாயகி.

இரண்டிரண்டு படிகளாய் தாவி ஏறினான்.

மொட்டை மாடியில் கொளுத்தும் வெயிலில் ஒரு மூலையில் அமர்ந்திருந்தாள் தரங்கிணி.

இவனைப் பார்த்ததும் மருண்டாள்.

நெருங்கியவன், அவள் கைப்பற்றி எழுப்பி மெல்ல தன்மேல் சாய்த்துக் கொண்டான்.

ஒரு கரம் அவள் வயிற்றை இதமாய் தடவியது. 'என்னை மன்னிச்சிடு செல்லம். அப்பாவே உன்னை அழிக்க நினைச்சிட்டேன். வெளியில் வந்து உன் பிஞ்சுக்காலால் என் நெஞ்சில் உதைத்து விடு!'

கணவனின் திடீர் அன்பில் நம்பமுடியாத அதிர்ச்சியோடு முகம் விலக்கி அவனைப் பார்த்தாள்.

''மன்னிச்சிடு தரங்கிணி... ஏதோ புத்திக் கெட்டுப்போய்... சரி... அதெல்லாம் மறந்து விடு. இப்போது சொல்... நம்ம குழந்தைக்கு என்ன பெயர் வைக்கலாம்?''

இன்னமும் நம்ப முடியாமல் நெற்றி மேலேற...

ராம்மோகன் அவளுக்கு நம்பிக்கையூட்டும் விதமாக அவள் இதழ்களை கவ்வினான்.

கட்டுங்கடங்கா மகிழ்ச்சியில் திளைத்த தரங்கிணி, மனப்பூர்வமாய் பார்வதிக்கு நன்றி சொன்னாள்.

'அம்மா... எங்கேயிருந்தாலும் நீங்க நல்லாயிருக்கணும். உங்க வாக்கு பலிச்சிடுச்சு!'

இனி... பார்வதி நன்றாகவே இருப்பாள். வாழ்க்கையில் ஏகப்பட்ட அடிப்பட்டிருந்தாலும்... தரங்கிணியின் வாழ்க்கையை சீர்படுத்தி விட்டதில் ஆனந்தம் இருக்கவே செய்தது பார்வதிக்கு!

**நிறைந்தது.**

## பயர் மசாஜ்...

'அக்கு பஞ்சர்' சிகிச்சை முறையை கண்டுபிடித்த சீனாவில் இப்போது 'தீப்பொறி மசாஜ்' முறையை கண்டுபிடித்துள்ளனர். மசாஜ் செய்து கொள்பவர் உடம்பில் பாதுகாப்பிற்காக ஒரு துணியைப் போர்த்தி விட்டு, அதன் மேல் தீ கொளுத்திய துணியைப் போட்டு எடுக்கிறார்கள். இதிலுள்ள வெப்பம் உடலுக்குள் செல்வதால், அசதிகளை போக்கி உடலில் புத்துணர்ச்சியை உண்டாக்குகிறதாம்.



- வச்சலா.